16-30 செப்.'91 விலை ரூ 2.50
www.padippakam.com

ரஷ்ய
முதலாளித்து
முட்டாள்களே!
சிலைகளைத் தகர்க்கலாம்
சித்தாந்தத்தை என்ன செய்வீ

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு.



ஈழ ஆதரவு
தேசத் துரோகமா?

## ஈழ - இந்தியத் தமிழர்கள் மீது பார்ப்பன பாசிச ஜெயா தாக்குதல்

படிப்பகம்

www.padippakam.com

கடந்த 2.9.91 அன்று மாணவர்களுக்கு வானொலி, தொலைக்காட்சி மூலம் ஜெயலலிதா உரையாற்றியதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் பல பள்ளி - கல்லூரிகளின் மாணவ, மாணவிகள் கொதிப்படைந்துள்ளனர். உபதேசம் என்கிற பெயரில் மாணவர் மீது அவதூறு பேசி மிரட்டினார். போக்குவரத்துத் தொழிலாளர்களை மாணவர்களுக்கு எதிராகத் தூண்டி மோதவிடவும் முயன்றார் ஜெயலலிதா என்பதுதான் உண்மை. தமது கல்லூரிக்கு 10 ஆண்டுகளாக சாலை வசதி கோரும் திண்டிவனம் மாணவர்கள் அமைதி யான சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட அவர்கள் மீது போலீசை ஏவி வெறித்தாக் குதல் நடத்தியதோடு அதையே முகாந்திரமாக வைத்து மேற்கண்டவாறு மிரட்டியும் உள்ளார். தமிழக மக்கள் அனைவர் மீதும் ஜெயலலிதா பரப்பிவரும் பார்ப்பன - பாசிச தாக்குதலை மாணவர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். தகுந்த பதிலடி தருவார்கள். அதற்கு உதாரணமாக புதிய ஜனநாயகத்துக்கு வந்த ஒரு மாணவரின் கடிதத்தை இங்கே பிரசுரிக்கிறோம்.



# ஜெயாவின் திமிர்ப்பேச்சு மாணவர்களின் பதிலடி

எனது மாணவ நண்பர்கள் இருவர் அ.தி.மு.க.காரர்கள். ஜெயலலிதா வானொலியிலும் - தொலைக்காட்சியிலும் மாணவர்களுக்கு உரையாற்றுவதற்கு இரு நாட்களுக்கு முன்பே, "2.9.91 அன்று நம்முடைய மாணவர் சமுதாயத்துக்கு கருணாநிதியைக் காட்டிலும் புரட்சித் தலைவி ஏராளமான சலுகைகளை வாரி வழங்குவார்" என்று புகழ்பாடிக் கொண்டிருந்தனர்.

ஆனால் ஜெயலலிதா உரையைக் கேட்ட மறுநாள் (3.9.91) காலையிலேயே, "மாணவர்களை மிரட்டிய ஜெயலலிதாவை நாம் சும்மா விடுவதா?" என்று கேட்டு மாணவர்களை மறியலுக்குத் தயார் செய்தார்கள், அவர்கள் இருவரும். அதைப் பார்த்த நானும் எனது வேறு நண்பர்களும், "கவர்ச்சியில் மயங்கிக் கோழையாக இருந்த மாணவர்களைப் போராடும் வீரர்களாக மாற்றிய ஜெயலலிதாவுக்கு உண்மையிலேயே நம்முடைய மாணவர் சமுதாயம் நன்றிக் கடன்பட்டுள்ளது" என்று பேசிக் கொண்டோம்.

தமிழகம் முழுவதும் உள்ள எண்ணற்ற பள்ளி - கல்லூரிகளில் கரும்பலகையின்றி, உட்கார இடமின்றி, கூரையின்றி, தேவையான அளவு கட்டிட வசதி - விடுதி வசதியில்லாமல் ஆடு - மாடுகளை அடைக்கும் தொழுவங்களைப் போல கல்வி நிலையங்களை வைத்துக் கொண்டுள்ள அரசு ஒருபுறம். ஒரு சில கொட்டகைகளை மட்டுமே போட்டுக் கொண்டு ஆயிரக்கணக்கான மாணவர்களைச் சேர்த்து நன்கொடை என்ற பெயரில் மாணவர்களை அட்டையாக உறிஞ்சிக் கொண்டிருக்கும் கல்வி வியாபாரிகள் மறுபுறம்.

இவர்களுக்கு மத்தியில் அல்லலுறும் ஆயிரக்கணக்கான மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வக்கற்ற ஜெயலலிதா, மாணவர்கள் மீது அபாண்டமான பழியைச் சுமத்தி நம்மை மிரட்டுவதில் ராஜீவையும் மிஞ்சும் அளவுக்கு பாசிச நாக்கு நீண்டுவிட்டதே! இதற்கு மாணவர்களாகிய நமது பதில் என்னவென்று சிலரைக் கேட்டோம்.

எங்கள் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவர் மணி, "வீட்டிலும் கல்லூரியிலும் நாம்படும் அவலத்தை அகற்றத் தெரியாத ஜெயலலிதா அவர்கள் தான் 15 நாட்களுக்கு முன்பு காஞ்சி மடாதிபதிகளும் பரதேசி பண்டாரங்களும் செய்யக் கூடிய கோவில் கட்டும் பணிக்கு நிதி சேர்க்கும் கட்டாய வேலை துவங்கினார். இப்படி நாட்டில் எந்த முதல்வராவது அறக்கட்டளை நிறுவிய அநியாயம் உண்டா?. நமக்கு அறிவுரை கூறும் இந்த அம்மையாருக்கு உண்மையிலே நம் மீது அக்கறை இருந்தால் நமக்காக அல்லவா காசு, பணம் சேர்க்க வேண்டும்? முதலில் நாம் அனைவரும் இந்த அம்மாவை காஞ்சி மடத்திற்கு சங்கராச்சாரிக்குத் துணையாக அனுப்பிவிட்டு நமக்குத் தேவையான ஒரு நல்ல முதல்வரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று கூறினார்.

இன்னொரு மாணவரான கலைச்செல்வனை அணுகிய போது "மாணவர்களை மிரட்டிய பர்மா, வங்கதேசம், தென் கொரியா போன்ற நாடுகளின் அரசுகள் பட்ட நஷ்டம் கொஞ்ச நஞ்சமா? இதுபோல மாணவர் பட்டாளத்தை அடக்க நினைத்தவர்கள் எல்லாம் அடங்கிப்போன கதை இந்த அம்மாவுக்குத் தெரியவில்லை போல. அந்த நாடுகளில் நடந்ததைப்போல நாமும் இந்த அரசுக்கு நமக்கே உரித்தான பாணியில் பதில் சொல்லியே ஆக வேண்டும்" என்று வெடித்தார்.

அப்புறம் ஒரு மாணவர் குணா, "ஒவ்வொரு முறை ஓட்டு வாங்க வரும் போது மட்டும் அதைச் செய்வேன், இதைச் செய்வேன் (வானத்தை வில்லாக்குவேன்; மணலைக் கயிறாகத் திரிப்பேன்) என்று கூறும் இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு நம்மைக் கண்டு கொள்ளாமல் இருப்பதை விட நமக்குக் கடிவாளம் போட நினைக்கிறார்களே" என்று ஆத்திரப்பட்டார்.

இதுதான் தமிழகத்திலுள்ள பல பள்ளி - கல்லூரி மாணவர்களின் கருத்து என்று தமிழகம் முழுவதும் ஜெயலலிதாவை எதிர்த்து மாணவர்கள் தன்னெழுச்சியான போராட்டங்களைப் பார்க்கும்போது புலப்படுகிறது.

மாணவர்களை மிரட்டி ஒடுக்குவது வெள்ளையன் காலத்தில் இருந்தே தொடரும் ஒரு அவலம். ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள்தாம் அரசியல் ஆதாயத்துக்காக மாணவர்களைப் பிளவுப்படுத்திப் பயன்படுத்திக் கொள்கின்றன. கருணாநிதி, எம்.ஜி.ஆர். முதல் ஜெயலலிதா வரை மாணவர்களுடைய பிரச்சினைகளை யாரும் தீர்க்க முயன்றதோ, படிப்புக்கு உத்திரவாதம் அளிப்பதோ இல்லை. மிரட்டுவதில்தான் அக்கறை. ஆர்வம் காட்டுகிறார்கள்.

இப்பொழுது மாணவர்களை மிரட்டும் ஜெயலலிதா, அவர் கூறிய ஜனநாயக முறையில் ஊர்வலம் போவதைக் கூட அனுமதிக்காது. அமைதியான போராட்டங்கள் நடத்தி னாலும் காவல்துறையை ஏவி ஒடுக்குகி றார். ஆனால் இந்திரா, ராஜீவ், எம்.ஜி.ஆர். சாவின் போதும், ஜெயலலிதா எதிர்க்கட்சி யாக இருந்த போதும் (எஸ்.டி.எஸ். கைதின் போதும்) இந்திரா காங்கிரசு - அ.தி.மு.க ரவுடிகள் அடித்து நொறுக்கிய பேருந்து ளும் சூறையாடப்பட்ட சொத்துக்களும் பல கோடி ரூபாய் மதிப்பிருக்கும்.

இன்று ஊருக்கு உபதேசம் செய்யு இந்த யோக்கிய சிகாமணி ஜெயலலித அன்று எங்கே போனார்? இப்போது புரி றதா ஆட்சியாளரின் இரட்டை வேடம்.

ஆகவே தமிழகமெங்கும் உள்ள பள் - கல்லூரிகளில் பயிலும் லட்சக் கணக்கா மாணவச் சகோதரர்களே!

ஓட்டுக் கட்சிகளின் தலைமையிலு தன்னெழுச்சியாகவும், அமைப்புகள் இ லாமலும் போராட்டங்கள் நடத்திப் ப னில்லை. புரட்சிகர மாணவர் - இளை முன்னணியில் அணிதிரண்டு ஜெயலி வின் ஆணவ ஆட்சிக்கும் புதிய ஜனந கப் புரட்சிக்கும் பாடுபடுவோம்.

இவ

ஏ.வி.அண்ணாது
காதர் முகைதீன் கல்லு
அதிராம்பட்டின

படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

**21**

16-30 செப்டம்பர் '91

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராசு
ஆசிரியர், புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# வயிற்றை நிரப்பிக்கொண்டு அடிமையாய் வாழ்வதா? உரிமை - மானத்துக்குப் போராடி தியாகியாய் மடிவதா?

★ மராட்டிய மாநிலம் - பார்பானி மாவட்டம், பிம்பிரி - தேஷ்முக் கிராமத்தில் அம்பாதாஸ் சவானே என்கிற தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த போலீசுக்காரர் மழைக்காக ஒரு சிறுகோவிலில் ஒதுங்கினார். அதற்காக அவர் மேல் சாதி வெறியர்களால் கல்லாலேயே அடித்துக் கொல்லப் பட்டிருக்கிறார்.

★ அதே மாநிலம், அமராவதி மாவட்டம் தோரான்வாடி என்ற ஆதிவாசி கிராமத்தில், ஒரு நிலப்பிரச்சினையைச் சாக்கு வைத்துப் புகுந்தது போலீசுக் கும்பல். மாமனார், மாமியாரை அடித்து விரட்டிவிட்டு, கைக்குழந்தையைப் பிடுங்கி வீசிவிட்டு 20 வயது ஆதிவாசிப் பெண் முன்னிபாயை கத்தகும்பா, சிக்கல்தாரா ஆகிய போலீசு நிலையங்களுக்கு இழுத்துக்கொண்டு போய் கும்பல் கும்பலாக கற்பழித்தனர். அதோடு கொஞ்சநஞ்சமிருந்து தானியத்தையும் பிடுங்கிக் கொண்டு பல பொய் வழக்குகளும் போட்டனர். முன்னிபாய் குடும்பத்து நிலத்தைப் பறிப்பதற்காக ஒரு பணக்கார விவசாயி ஏவிவிட்டதால் போலீசு எடுத்த நடவடிக்கை இவை.

★ ஆந்திர மாநிலம், கல்கொண்டா மாவட்டம், சிலகுர்த்தி கிராமத்தில் ''கொல்லா'' என்கிற ஒடுக்கப்பட்ட இடையர் சாதியைச் சேர்ந்த தாயான 35 வயது முத்தம்மா பட்டப் பகலில் பலர் முன்னிலையில் ரெட்டி நிலப் பிரபுக்களால் கற்பழிக்கப்பட்டார். அவளை நிர்வாணப்படுத்தி, ரவிக்கையினால் கைகளைப் பின்புறம் கட்டி, வாயில் சாராயத்தை ஊற்றி மயிரைப் பிடித்து தெருத்தெருவாக இழுத்துப் போனான் ஒரு ரெட்டி நிலப்பிரபு. இன்னொருவன் பெரிய கம்பினால் அடித்துக்கொண்டே வந்து, கடைசியில் அப்பெண்ணின் கையைக் கோடாரியால் வெட்டினான். அவளது மானத்தைக் காக்கத் தனது துண்டைப் போர்த்தப் போன ''கொல்லா'' சாதி இளைஞன் தாக்கப்பட்டான். வாரச் சந்தையில் குழுமியிருந்த பெருந்திரளான மக்கள் அதிர்சியினால் பிரமை தட்டிப் போனார்கள். அவமானம் தாங்கமுடியாமல் நாகர்ஜுனா கால்வாயில் விழுந்து தற்கொலைக்கு முயன்ற முத்தம்மாவை சாதிக்காரர்கள் காப்பாற்றினர். இத்தனைக்கும் காரணம் ஏற்கனவே மணமாகி ''வாழா வெட்டி''யாகத் திரும்பிய ரெட்டி வீட்டுப் பெண், ஒரு ''கொல்லா'' சாதிப் பையனுடன் ஓடிப்போய் விட்டதற்கு அந்த வீட்டில் வேலை செய்து வந்த முத்தம்மா உடந்தையாக இருந்ததாக ரெட்டிகள் சந்தேகித்தனர்.

★ சிலகுர்த்தி கிராமத்துக் கொடுமைக்குப் பிறகு அதே போல, அதே மாநிலத்தின் கிழக்குக் கோதாவரி மாவட்டம் யெல்லேஸ்வரம் கிராமத்தில் ஒரு பெண் நிர்வாணமாக்கப்பட்டு ஊர்வலம் நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து நெல்லூர் மாவட்டம் அதிலவரிப் பள்ளி கிராமத்தில் லீலா வத்தம்மா என்ற பெண்ணை நிர்வாணப்படுத்தி ஊர்வலம் நடத்தி இழிவுபடுத்தி இருக்கிறார்கள் மேல் சாதி நிலப்பிரபுக்கள்.

★ அதே ஆந்திர - குண்டூர் மாவட்டம், (தெனாலி) சுண்டூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினர் 21 பேர் ரெட்டி நிலப்பிரப்புகளால் கொடூரமாகக் கொல்லப்பட்டு ஒரு சில நாட்களுக்குள்ளாகவே இவை நடந்துள்ளன. சிறிது கல்வியறிவும், வேலை வாய்ப்பும் பெற்று, பொருளாதாரத்தில் முன்னேறிய தாழ்த்தப்பட்ட மக்கள் இனிமேலும் கொத்தடிமைகளாகவும் கீழ்த்தரக் குடிமக்களாகவும் வாழ மறுத்துத் தலை நிமிர்த்தியது தான் சுண்டூர் படுகொலைகளுக்குக் காரணம்.

— இவை கடந்த ஆகஸ்டு இரண்டாவது மூன்றாவது வாரங்களில், ஆந்திரா, மராட்டிய மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட - ஆதிவாசி மக்கள், ஒடுக்கப்பட்டவர்கள், பெண்கள் ஆகியோருக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூழியங்கள். இன்னும் பத்திரிக்கைகளில் வெளிவராத நாடு முழுவதும் நடக்கும் அட்டூழியங்களோ கணக்கில் அடங்காதவை. 1981-86 ஆகிய ஐந்தாண்டுகளில் மட்டும் 4022 தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்கள் கொல்லப்பட்டதாகவும் 1,15,055 கிரிமினல் குற்றங்கள் இவர்களுக்கு எதிராக நடந்திருப்பதாகவும் அரசுக் கமிசன் ஒப்புக் கொள்கிறது. உண்மையான எண்ணிக்கையோ பல மடங்கு என்பதை நாம் அறிவோம்.

இத்தகைய கொடுமைகள் - அட்டூழியங்களுக்கு எதிராக வழக்கம் போல நாடாளுமன்ற, சட்டமன்றக் கூச்சல்கள், சர்வகட்சிக் கண்டனங்கள்; நிவாரண நிதி - விசாரணைக் கமிசன் அறிவிப்புகள்; சம்பவங்கள் நடந்த இடங்களுக்கு மந்திரிகள், தலைவர்கள், அதிகாரிகளின் ஆறுதல் கூறும் பயணங்கள் இப்போது நடந்தன. முதல்வர்களின் கூட்டத்தைக் கூட்டுவதாகவும், தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களுக்கான தேசியக் கமிசன் அமைப்பதாகவும், இவர்களுக்கு எதிரான கொடுமைகளைத் தடுக்க மத்தியக் கட்டுப்பாட்டுக் கமிசன் அமைப்பதாகவும் பிரதமர் வாக்குறுதி அளித்துள்ளார். எவ்வளவோ கமிசன்களையும், சட்டங்களையும், வாக்குறுதிகளையும் தான் பார்த்தாகிவிட்டது. எல்லாம் பித்தலாட்டங்கள்தான் என்பதையும் அனுபவங்கள் காட்டிவிட்டன. தாழ்த்தப்

படிப்பகம்

www.padippakam.com

பட்ட - மலைவாழ் மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், பெண்கள் மற்றும் பிற சிறுபான்மையினருக்கும் எதிராக - உழைக்கும் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் இத்தகைய அட்டூழிங்கள் இந்த நாட்டில் நிலப்பிரபுத்துவ சாதி - மதக் கொடுங்கோன்மை இன்னமும் வலுவாக நீடிப்பதையே காட்டுகின்றன. நிலப்பிரபுத்துவ கலாச்சாரம், அதன் மிச்ச சொச்சங்களாக நீடிப்பதாகக் கூறுவதைக் கூட ஏற்க முடியாது. அதன் பொருளாதார, சமூக, அரசியல் ஆதிக்கமாகவே நீடிக்கிறது. அதோடு நவீன அரசு எந்திரத்தின் பலத்தையும் பெற்றிருக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால் எதிரிகள் ஆயுதமேந்தி இருக்கிறார்கள். ஆயுத மேந்திய குண்டர்களையும், அரசுப் படைகளையும் பெற்றிக்கிறார்கள். அதனால் அரசியல் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள். இட ஒதுக்கீடு போன்ற சலுகைகளைப் பெற்றுப் பொருளாதார ரீதியில் முன்னேறி விடுவதாலேயே சமூக உரிமையும், அரசியல் சுதந்திரமும் தாழ்த்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வந்து விடாது. உரிமையையும் மானத்தையும் பறிகொடுத்து அடிமைகளாய் வயிற்றை நிரப்பிக் கொண்டு வாழ்வது மனித வாழ்வல்ல. போலீசுகாரரானாலும் அம்பதாஸ் சவானேக்கு என்ன நேர்ந்தது. சமூக நீதி - சமூக உரிமை - சமூக சமத்துவத்தைப் பெற முடியவில்லை. ஓரளவு வசதி வந்தும் சுண்டூர் தாழ்த்தப்பட்ட மக்கள் சுதந்திரமாக வாழமுடியவில்லை. சுண்டூரில் தாழ்த்தப்பட்ட சகோதரர்களைப் பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர் ரவிச்சந்தர் குமார் அந்தக் கோரம் - கொடுமை தாங்காது நெஞ்சம் துடிதுடிக்கக் தற்கொலை செய்து கொண்டார். அதுவும் ஒருவகை எதிர்ப்பு, ஆற்றாமையின் வெளிப்பாடு; கோழைத்தனமல்ல. மந்திரிகளையும் துரோகத் தலைவர்களையும் கற்களையும் செருப்பையும் வீசி விரட்டினார்களே சுண்டூர் கிராம தாழ்த்தப்பட்ட இளைஞர்கள், அது இன்னொரு எதிர்ப்பு. முத்தம்மாவை இழிவுபடுத்திய ரெட்டி நிலப்பிரபுவை அடித்தே கொன்றார்களே சிலகுர்த்தி ஒடுக்கப்பட்ட மக்கள், அது மேலும் ஒரு எதிர்ப்பு.

ஆகவே ஒரு நாள் வாழ்ந்தாலும் மானமுள்ள, உரிமையுள்ள போராளியாக, தியாகியாக வாழவேண்டும். எதிரிகளிடம் இருந்து ஆயுதங்களையும் அரசியல் அதிகாரத்தையும் பறித்தெடுக்க வேண்டும். இது ஒன்றுதான் தாழ்த்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான பாதை! ●

# தமிழருக்கு எதிராக பார்ப்பன - பாசிச ஜெயாவின் போர்

**ஈழ அகதிகளை வெளியேற்றுவதை எதிர்த்து அவர்களின் நலன்கள் - உரிமைக்காகக் குரல் கொடுப்பதும், ஈழப் போராளிகளை இழிவுபடுத்துவதை எதிர்ப்பதும், ஈழ விடுதலையை ஆதரிப்பதும் கூட இந்திய தேச விரோதச் செயல்; அதற்காக மாநாடு, பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்வதும், பங்கேற்பதும் சுவரொட்டிகள், துண்டறிக்கைகள் போடுவதும் கூட தேசவிரோதச் செயல்கள் - என்று குற்றஞ்சாட்டி தேசியப் பாதுகாப்புச் சட்டம், தேசத் துரோகச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். பத்திரிக்கையாளர்கள் கூட்டம் கூட தடை செய்யப்படுகிறது.**

**எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தாக்கி வெளியேற்றப்படுகின்றனர். போராட்டங்களினால் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டால் கட்சித் தலைமையிடமிருந்து நட்டஈடு வசூல் செய்யப்படும் என்று மிரட்டுகிறார்கள். ஜனநாயக முறையில் சாதாரணக் கோரிக்கைக்குப் போராடும் மாணவர்கள் தாக்கப்படுவதோடு, மாணவ சமுதாயத்தையே ஒடுக்குவதாக மிரட்டுகிறார்கள். ஒருபுறம் விலைவாசி - கட்டணங்களை ஏற்றி பொருளாதாரத் தாக்குதல் தொடுப்பதோடு, மறுபுறம் பார்ப்பனர் நலன்களுக்காகக் கட்டாயமாக கோவில் நிதி வசூலிக்கிறார்கள். அம்பேத்கார் சிலை திறக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துகிறார்கள்.**

**இவையெல்லாம் இது பார்ப்பன - பாசிச கும்பலின் ஆட்சியே என்பதை நிரூபிக்கின்றன.**

**இதற்கும் மேலாக, விரைவில் மத்திய உள்துறை மந்திரி சவாண் ஜெயலலிதாவைச் சந்திக்கவிருக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பென்று பிரகடனப்படுத்தித் தடைசெய்வது என்று அவர்கள் முடிவு செய்யப் போகிறார்கள். அப்புறம் புலிகள் அமைப்போடு தொடர்புடையவர்கள் மட்டுமல்ல, ஈழ ஆதரவாளர்கள், தமிழன உணர்வுடையவர்கள், ஜனநாயக உரிமை கோருபவர்கள் ஆகிய அனைவர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம் பாயும். ராஜஸ்தானிலும் குஜராத்திலும் 11 வயது சிறுவர்கள் முதல் 75 வயது வயோதிகர் வரை, குறிப்பாக முஸ்லீம் ஆண்களும் பெண்களுமாக அப்பாவிகள் ஆயிரக்கணக்கில் இச்சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். விசாரணையின்றி நீண்டகாலம் சிறையிலடைக்கும் இக்கொடிய கருப்புச் சட்டம் இனித் தமிழக மக்கள் மீதும் பாயும். மொத்தத்தில் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் தமிழக மக்களுக்கு எதிராக அரசு பயங்கரவாதப் போர்ப் பிரகடனம் செய்திருக்கிறது.**

ஈழத் தமிழர்களுக்கு எதிராக மத்திய அரசு - சி.பி.ஐ. கூட்டோடு பார்ப்பன - பாசிச ஜெயலலிதா ஏவி விட்டிருக்கும் அரசு பயங்கரவாத அடக்குமுறை நடவடிக்கைகள் இன உணர்வும் ஜனநாயக உரிமை உணர்வும் உடைய தமிழர்களிடையே நியாயமான, அவசியமான கோபாவேசத்தைத் தூண்டியிருக்கின்றன.

ஏற்கனவே ஈழ விடுதலையையும், ஈழ அகதிகள் - போராளிகளையும் ஆதரித்து அனுதாபம் காட்டி வந்த அமைப்புகள் பலவும் ராஜீவ் கொலையையும் சி.பி.ஐ. உளவுப்படையின் தலைமையில் கட்டவிழ்த்து விடப்பட்ட மனித வேட்டையையும் தொடர்ந்து அஞ்சி ஒடுங்கிப் போயிருந்தன. ஓரிரு குரல்கள் மட்டுமே ஒலித்துக் கொண்டிருக்க, அவற்றின் குரல் வளையையும் நெறிக்கும் முயற்சியில் சி.பி.ஐ.யும், ''கியூ'' போலீசுப் படையும் இறங்கின.

சிவராசன், சுபா ஆகியோர் சுற்றி வளைக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டபின் ஈழ ஆதரவு இயக்கங்களின் மீதான ஒடுக்குமுறைக் கெடுபிடி கைவிடப்படா விட்டாலும், தளர்த்தப்படும் என்று நம்பிக்கை துளிர்விட ஒரு சில அமைப்புகள் வெளிவந்தன. பொதுக்கூட்ட, மாநாடு அறி



படிப்பகம்

www.padippakam.com

விப்புகள் செய்த அவர்களும் கைது செய்யப்பட்டனர். சி.பி.ஐ - "கியூ" போலீசின் கவனத்திலிருந்து தப்பிய ஓரிரு கூட்டங்களே நடந்தன.

அதற்குள் ராஜீவ் - ஜெயாவின் அடிவருடிகளான அ.தி.மு.க - காங்கிரசு துரோகிகளுக்கு எஜமான விசுவாசம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. இதற்கு அடிபோட்டுக் கொடுத்தன தினமலர், இந்து ஆகிய இரு பார்ப்பன நாளேடுகள். விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் புகழ்ந்தும், புலிகள் ஒழிப்பு நடவடிக்கைகளை சிறுமைப்படுத்தியும் தமிழின வெறி, பிரிவினை - பிளவுவாத அமைப்புகள் பிரச்சாரம் துவங்கியிருப்பதாக அந்த நாளேடுகள் புளுகின. புலிகளின் நிதி உதவியும் தூண்டுதலும் பெற்று 'இந்திய அமைதி'ப்படையின் அட்டூழியங்களை பெருக்கிச் சொல்லியும், தமிழ்ப் பண்பாடு, மொழி, இன மேன்மைக்காக புலிகள் தியாகம் புரிவதாகப் புகழ்ந்தும் பிரச்சாரம் நடப்பதாக அவதூறு எழுதின. ராஜீவ் கொலையில் புலிகளுக்கு எதிராக அசைக்க முடியாத ஆதாரங்களுடன் வழக்குத் தொடுக்க இருக்கும்போது அதைத் திசைத் திருப்பவே இந்த பிரச்சாரம் திட்டமிட்டு நடத்தப்படுவதாக சி.பி.ஐ. கருதுகின்றது என எழுதின.

சட்டமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தன்னை எதிர்ப்பவர்கள் யாரும் இல்லாதவாறு தனிக்காட்டு ராணியாக ஆட்சி நடத்த எண்ணி எதிர்தரப்பினர் மீது திட்டமிட்ட தாக்குதல் - ஒடுக்குமுறையை ஏவியுள்ளார் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா. அதேபோல ராஜீவ் கொலை வழக்கில் எதிர்த்து வழக்காட யாருமே துணியாதவாறு ஒடுக்கி வைக்கவே ஜெயாவும் - சி.பி.ஐ.யும் விரும்புகின்றன. அதற்காக இதுவரை "புலிகளின் ஆயுதக் கலாச்சாரம்" என்கிற புரளி கிளப்பி வந்த ஜெயா - வாழப்பாடி - சி.பி.ஐ. கும்பல் இப்போது ஈழ ஆதரவு இயக்கங்களை எல்லாம் "புலிகளின் ஆதரவு - தேசவிரோத சக்திகள்" என முத்திரை குத்தி ஒடுக்க முனைந்திருக்கிறது.

பதவிக்காக மாற்றானின் காலையும் நக்கிப் பிழைக்கும் அரசியல் விபச்சாரத் தரகர் குமரி ஆனந்தன் கடந்த செப்.11-ந் தேதி சட்டமன்றத்தில் பெண்ணரசி, வீராங்கனை என்றெல்லாம் ஜெயாவுக்கு அர்ச்சனை செய்துவிட்டு, தனது இனத் துரோக எட்டப்பன் வேலையைத் துவங்கியிருக்கிறார். முன்பு ஈழப்போரில் குதிக்க படகு ஏறிப் போவதாக நாடகமாடி, இந்திராவை இழிவாக ஏசி, தேசியக் கொடியை அவமானப்படுத்தி, தமிழர்களிடையே அரசியல் ஆதாயம் தேடிய இதே குமரி ஆனந்தனுக்கு இப்போது "தேசியப்பற்று" பீறிட்டு வேட்டியில் ஒழுகியிருக்கிறது. ஈழ ஆதரவு இயக்கங்களுக்கு எதிராக எதிரிகளிடம் சாடி சொல்லி பிழைப்பு நடத்துவதில் இறங்கியிருக்கிறார்.

"ஆயுதக் கலாச்சாரம் வாழ்க", "ராஜீவைக் கொன்றதில் என்ன தவறு?" "சோனியா விதவையானால் என்ன?" என்று ஈழ ஆதரவு சுவரொட்டிகள் ஒட்டப்படுவதாக உடன்கட்டை நாயகி ஜெயாவிடம் அவதூறுகளைப் புளுகி முறையிட்டார் எட்டப்பன் குமரி ஆனந்தன். குமரி ஆனந்தன் போன்ற துரோகிகளின் உடம்பில் ஓடுவது



தமிழகத்திலுள்ள அகதி முகாமில் அவதிப்படும் ஈழ மக்கள்.



'திராவிட' ஆட்சியின் பொற்காலம்: இந்து கோயில்களுக்கு கட்டாய நிதி வசூல்; ஐம்பொன் சிலைக்கு குளுகுளு வசதி.

இரத்தமல்ல, சாக்கடைதான். அதை மறந்துவிட்டு, "கொலைப் பட்டியலில் முதல்வரின் பெயர் இருப்பதைக் கேட்டு எங்கள் ரத்தம் கொதிக்கிறது" என்று குதித்தார் குமரி ஆனந்தன். ஈழ ஆதரவாளர்களது கைகளைக் கட்டி நடுரோட்டில் இழுத்து வரவேண்டும்; வயலில் இருந்து களைகளை அகற்றுவது போல தூக்குத் தண்டனை விதித்து அவர்களை அகற்றவேண்டும் என்று கோரி எதிரிகளைவிட குமரி ஆனந்தன் போன்ற துரோகிகளுக்குள்ள பயபக்தியை வெளிப்படுத்தினார்.

அவ்வளவுதான்! உசுப்பி விடப்பட்ட பார்ப்பன - பாசிச ஜெயா, அதிகார போதை தலைக்கேற பேயாட்டம் ஆடிப் பெருங்கூச்சல் போட்டு ஈழ ஆதரவாளர்கள் மீது பாய்ந்து விட்டார். "விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து, ஈழத்தமிழர்கள் நலன்கள் என்கிற பெயரில் மாநாடுகள், பொதுக்கூட்டங்களில் பங்கேற்றாலோ, ஏற்பாடு செய்தாலோ, அறிவித்தாலோ சுவரொட்டிகள் ஒட்டினாலும் கூட அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ஏவி தமிழகத்திலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் இத்தகைய தீய சக்திகளை ஒடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கொக்கரித்தார் ஜெயலலிதா. உடனே அவரது உத்தரவின் பேரில் ஈழ ஆதரவு இயக்கத்தினர் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேலூரில் ஈழ அங்கீகரிப்பு கோரி மாநாடு நடத்த முயன்ற தமிழ்நாடு இளைஞர் பேரவை, மாணவர் பேரவை ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த 70 பேர் கைது செய்யப்பட்டு மாநாடு தடை செய்யப்பட்டது.

சென்னை - அம்பத்தூரில் ஈழ அகதிகளை வெளியேற்றுவதை எதிர்த்து மாநாடு நடத்த முயன்ற மக்கள் உரிமைக் கழகம், மக்கள் கலாச்சாரக் கழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி மற்றும் பிற ஈழ ஆதரவு இயக்கத்தினர் 56 பேர் கைது செய்யப்பட்டு மாநாடு தடை செய்யப்பட்டது. இவர்கள் எல்லாம் உடனே விடுதலை செய்யப்பட்டனர். என்றாலும் சட்டசபையில் ஜெயலலிதா கூச்சலைத் தொடர்ந்து மதுரை, திருப்பூர், சித்தோடு ஆகிய இடங்களில் பு.இ.மு.வினரும், காஞ்சியில் தெருமுனைக் கூட்டம் நடத்திய பெரியாரிய - மார்க்சிய பொதுவுட



படிப்பகம்

www.padippakam.com

மைக் கட்சியினர் சிலரும் தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்; இவை எதிர்த்து பத்திரிக்கையாளர் கூட்டம் நடத்த முயன்ற போது அது தடை செய்யப்பட்டு ம.உ.க. தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசியல் சீக்கு ஜெயலலிதா ஆட்சி பீடமேறி மூன்று மாதங்கள் தான் ஆகின்றன. அதற்குள்ளாகவே தான் தமிழ் இனத்துக்கே கொடிய, கேடான எதிரி; தான் அமைத்திருப்பது ஒரு பார்ப்பன - பாசிச அரசு பயங்கரவாத ஆட்சியே என்பதை இந்தச் சொல்லாலும் செயலாலும் உறுதிப்படுத்தி விட்டார்.

சிங்கள இனவெறி அரசுக்கு ஊழியஞ் செய்யும் கைக்கூலியாகி, அதற்காக மத்திய அரசு - சி.பி.ஐ. கூட்டோடு விடுதலைப் புலிகள் ஒழிப்புப் பதிலிப்போர் (PROXY WAR) நடத்திக் கொண்டிருக்கிறார் ஜெயலலிதா. அத்தோடு அதையே ஈழ ஆதரவு இயக்கங்களுக்கும், தமிழகத் தன்னுரிமைக் குழுக்களுக்கும், புரட்சிகர மற்றும் ஜனநாயக அமைப்புகளுக்கும் எதிரான அறிவிக்கப்படாத அவசர நிலைக்கால அடக்குமுறையாக விரிவுபடுத்தி இருக்கிறார்.

ராஜீவ் கொலை விசாரணை துவங்கியதும், ஜெயலலிதா பதவியேற்றதுமே, ''ராஜீவ் கொலை விசாரணை; அரசியல் பழி வாங்கும் முயற்சி'' என்கிற எச்சரிக்கைக் கட்டுரையை புதிய ஜனநாயகம் இதழில் எழுதினோம். ''ராஜீவ் கொலை விசாரணை நீதியான, நேர்மையான முறையில் நடைபெறாது; கொலைக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்துக் தண்டிப்பதோடு அவர்களது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள மாட்டார்கள்; கொலைக்கு சர்வதேச, அரசியல் உள்நோக்கம் கற்பிக்கும் முயற்சியில் விசாரணைக் கமிசனைப் பயன்படுத்துவார்கள். அரசியல் எதிரிகளுக்கு எதிராகக் கொலைப்பழி சுமத்துவதைத் தேர்தல்கால அனுதாப அலை எழுப்பி ஆதாயம் தேடிக் கொள்வதோடு நிறுத்த மாட்டார்கள்; சாத்தியமான பலரை ராஜீவ் கொலையில் சம்பந்தப்படுத்தித் தண்டிப்பதோடு, இந்த வழக்கோடு நேரடியாக சட்டப்படி சம்பந்தப்படுத்தாமலேயே பலர் மீது - குறிப்பாக திராவிட இயக்கத்தினர், தமிழ் தேசிய இனவாதக் குழுக்கள், ஜனநாயக மற்றும் புரட்சியாளர்கள் மீது - கொலை சதிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி அரசியல் பழிவாங்குதலும் தனியே நடக்கும்; அரசியல் ஆதாயம் கருதிப் பழிவாங்கும் இத்தகைய செயல்கள் பாசிசத் தன்மையுடையன; நியாயமான தேசிய இன இயக்கங்களையும் ஒடுக்கும் நோக்கமுடையன'' என்று இரண்டு மாதங்களுக்கு முன்பே எழுதினோம்.

இதை மெய்ப்பிக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் சி.பி.ஐ. மற்றும் ''கியூ'' பிரிவு உளவுப் படைகளை ஏவிவிட்டுள்ளன. ராஜீவ் கொலைக்காக அமைக்கப்பட்ட விசாரணைக் கமிசன் நீதிபதி வர்மா அக்கொலையில் சர்வதேச சதி பற்றி விசாரிக்க மறுத்துவிட்டார். அவர் மட்டுமல்ல, உச்சநீதிமன்ற நீதிபதிகள் அனைவருமே மறுத்துவிட்ட நிலையில், டெல்லி உயர் நீதிமன்றத்தைச் சேர்ந்த இந்திரா விசுவாசி ஜெயின் கமிசன் நியமிக்கப்பட்டுள்ளது.



சிவராசன், சுபா ஆகியோரைப் பிணமாகப் பிடித்த பின்னும் சி.பி.ஐ.யின் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் புலிவேட்டை நிறுத்தப்படவில்லை. ''சிவராசன், சுபா சாவுக்குக் காரணமானவர்களைப் பழிதீர்க்க புலிகளின் அதிரடிப்படை வந்துள்ளது; கண்ணம்பாடி அணைக்கும், மகாபலீசுவரர் சிலைக்கும் வெடி வைக்கப் போகிறார்கள்; சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழு அதிகாரிகளைக் கொலை செய்யத் திட்டமிட்டுள்ளனர்; சி.பி.ஐ.யிடம் சிக்கியுள்ளவர்களைக் கொன்று தடயங்களை அழிக்கவோ, அவர்களை மீட்கவோ முயலுகிறார்கள்'' - இப்படி முதலாளித்துவப் பத்திரிகைகளே நம்பமுடியாத வதந்திகளைத் திட்டமிட்டு பரப்பினார்கள். புலி வேட்டையைத் தொடர்வதற்கான முகாந்திரமாக இவை பயன்படுத்தப் படுகின்றன.

ஏற்கனவே சிவராசன், சுபாவைத் தேடுவதாகக் கூறிக்கொண்டு புலிகளின் ஆயுதத் தயாரிப்புகள், செய்தித் தொடர்பு வலைப் பின்னல்களை அறுத்தெறிந்து அழிக்கும் வேலையில் சி.பி.ஐ. மற்றும் ''கியூ'' பிரிவு உளவுப்படைகள் ஈடுபட்டிருந்தன; ஈழப் போரில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த போராளிகளைக் கூட சிவராசன் கூட்டாளிகள், புதிய அதிரடித் தாக்குதலுக்கு வந்த தற்கொலைப் படையினர் என்று முத்திரை குத்தி வேட்டையாடின. இப்போது சிவராசனுக்கும் பிரபாகரனுக்கும் நேரடித் தொடர்பு இருந்ததாகவும், ராஜீவைக் கொலை செய்யும்படி பிரபாகரனே நேரடி உத்திரவு போட்டதாகவும் ஆதாரங்களை உருவாக்கும் முயற்சியில் சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழு ஈடுபட்டுள்ளது. இதற்காக ஈழப் போராளிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களிடையே பொய் சாட்சியங்களை - 'அப்ரூவர்களை'த் தேடி அலைகிறது.

இதன்மூலம், நேரடியாகப் படைகளை ஈழத்துக்கு அனுப்ப முடியாவிட்டாலும் உளவுப்படைகளை ஏவி பிரபாகரனைப் பிடிப்பது, நாடு கடத்தும்படி இலங்கை அரசிடம் கோருவது, தேவையானால் கூட்டு இராணுவ நடவடிக்கையில் இறங்குவது என்கிற நோக்கில் மத்திய - மாநில அரசுகள் செயல்படுகின்றன. இதற்கு அடித்தளம் அமைக்கும் வகையில் பார்ப்பனப் பத்திரிகைகள் பிரச்சாரம் நடத்துகின்றன. முதல் தடவை இந்திய இராணுவம் நடத்திய ஈழ ஆக்கிரமிப்பு பெருந்தோல்வியிலும் அவமானத்திலும் முடிந்தது; அதோடு இந்திய பார்ப்பன - பாசிச கும்பல் தனது தலைவனையே பறிகொடுத்தது. இரண்டாவது முறை ஈழ ஆக்கிரமிப்புப் படையெடுப்பார்களேயானால் அது நிச்சயம் பெரும் கேலிக் கூத்தாகவே முடியும்.

ஆனாலும் ஆக்கிரமிப்பு - ஆதிக்க - விரிவாக்க ஆசையை இந்திய பார்ப்பன - பாசிச கும்பல் கைவிடவில்லை. அந்த நோக்கத்தோடும், ராஜீவ் கொலைக்குப் பழிவாங்கும் நோக்கத்தோடும் சிங்கள இனவெறி அரசுக்கு நட்பு - நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் புலிகள் ஒழிப்புப் பதிலிப் போரை இந்தியாவில் துவங்கி நடத்துகிறார்கள். இதன் ஒருபகுதியாகவும், இந்தியத் தமிழகத்தில் தலைதூக்கும் தன்னுரிமை மற்றும் ஜனநாயகப் புரட்சிகர இயக்கங்களை அடக்கி ஒடுக்கவும் இப்போது ஈழ ஆதரவு இயக்கங்கள் மீது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் பாய்கிறது.

தமிழ் இன உணர்வு, ஈழ ஆதரவு என்கிற சிறு சாயல் இருந்தால் கூட விட்டு வைப்பதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகிறது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். ஒரு உதாரணத்தைப் பாருங்கள்: பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முதுகலைப் படிப்புக்குப் பாடநூலாக இருந்தது, அப்துல் ரகுமானின் ''சுட்டுவிரல்'' என்ற கவிதைத் தொகுப்பு. அது புலிகள் ஆதரவு, தேச துரோகமானது என அகற்றப்பட்டது; இதற்காக வரிந்து கட்டிக் கொண்டு பிரச்சாரம் செய்த பார்ப்பன ஏடான தினமலர் இக்கவிதைத் தொகுப்பைத் தடை செய்ய வேண்டும் எனக் கோருகிறது.

**இனி முடிவு செய்ய வேண்டியது தமிழ் மக்கள் தாம்!**

ஆயுத பேர ஊழல்கள் செய்து நாட்டையே கொள்ளையடிக்கிறார்கள்; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஐ.எம்.எஃப் - உலக வங்கிக்கு நாட்டையே மறு அடகு வைக்கிறார்கள்; நமது மக்களையே கொள்ளையிட்டு சிங்கப்பூரிலே சொத்துச் சேர்க்கிறார்கள்; சுவிஸ் நாட்டில் கள்ளப்பணத்தைக் குவிக்கிறார்கள்; அந்நிய நாடுகளுக்கு உளவு சொல்கிறார்கள்; — இந்தப் பார்ப்பன - பனியா - பாசிசக் கும்பல் தேச விரோதிகளா?

இல்லை, நமது தேசத்தையும், இனத்தையும், மொழியையும், பண்பாட்டையும் நேசிப்பவர்கள்; நமது சகோதர ஈழத் தமிழினத்தை ஆதரிப்பவர்கள் தேசத் துரோகிகளா?

ஈழ ஆதரவாளர்கள், தன்னுரிமை இயக்கத்தவர்களை மட்டுமல்ல, தமிழ் மக்கள் அனைவரையுமே அடிமையாக்கி ஆண்டு விடலாம் என்று பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் எண்ணிவிட்டது. தன்னை எதிர்த்து அம்பலப்படுத்தும் பத்திரிக்கைகள் மீது பாய்கிறது; எதிர்க்கட்சியினரான பண்ருட்டி, திருநாவுக்கரசு, பரிதி இளம்வழுதி ஆகியோரைச் சட்டமன்றத்திலேயே தாக்கு



படிப்பகம்

www.padippakam.com

கிறது. மூன்றாண்டுக்கு முந்தைய வழக்கை, காலாவதியாகிப் போனாலும் பழிதீர்க்கும் ஆத்திரத்துடன் தி.மு.க. பிரமுகர் ராமலிங்கத்தைக் கைது செய்து உள்ளாடையுடன் சிறையில் அடைக்கிறது. ''பறைப்பயலே'' என்று ஏசி பரிதி இளம்வழுதியின் வேட்டியை உருவிக் கொண்டு வெளியே வீசுகிறது. காவல் தெய்வம், இதய தெய்வம் என்று துதிபாடி காலில் விழாதவர்களை எல்லாம் அடக்கி ஒடுக்குகிறது.

மின் கட்டண உயர்வு, ரேஷன் அரிசி விலையேற்றம், பேருந்துக் கட்டண உயர்வு என்று அடுத்தடுத்து பொருளாதாரத் தாக்குதல்களை ஏவிவிடுகிறது; காஞ்சி சங்கர மடத்தின் உத்தரவை ஏற்று கோவில்களைப் பராமரிக்கும் நிதி என்று பார்ப்பனர் வசதி - வாழ்வுக்காக கட்டாய நிதி வசூலிக்கிறது. என்ன செய்தாலும் தனது ஆட்சியை யாரும் அசைக்க முடியாது என்கிற அதிகாரத் திமிரோடு இது பார்ப்பனர் ஆட்சிதான் என்று பார்ப்பனர் சங்கம் தனது பத்திரிக்கையிலே எழுதிக் கொள்ளும் வகையில் வெறியாட்டம் போடுகிறது.

இப்படி ஈழ, இந்தியத் தமிழர்க்கு எதிராக பாசிச ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதை மூடி மறைப்பதற்காகத்தான், தானும் தமிழ்நாட்டு நலனுக்குப் பாடுபடுவதாகப் பாசாங்கு செய்து காவிரி, கச்சத்தீவு போன்ற விவகாரங்களில் பெருங்கூச்சல் போடுகிறது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். திராவிட இன - இயக்கத்துக்கான பரம்பரை வாரிசு உரிமை பாராட்டித் தமிழ் மக்களை மோசடி செய்கிறது.

திராவிட, தமிழின உரிமைப் பாரம்பரியத்துக்கு என்றால் பார்ப்பன பாசிச - ஜெயா கும்பலுடன் கடும்போட்டி நடத்தும் கருணாநிதி, வீரமணி, இராமதாசு ஆகியோர் தம்மையும், தம் சொத்தையும் பாதிக்காத வகையில் மிகவும் பொதுவான, சாதாரணப் பிரச்சினைகளில் எதிர்ப்பு அறிக்கை, கண்டனத்தோடு பதுங்கிக் கொள்கின்றனர்.

ஈழ ஆதரவு இயக்கங்களுக்கு எதிராக தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாயும் என்று சட்டமன்றத்தில் அ.தி.மு.க. - காங்கிரசு பாசிச கும்பல் விஷம் கக்கிய போது கருணாநிதி, இராமதாசு கட்சிகளோ, புலிகளுக்கும் தங்களுக்கும் எவ்வித உறவுமில்லை; புலிகளைத் தாங்கள் ஆதரிக்கவும் இல்லை என்றுதான் புலம்பினார்கள். புலிகளையும் ஈழ விடுதலையையும் ஆதரிப்பது ஏதோ கிரிமினல் குற்றம், தேசத் துரோகம் என்றும் அவ்வாறு செய்தால் ஓட்டுப் பொறுக்க முடியாது என்றும் ராஜீவ் கொலை வழக்கில் சிக்கிக் கொள்வோம் என்றும் அஞ்சுகிறார்கள்.

புலிகளுடன் தொடர்புபடுத்தி சி.பி.ஐ. இழுத்துக் கொண்டு போய் சித்திரவதை செய்யும் தி.க., தி.மு.க. தொண்டர்கள் தம் கட்சியினர் இல்லை என அறுத்துக் கொண்டு நிர்க்கதியாய் கைவிட்டு விடுகின்றனர் கருணாநிதியும், வீரமணியும். பார்ப்பன - பாசிச கும்பலின் இத்தகைய ஒடுக்கு முறைகளை இருவருமே கண்டுகொள்வதில்லை. ஒருவகையில் இதற்கெல்லாம் முன்னோடியாக இருந்ததே கருணாநிதியும், வீரமணியும்தான். இப்போது ஈழ ஆதரவாளர்களை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தப்படும் ''கியூ''ப் பிரிவு போலீசு உளவுப் படையை உருவாக்கியதே கருணாநிதி ஆட்சியில், அவரேதான்! தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள தஞ்சை தமிழர் தன்னுரிமை மாநாட்டைத் தடைசெய்து, இந்திய இராணுவ அட்டூழியங்கள் பற்றிய புகைப்படக் காட்சியை சூறையாடி, தலைவர்களை கைது செய்ததும் கருணாநிதி அரசுதான்!; பிரிவினைவாதக் குற்றஞ்சாட்டி தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நகைமுகனைச் சிறையில் அடைத்ததும் கருணாநிதி அரசுதான்! இதையெல்லாம் கண்டு கொள்ளாது, ஒரு வரிகூட எழுதாது கருணாநிதியுடன் ஒத்துழைத்தது வீரமணிதான்!




கருணாநிதியும் வீரமணியும் மட்டுமல்ல, வேழம் என்றும் அரிமா என்றும் வீர நடைக் கவிதைகளும் வெண்பாக்களும் பாடிய சாலையாரும், பெருஞ்சித்திரனாரும், ஆனைமுத்தாரும் ராஜீவ் கொலைக்குப் பிறகு ஓடி ஒளிந்து கொண்டார்கள். இந்தி எதிர்ப்பு போராட்டக் களத்தில் தமிழ் இளைஞர்கள் பலரும் உயிர்பலி கொடுத்த போது, அதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என மன்னிப்புக் கோரி வெளிவந்ததும் பின்னர் அத்தியாகிகளின் பெயராலேயே அரசியல் ஆதாயம் தேடிக் கொண்டதும்தான் கருணாநிதிகளின் வரலாறு. அதே போலத்தான் ஈழ விடுதலைப் போர் வெற்றி ஈட்டியபோது வீரப்பரம்பரையின் உரிமை பாராட்டிய இந்தத் தலைவர்கள், இப்போதைய நெருக்கடியின் போது பதுங்கி விட்டார்கள்; எல்லாம் ஓய்ந்தபின் வருவார்கள். ஆதாயம் தேட!

அதுவுமல்லாமல் ஈழ, இந்தியத் தமிழருக்கு எதிரான இந்தப் பார்ப்பன - பாசிச ஒடுக்கு முறையை சமாதான - சட்டவாத வழிகளினால் முறியடிக்க முடியாது; யார் ஆட்சிக்கு வந்தாலும் அதிகாரம் செலுத்தும் பார்ப்பன - பாசிச கும்பலின் ஆதரவாளர்கள் அரசு எந்திரத்திலே இருக்கிறார்கள். அதன் நச்சுப் பிரச்சாரமும், பாசிச ஒடுக்குமுறையும் இதைக் காட்டவில்லையா? ஆகவே கருணாநிதி, வீரமணி போன்ற பிழைப்புவாதிகளை வெறுத்து ஒதுக்கிவிட்டு, புதிய புரட்சிகரத் தலைமையின் கீழ் அணி திரள்வதுதான் பார்ப்பன - பாசிச கும்பலின் ஒடுக்குமுறைக்கு எதிராக எவ்வித சமரசமுமின்றிப் போராடுவதற்கான ஒரே வழி!

இறுதியாக, பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் ஈழ, இந்தியத் தமிழர்களுக்கு எதிராகப் போர் பிரகடனம் செய்துள்ளது. தமிழகம் முழுவதும் மனிதவேட்டை நடத்துகிறது. இனியும் இந்தக் கும்பலின் ஆட்சி நீடிக்கக் கூடாது. கருணாநிதி ஆட்சியைக் கவிழ்க்கவும், அதிகாரத்தைப் பிடிக்கவும் பல்வேறு கிரிமினல் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டது ஜெயலலிதா கும்பல்; தமிழ் மக்கள் அத்தகைய இழிசெயல்களில் இறங்கத் தேவையில்லை. அவற்றுக்கு மாறாக, தமிழகத் தெருக்களில் புரட்சிப் போராட்டங்கள் வெடிக்கட்டும்.

அ.தி.மு.க. - காங்கிரசு துரோகிகள் தமிழ் நாட்டில் நடமாடக்கூடாது; பார்ப்பனப் பிரச்சார ஏடுகள் கிழித்தெறியப்பட வேண்டும். அவர்களின் தலைவி பெங்களூர் மாளிகைக்கோ, ஐதராபாத் பண்ணைக்கோ தலை தெறிக்க ஓடும்வரை தமிழ் மக்கள் ஓயக்கூடாது.

● ஆர்.கே.

## அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

**போதிய இடமின்மையின் காரணமாக இவ்விதழில் கேள்வி -பதில் பகுதி இடம் பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும். உங்களது சந்தேகங்கள், கேள்விகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.**

**— ஆசிரியர் குழு**

படிப்பகம்

www.padippakam.com

# "இது நம்மவா ஆட்சி" பார்ப்பன சங்கம் பிரகடனம்



"பிறர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் பிராமணர் ஆட்சிதான் நடைபெறுகிறது" என்று தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் அதிகாரபூர்வ ஏடான 'தாம்பிராஸ்' '91, ஜூன் பத்திரிகையில் அதன் ஆசிரியரும் அச்சங்க மாநிலத்தலைவருமான பாலசுப்பிரமணியன் கையொப்பமிட்டு "மாநிலத்தலைவரின் மடல்" மூலம் பிரகடனப்படுத்தியுள்ளார்.

திராவிடர் கழகத்தின் 'உண்மை' ஏடு '91 செப்டம்பர் (1-15) இதழில் தனது குறிப்புடன் அதை முழுமையாக வெளியிட்டு "பார்ப்பன சங்கத்தின் திறைமறைவுத் திட்டங்கள்" என்கிற அட்டைப்படக் கட்டுரையாக வெளியிட்டது. அப்போதுதான் அதை நாம் கவனித்தோம். ஆனால் அது நமது கவனத்திற்கு வராதபோதே பின்வருமாறு புதிய ஜனநாயகத்தில் எழுதினோம்.

"எம்.ஜி.ஆர் ஆட்சியும் பார்ப்பனருக்குச் சாதகமானது தான். இருந்தபோதும் ஜெயலலிதா வெற்றியால் தமது சொந்த ஆட்சி ஏற்பட்டிருப்பதாகவே பார்ப்பன சாதியினர் கருதுகின்றனர்" என்று '91 ஜூலை (16-31) இதழில் எழுதினோம். இந்த முடிவுக்கு நாம் வந்ததற்கான அடிப்படை ஜெயலலிதாவும் பார்ப்பனத் தலைவர்கள் - பிரமுகர்களும் அவர்களது பத்திரிகைகளும் செயல்படுவதைக் கவனித்து மதிப்பீடு செய்ததுதான்.

"தாம்பிராஸ்" தலைவரின் மடல் நமது கருத்தை உறுதி செய்யும் வாக்குமூலமாக இருக்கிறது; அதோடு பார்ப்பன சாதியின் குறுகிய சாதிவெறி சூழ்ச்சி - தந்திரங்களையும் சொல்லிவிடுகிறது. அது பின்வரும் அறிவுறுத்தலைத் தனது சாதியினருக்குத் தருகிறது.

"நாமெல்லாம் வெகு ஆவலோடு எதிர்பார்த்த ஆட்சி மாற்றம் ஒரு மவுனப்புரட்சிகரமாக நடந்தேறி விட்டது. தமிழகத்தைப் பொறுத்தவரை இன்றைய தினம் ஏற்பட்டிருக்கின்ற இந்த ஆட்சி மாற்றம் இதுகாறும் பிராமணர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் இனிமேல் நிகழாது என்ற ஓர் நம்பிக்கையினை ஊட்டுவதாக அமைந்து இருக்கிறது. இதை நாம் எவ்வளவு சாதகமாக நமது சமூகத்திற்கு பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அதை நடைமுறைப்படுத்துவதற்கு கடமைப்பட்டிருக்கின்றோம்."

"எல்லாவற்றிற்கும் மேலாக இன்றைக்கு அமைந்திருக்கின்ற அரசைக் கொண்டு எப்படியெல்லாம் நமது சமூகத்திற்கு பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டுமோ அப்படியெல்லாம் செயல்பட்டு......... நமது சமுதாய மேம்பாட்டிற்காக அயராது உழைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்."

"எந்தக் காரணம் கொண்டும் நமது முயற்சிகள் வெளிப்படையாக தெரியாமல் இருப்பது மிகவும் நல்லது என்று நான் கருதுகின்றேன். மிக ஜாக்கிரதையாக நாம் இதைக் கையாளவேண்டும். வெகு காலத்திற்கு பிறகு முதல் முறையாக தமிழகத்தில் நமது இனத்தைச் சேர்ந்தவரின் ஆட்சியாக அமைந்து இருக்கிறது. பிறர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் பிராமணர் ஆட்சி தான் நடைபெறுகிறது."

"நம் இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை நம் சங்க நிகழ்ச்சிகளில் இந்த நேரத்தில் பங்கேற்கச் செய்வதுகூட தவறு என்று நான் கருதுகிறேன். மற்ற சமூக சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போது நம் சங்க நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்களோ அப்போது நம் இனத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் பங்கேற்கச் செய்வது நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்... இதனால் நம்பால் அன்பு வைத்துள்ள அரசைக் குறை கூற இதையே பயன்படுத்தி விமரிசனம் செய்ய நேரிடும்."

"நமது இன சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து கௌரவிக்க வேண்டும். அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களுடன் புகைப்படமெடுத்துக் கொள்ளவேண்டும் என்று பலர் நினைக்கலாம். ஆனால் நம்முடைய ஆசைகளைக் கொஞ்ச காலத்திற்கு அடக்கி வைத்துக்கொண்டு பிறகு நமது விழாக்களில் பங்கேற்கச் செய்யலாம்."

"நமது இன சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நம் சமூகத்தின்பால் நல்ல பிடிப்பு இருக்கிறது.... நம்முடைய குறிக்கோள் இன்றைக்கு 4 ஆக உள்ள நமது இன சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடுத்த தடவை 10 ஆக உயர்த்துவது எப்படி என்றும், அதே நேரத்தில் அவர்களால் நமது இனத்திற்கு என்ன நன்மைகளை பெற்றுத்தர முடியும் என்ற ஒரே நோக்கில்தான் இனி நாம் எல்லோரும் செயல்படவேண்டும்."

"நம் சட்டமன்ற உறுப்பினர்களை மட்டும் அழைப்பதை தவிர்த்தும் தற்சமயம் உள்ள நிலையில் அரசின் நல்ல பல திட்டங்களின் மூலம் நமது சமூகம் உய்ய அவர்களின் உதவியை நாடி அதற்குரிய பணிகளை விளம்பரமில்லாமல் செய்து முடிக்க வேண்டும் என்ற குறிக்கோள் மட்டுமே நாம் கொள்ளவேண்டும்."

- இவை பார்ப்பன சங்கத்தலைவரின் மடலில் உள்ள முக்கிய அம்சங்கள். இதற்கு முன்பும் மற்ற பிற சாதிச்சங்கங்கள் தமது சாதி சட்டமன்ற உறுப்பினர்களையும் மந்திரிகளையும் பயன்படுத்தி ஆதாயம் தேடிக் கொண்டதுண்டு. ஆனால் இப்போது ஒரு அரசையே தனது சாதிக்கானது என்று பார்ப்பன சங்கம் உரிமை கொண்டாடுகிறது.

இதுவரை இடஒதுக்கீட்டை எதிர்த்து திறமை, தகுதி பற்றிப் பேசியது; இன உரிமையை எதிர்த்து தேசிய ஒருமைப்பாடு பேசியது; சாதி - மத ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராடினால் அகிம்சை - காந்தி வழிபேசியது - என்று உத்தம வேடம் போட்டுக் கொண்டு தமது சாதி நலன்களைப் பார்ப்பனர்கள் மறைத்து வந்ததை இந்த வாக்குமூலம் காட்டிக் கொடுத்து விடுகிறது.

பார்ப்பனர்கள் ஏதோ ஆண்டாண்டு காலமாக துன்புறுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு, வாய்ப்புகள் மறுக்கப்பட்டது போல அச்சாதியினர் பாசாங்கு செய்கின்றனர், புலம்புகின்றனர். அவர்களால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பல ஆண்டுகள் இடஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் இன்னமும் நாட்டின் உயர் பதவிகளில் ஏகபோகமாகவும், அதற்கும் கீழே பெரும்பான்மையாகவும் ஆதிக்கம் வகிப்பவர்கள் பார்ப்பனர்கள் தாம் என்பதை மறுக்க முடியாது.


காஞ்சி சங்கர மடமே அரசியல் நிர்வாக சபையாகவும், ஓடுகாலி ஜெயேந்திர சங்கராச்சாரியே ஆளுநராகவும் கொண்டு தான் முதல்மந்திரி ஜெயலலிதா செயல்படுகிறார் என்பதற்கு இதைத்தவிர வேறென்ன ஆதாரம் வேண்டும். அதனால் வெவ்வேறு மதத்தினரிடமும் தாழ்த்தப்பட்டோரிடமும் கூட கட்டாயக் கோவில் நிதி வசூல், தமிழினத்தின் மீது பாசிசத் தாக்குதல் என்று பார்ப்பன - பாசிச ஜெயலலிதா ஆட்சி நடத்துகிறார்.

இந்த நாட்டின் மக்கள் தொகையில் மிக மிகச் சிறுபான்மையினரான பார்ப்பனர்கள் அரசிலும், ஆட்சியிலும், மேல் சாதிக் கட்சிகளிலும் தமக்குள்ள ஆதிக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு பெரும்பான்மை மக்களாகிய தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சாதியினர் மீது தொடர்ந்து அதிகாரம் செலுத்த முனைகிறார்கள். உண்மையில் அதற்கான சமூக அடிப்படையே கிடையாது. திராவிட, பிழைப்புவாதத் தலைமையின் துரோகத்தனத்தால் இன்னமும் பார்ப்பன ஆதிக்கம் தொடரமுடிகிறது.

ஆனால் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் இனிமேலும் மேல் சாதிகளுக்கு அடிமைகளாய் வாழப்போவதில்லை. புரட்சியாளர்களின் தலைமையில் ஆயுதபாணியாக அணி திரண்டு வருகின்றனர். ஜெயலலிதா, வெங்கட்ராமன் போன்ற பார்ப்பனர்களை நம்பி அவர்களது எழுச்சியை ஒடுக்க முயலும் பார்ப்பன ஆதிக்கத்தை இனிமேலும் சகித்துக் கொள்ள மாட்டார்கள். ●

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

"கம்யூனிசம் தோற்றுவிட்டது; ரஷ்யாவிலேயே லெனின் சிலை அகற்றப்படும்போது கல்கத்தாவில் மட்டும் எதற்கு சிலை? அதனை அகற்றாவிட்டால் உடைத்தெறிவோம் என்று இந்துவெறி பாரதீய ஜனதாவின் மாணவர் குண்டர் படையான ஏ.பி.வி.பி. அண்மையில் கல்கத்தாவில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. லெனின் கொடும்பாவியை எரித்து இழிவுபடுத்தியது. அதை தொடர்ந்து, "கம்யூனிசம் என்பது அயோத்தி ராமர் சிலை போன்றதல்ல; அது விஞ்ஞானபூர்வ தத்துவம்; அதை அழிக்க முடியாது" என்று வங்கத்தை ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகள் மட்டுமின்றி நக்சல்பாரி புரட்சியாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் முற்போக்கு ஜனநாயகவாதிகள் திரண்டெழுந்து இந்து வெறியர்களுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியதோடு, இனிமேல் வாலாட்டினால் எமது நடவடிக்கை வேறு விதமாக இருக்கும் என எச்சரித்துள்ளனர். இந்து வெறியர்களின் எஜமானர்களும் பங்காளிகளுமான புஷ், கோர்பச்சேவ், யெல்ட்சின் கொடும்பாவிகளை லெனின் சிலை அருகே எரித்து சபதம் ஏற்றுள்ளனர். இந்து வெறியர்களோ ஆப்பசைத்த குரங்காக இப்போது அலறுகின்றனர்.

மகாராஷ்டிராவில் மேல் சாதியினர் ஆதிக்கம் செலுத்தும் மரத்வாடா பிராந்தியத்தில் 80% கோயில்களில் நுழைய தாழ்த்தப்பட்டோருக்கு உரிமை இல்லை. பம்பாயைச் சேர்ந்த நிர்மலா நிகேதன் கல்லூரி மாணவர்களும் சில சமூக சேவை அமைப்புகளும் சேர்ந்து அண்மையில் 95 கிராமங்களில் நடத்திய ஆய்வின்படி 75 கிராமங்களில் அரிசனங்களுக்கு கோயிலில் நுழைய அனுமதி மறுக்கப் படுகிறது. மாபெரும் சமூக சீர்திருத்தவாதிகளான அம்பேத்கரும், பூலேயும் பிறந்த முற்போக்கு மாநிலம்தான் மகாராஷ்டிரா என்று ஆட்சியாளர்கள் பீற்றிக் கொள்கின்றனர். ஆனால் 'சுதந்திர'மடைந்து 40 ஆண்டுகளுக்கு மேலாகியும் தீண்டாமைக் கொடுமை மத்திய காலத்தைப் போலவே இன்னும் மகாராஷ்டிராவில் தொடர்கிறது.



கடந்த ஆகஸ்ட் 20 அன்று ராஜீவ் காந்தியின் பிறந்த நாள் விழாவை நாடெங்கும் காங்கிரஸ் பெருச்சாளிகள் கோலாகலமாகக் கொண்டாடினர். ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள தோல்பூரில் இவ்விழாவை நடத்திய நேரு இளைஞர் பேரவை, ராஜீவ் படத்துக்குப் பதிலாக மோகன்தாஸ் காந்தியின் படத்தை வைத்து அதற்கு மாலை போட்டு விமரிசையாக இந்த விழாவை நடத்தியது. விழா ஏற்பாடு செய்தவர்களுக்கு கடைசி நேரத்தில் ராஜீவ் காந்தியின் படம் கிடைக்காததால் 'சுதந்திரம்' வாங்கித் தந்த காந்தியின் படத்தை வைத்து விட்டார்களாம்! மூளையை முனியாண்டி விலாஸ் ஓட்டலில் தேடும் காங்கிரசு கழிச்சடைகளிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

வளைகுடாப் போரின் போது ஈராக்கிய படை வீரர்களும் மக்களும் நிலத்தடியில் பதுங்கு குழிகள் அமைத்து தங்கியிருந்தனர். அப்பதுங்கு குழிகள் அடையாளம் காணப்பட்டு, அமெரிக்க ராணுவத்தின் ராட்சத கலப்பை பொருத்தப்பட்ட டாங்கிகள் போர் விதிமுறைகளை மீறி, அவற்றின் வாய் பகுதியில் மணலைப் போட்டு மூடியதன் விளைவாக 8 ஆயிரம் ஈராக்கிய மக்களும் போர் வீரர்களும் மூச்சுத் திணறி மண்ணில் புதையுண்டு போயுள்ளனர். அதிர்ச்சியூட்டும் இக்கொடுமையை இவ்வளவு காலமும் மூடிமறைத்து விட்டு, இப்போது அமெரிக்காவின் "வாஷிங்டன் போஸ்ட்" பத்திரிக்கை இதனை வெளியிட்டுள்ளது. இக்கொலை வெறியாட்டத்துக்கு தலைமை தாங்கிய கேப்டன் பென்னி வில்லியம்சுக்கு அமெரிக்க போர் வெறியர்கள் விருது அளித்து கௌரவித்துள்ளனர். மனிதாபிமானம், ஜனநாயகம் பற்றிக் கூச்சலிடும் ஏகாதிபத்தியவாதிகளின் உண்மைச் சொரூபம் இதுதான்!

உலக மாகாமோசடி வங்கியான பி.சி.சி.ஐ.யின் இந்திய ஊழல்களைப் பற்றிய செய்திகள் இப்போது மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளது. மோசடிகளும் கருப்புப்பணக் கடத்தலும் நடந்துள்ள போதிலும், என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியாது என்கிறது இந்திய அரசு. மேலும் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட உத்தம சிகாமணியாக வேடம் போடும் நிதிமந்திரி மன்மோகன் சிங்கின் மகளது கல்விச் செலவுக்காக இந்த வங்கி ரூ.50,000 உதவித் தொகை கொடுத்துள்ளது. அவரது உறவினர்களுக்கு வங்கியில் வேலை போட்டுக் கொடுத்துள்ளது. கடைசியில் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக, பி.சி.சி.ஐ. வங்கியின் மோசடிகளுக்கு உடந்தையாகவும் அதன் கையாளாகவும் இந்திய அரசும், மந்திரிகளும் செயல்பட்டுள்ளனர்.

### கடைசி செய்தி

## தோழர்கள் கைது!

இந்து கோயில்களைப் புனரமைக்க கட்டாய நிதி வசூல் வேட்டை நடத்துவதை எதிர்த்தும், ஈழ ஆதரவாளர்கள் மீதான ஜெயா அரசின் ஒடுக்குமுறையை எதிர்த்தும் கோவையில் சுவரொட்டி ஒட்டிய மக்கள் கலை இலக்கியக் கழக கிளைச் செயலர் தோழர் நசீம் இக்மத், மணிவண்ணன், பொன்னுசாமி மற்றும் இரு தோழர்கள் 14.9.91 அன்று கைது செய்யப்பட்டுள்ளனர். இதேபோல சென்னையில் சுவரொட்டி ஒட்டிய ம.க.இ.க. அமைப்பாளர் தோழர் சீனிவாசன் மற்றும் தோழர்கள் சீராளன், மணிமாறன், கப்பையா ஆகியோர் 15.9.91 அன்று கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் புலிகள் ஆதரவாளர்கள் என்றும் தேசவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் பொய்வழக்கு சோடிக்கப் பட்டுள்ளது.

ஓங்கட்டும் மார்க்சிய-லெனினியம்! ஒழியட்டும் ஏகாதிபத்திய உலகம்!

**மார்க்சிய ஆசான்களை இழிவுபடுத்தும்**
**ரஷிய முதலாளித்துவவாதிகளை எதிர்த்து**

## ஊர்வலம் - ஆர்ப்பாட்டம்

**ஆர்ப்பாட்டம்: ரஷிய துணைத் தூதரக அலுவலகம் முன்பு - தியாகராயர் சாலை, தி.நகர் - 18.9.91 மாலை 5 மணியளவில்**

**அணிதிரண்டு வருக!**

மக்கள் கலை இலக்கியக் கழகம்

படிப்பகம்

www.padippakam.com

# முதலாளித்துவ முட்டாள்களே! சிலைகளைத் தகர்க்கலாம் சித்தாந்தத்தை என்ன செய்வீர்?

எல்லாம் முடிந்துவிட்டது. இன்னும் என்ன பாக்கியிருக்கிறது? தோழர் மார்க்சின் வார்த்தைகளில் கூறுவதானால் ''வரலாறு மீண்டும் இரண்டாவது முறையாக திருத்தி எழுதப்படுகிறது, மோசடி பொய்களுடன்!''

உலகில் முதன்முதலாக பாட்டாளிகள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய சோவியத் பூமியில், உலகப் பாட்டாளி வர்க்க ஒப்பற்ற தலைவர் லெனினது சிலை அகற்றப்பட்டு அவமானப்படுத்தப் படுகிறது. கம்யூனிசப் பேராசான் மார்க்சின் சிலை உடைக்கப்படுகிறது. இதர கம்யூனிசப் புரட்சியாளர்களின் சிலைகளும் உருவப்படங்களும் அடித்து நொறுக்கப் படுவதற்குள் செங்கொடி இழிவுபடுத்தப்பட்டு தீக்கிரையாக்கப் படுகிறது. மருந்துக்குக் கூட மார்க்சிய - லெனினியம் தேவையில்லை என்று ''நாங்கள் கம்யூனிசத்தின் எதிரிகள்; முழுமையான முதலாளித்துவ வாதிகள்'' என்று கொக்கரிக்கிறது ஆளும் கும்பல். பதப்படுத்தி பாதுகாக்கப்பட்டு வரும் லெனின் - ஸ்டாலின் உடல்களை கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்வோம் என்று அது எக்காளமிடுகிறது.

கம்யூனிசம், ஜனநாயகம், மனிதநேயத்தைப் பற்றிப் பேசுவோர் கைது செய்யப்படுகிறார்கள். மார்க்சிய நூல்களை அச்சிடுவோர் மட்டுமல்ல; புரட்சிகரமான, முற்போக்கான நூல்களை வெளியிடுவோர்கூட சிறை வைக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கிறது ஆளும் யெல்ட்சின் - கோர்பி கும்பல். சோவியத் போலிக் கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டு அதன் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தோழர் லெனினால் துவக்கப்பட்டு, ரஷிய பாட்டாளி வர்க்கத்தை சோசலிசப் புரட்சிக்கு அணிதிரட்டிய 'ப்ராவ்தா' எனும் பத்திரிக்கை நிறுத்தப்பட்டது.

### கம்யூனிசத்தை இழிவுபடுத்தி ஏகாதிபத்தியங்களின் அவதூறு

கடந்த மாதத்தில் சோவியத் ஒன்றியத்தில் எட்டு பேரைக் கொண்ட கும்பலின் ராணுவ அதிரடிப் புரட்சி தோல்வியடைந்து மீண்டும் அதிகாரத்துக்கு வந்துள்ள கோர்ப்பசேவ் - யெல்ட்சின் கும்பல் எடுத்துள்ள நடவடிக்கைகள் தான் இவை. இவற்றைக் கண்டு இக்கும்பலின் கூட்டாளிகளான ஏகாதிபத்தியவாதிகள் குதூகலிக்கிறார்கள். கம்யூனிசம் அதன் சொந்த மண்ணிலேயே புதைக்கப்பட்டு விட்டது என்று எக்காளமிடுகிறார்கள். 'கம்யூனிசம் தோற்றது: ஜனநாயகம் வென்றது'' என்று வெறியோடு பிரச்சாரம் செய்கின்றனர். கம்யூனிசத்தையும் மார்க்சிய - லெனினியத்தையும் இழிவுபடுத்தும் நோக்குடன், ''சோவியத் சமூக அமைப்பை ஜனநாயகப்படுத்தி பொருளாதாரத்தைச் சீர்திருத்த கோர்பச்சேவ் முயன்றார். அதை எதிர்த்து முறியடிப்பதற்காக பழமைவாத மார்க்சியவாதிகளும், ஸ்டாலினிஸ்டுகளும் ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்டனர்'' என்று அவதூறு பொய்ப் பிரச்சாரத்தை உலகெங்கும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

உண்மையில் ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்டவர்கள் மார்க்சியவாதிகளுமல்ல; கோர்ப்பசேவ் ஜனநாயகவாதியுமல்ல. லெனின் - ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர் ரஷிய கட்சி மற்றும் ஆட்சியை ஒரு அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் கைப்பற்றிய குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பல் அங்கு அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நிறுவி, அமெரிக்காவுடனான உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் இறங்கி ரஷ்ய பொருளாதாரத்தை ராணுவ மயமாக்கி ஆயுதக் குவிப்பிலும் ஆக்கிரமிப்பிலும் ஈடுபட்டனர். இதனால் ரஷியா தீராத அரசியல் - பொருளாதார நெருக்கடியில் சிக்கியது. அதன் பிறகு ஆட்சிக்கு வந்த கோர்பச்சேவ் இந்நெருக்கடிகளைத் தீர்க்க மேற்கத்திய பாணியிலான 'சுதந்திர' சந்தைப் பொருளாதாரத்தை - தனியார் ஏகபோக முதலாளித்துவத்தை நிறுவும் வேலையில் இறங்கினார். ஆனால் இதனாலும் நெருக்கடி தீரவில்லை. எனவே இதைச் சாதகமாக்கிக் கொண்டு மீண்டும் அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நிறுவும் முயற்சியில் பிரஷ்னேவின் வாரிசுகள் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பில் இறங்கினர். மற்றபடி இந்த கும்பலுக்கும் கம்யூனிசத்துக்கும் ஒட்டோ, உறவோ கிடையாது. ஆனாலும் இந்த அதிரடிப் புரட்சி தோல்வி அடைந்ததை சாதகமாக்கிக் கொண்டு, மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தையும், ஆசான்களையும் இழிவுபடுத்தி அவதூறு செய்கிறது, ஏகாதிபத்திய உலகம்.

### மக்கள் எழுச்சியா? கிரிமினல்களின் அராஜகமா?

ஏகாதிபத்தியங்கள் சித்தரிப்பது போல, ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக சோவியத் மக்கள் ஜனநாயகத்துக்கான ஒரு புரட்சியில் இறங்கவில்லை. யேனயேவ் கும்பலின் ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிராக ஒரு சில இடங்களில் மட்டுமே மக்கள் கலகம் செய்தனர். மற்றபடி அமைதியான முறையில்தான் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்; அல்லது செய்வதறியாது பார்வையாளர்களாகவே இருந்தனர். உண்மையில், யெல்ட்சின் தலைமையில் ரஷியாவின் கருப்புப் பண கோடீஸ்வரர்கள்தான் புதிய வர்க்கமாகத் திரண்டு இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராகக் கலகம் செய்தனர். கோர்பியின் முதலாளித்துவ சீர்திருத்தங்களால் புதிய வகை முதலாளிகளாக வளரக் காத்திருந்த இவர்கள் தான் வெறியோடு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்களின் குலக்கொழுந்துகளான இளைஞர்களும், இவர்களால் ஏவிவிடப்பட்ட சமூக விரோத - கிரிமினல் பேர்வழிகளும்தான் லெனின் சிலையை உடைப்பது, செங்கொடியை எரிப்பது முதலான அட்டூழியங்களைச் செய்தனர்; செய்கின்றனர்.

### கோர்பி பிராண்டு ஜனநாயகம்

மேலும், ஏகாதிபத்திய வாதிகளும், அவர்களின் அடிவருடிகளும் கதைப்பது போல வீழ்ந்தது கம்யூனிசம் அல்ல; போலிக் கம்யூனிசம் தான். அதேபோல வெற்றி பெற்றது ஜனநாயகமல்ல; தமது கொள்கைக்கு உடன்படாத அமைப்புகளையும் தனிநபர்களையும் சிறையில் அடைக்கும் முதலாளித்துவ ஜனநாயகம்தான் வெற்றி பெற்றுள்ளது. மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள கோர்பி - யெல்ட்சின் கும்பல் அவசரமாக அறிவித்துள்ள கொள்கைகளும் சட்டங்களும் ஜனநாயக முறையில் விவாதித்து நிறைவேற்றப்



படிப்பகம்

www.padippakam.com

படவில்லை. சுப்ரீம் சோவியத் எனப்படும் மக்கள் பிரதிநிதிகளின் பேரவையில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை கூட இல்லாமலேயே பல அவசர தீர்மானங்கள் ஜனநாயக விரோதமாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்கிறார் ரஷ்யாவின் பிரபல வரலாற்றாசிரியர் மெத்வெதேவ்.

ஏகாதிபத்தியங்கள் நிர்பந்தித்தவாறு இப்போது சோவியத் ஒன்றியத்தில், கம்யூனிசம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு, முதலாளித்துவ சுதந்திர சந்தைப் பொருளாதாரம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ருஷ்ய பெருந்தேசிய இன அடக்குமுறையிலிருந்து இதர தேசிய இன குடியரசுகள் பிரிந்து செல்ல சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் இச்சிறிய குடியரசுகளை சுரண்ட சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களுக்கு சுயாட்சி என்று அறிவித்த பின்னரும் கூட சோவியத் ஒன்றியத்தின் 15 குடியரசுகளில் நான்கைத் தவிர மற்றவை தனிநாடுகளாக சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளன. சோவியத் ஒன்றியம் பலகூறுகளாக சிதறுண்டு பெரிய நிலப்பகுதியும் மக்கள் தொகையையும் அதிகமாகக் கொண்டுள்ள ருஷ்யாவும் உக்ரைனும் மட்டுமே எஞ்சி நிற்கின்றன. கோர்பச்சேவும் அவரது போலிக் கம்யூனிச முன்னோடிகளான குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பலும் இதுநாள்வரை பின்பற்றிய பெருந்தேசிய இன அடக்குமுறையின் விளைவுதான் இது.

### 'ஜனநாயகம்' மலர்ந்தது நெருக்கடிகள் தீர்ந்ததா?

கம்யூனிசம் ஒரு மாயப் பிசாசு என்று ஏகாதிபத்தியவாதிகளோடு சேர்ந்து கூச்சல் போட்டுக் கொண்டு முதலாளித்துவத்தை நிலைநாட்டியுள்ள கோர்பி - யெல்ட்சின் கும்பலால் நாட்டின் நெருக்கடிகளைத் தீர்த்து விட முடியாது. ஏற்கனவே நிலவிவரும் உணவுத் தட்டுப்பாட்டின் விளைவாகவும் உற்பத்தி பின்னேற்றம் காரணமாகவும் இவ்வாண்டு குளிர்காலத்தில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்படும் என்று கோர்பியின் ஆதரவாளர்களே அஞ்சுகின்றனர். ருஷ்யாவின் 20% தொழிலாளரைக் கொண்டு என்னால் சமாளித்து விடமுடியும் என்று சவால்விடும் யெல்ட்சின், அரசுத் துறை நிறுவனங்களில் தேவைக்கு அதிகமாக தொழிலாளர்கள் உள்ளதாகக் கூறி அவர்களை வேலையிலிருந்து விரட்டியடிக்கத் துடிக்கிறார். சுருக்கமாகச் சொன்னால், வெகு சீக்கிரத்திலேயே ரஷியாவை வறுமையும் வேலையின்மையும் பஞ்சமும் தாக்கப் போவது நிச்சயமாகிவிட்டது. அதாவது, ஈராண்டுகளுக்கு முன்பு கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளில் முதலாளித்துவ மீட்சி அரங்கேறிய பிறகு என்ன நடந்ததோ, அதுதான் ரஷியாவிலும் நடக்கப் போகிறது. ''வெண்ணிறக் கூந்தலும் மின்னிடும் கண்களையும் கொண்ட ருஷ்யப் பெண்கள் அழகானவர்கள்; வாருங்கள், ரஷியாவுக்குப் போகலாம்'' என்று விபச்சார சுகத்திற்கு அழைப்பு விடுக்கும் சுற்றுலா நிறுவனங்களின் விளம்பரங்கள் மேலைநாட்டுப் பத்திரிக்கைகளில் வெளிவர தொடங்கிவிட்டன.



செங்கொடியை எரித்துவிட்டு கொடுங்கோல் மன்னன் ஜாரின் கொடியை சுதந்திரமாகப் பறக்கவிடும் முதலாளித்துவ யெல்ட்சின் கும்பல்; பாசிசத்துக்கு அழைப்பு!

இவ்வாறு பொருளாதார, கலாச்சார சீரழிவுகள் ஒருபுறமிருக்க, அரசியல் நெருக்கடியும் இன்னும் தீர்ந்தபாடில்லை. சோவியத் 'கம்யூனிஸ்ட்' கட்சியின் அமைப்பு பலத்தை சார்ந்திருந்த கோர்பச்சேவுக்கு அது கலைக்கப்பட்ட பிறகு ரஷிய மக்களின் தார்மீக ஆதரவைத் தவிர வேறெந்த பிடிப்புமின்றி திரிசங்கு நிலையில் உள்ளார். இதுநாள்வரை அவரை எதிர்த்து தீவிர முதலாளித்துவ மாற்றங்களுக்காகத் தொடர்ந்து கலகம் செய்து வந்த யெல்ட்சின் இப்போதைய ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு ஏகாதிபத்தியங்களின் அங்கீகாரம் பெற்ற மாபெரும் ஜனநாயகவாதியாகப் பிரபலமடைந்துள்ளார். ரஷ்ய மக்களிடம் கோர்பியை விட செல்வாக்கு பெற்றுள்ள யெல்ட்சின் கும்பல், எப்போது வேண்டுமானாலும் கோர்பியை தூக்கியெறிவதற்கான அபாயமும் அதிகாரப் போட்டியும்தான் நிலவுகிறது.

### பாசிச அபாயம் படர்கிறது

கிரெம்ளின் மாளிகையில் பறந்த செங்கொடியை அகற்றிவிட்டு முந்தைய கொடுங்கோல் மன்னன் ஜாரின் கொடியை ஏற்றியதோடு அதை ருஷ்ய குடியரசின் கொடியாகவும் யெல்ட்சின் மாற்றியுள்ளார். இத்தகைய 'சுதந்திரம், ஜனநாயகத்தின்' விளைவாக பழமைவாதிகள், முடியரசுவாதிகள், மத வெறி - இனவெறியர்கள் ஆட்டம் போடுகின்றனர். இத்தகைய பிற்போக்கு சக்திகளின் வளர்ச்சியானது பாசிசத்தையே கொண்டு வரும் என்கிறார், ''ஓகோநயோக்'' எனும் ரஷ்யப் பத்திரிக்கையின் ஆசிரியர். மேலும், தற்போது நடக்கும் தாக்குதல் வெறுமனே கம்யூனிசத்துக்கு எதிரானது மட்டுமல்ல; முற்போக்கு, நாத்திக, மனிதநேய, ஜனநாயக சக்திகளின் மீதான தாக்குதல் என்கிறார் அவர்.

ரஷியாவில் நடந்துள்ள மாற்றங்களை கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களைப் போல முதலாளித்துவ மீட்சிக்கானது என்று மட்டும் குறுக்கிச் சுருக்கிவிட முடியாது. இது அமெரிக்காவின் தடையில்லா உலக மேலாதிக்கத்துக்கும் அதன் ஒற்றைத் துருவ பொருளாதார அமைப்புக்கும் கிடைத்துள்ள இன்னுமொரு வெற்றி! அதாவது அமெரிக்காவுக்கும் ரஷியாவுக்கும் இடையிலான ''பனிப்போர்'' முடிவுக்கு வந்துவிட்டது. ஈராக் மீது போர் தொடுத்து நாசம் செய்ததைப் போல நாளை வேறொரு சிறிய நாட்டை அமெரிக்கா ஆக்கிரமித்தால் அதை நியாயப்படுத்தி ரஷியாவும் படையை அனுப்பும். அமெரிக்காவின் உலக மேலாதிக்க நடவடிக்கைகளுக்கு இனிமேல் ரஷியா இளைய பங்காளியாகச் செயல்படும்.

இவையனைத்தும் சேர்ந்து ரஷியாவை மீள முடியாத நெருக்கடியில் தள்ளிவிடும். இப்போது ''இன்னுமொரு ஆட்சிக் கவிழ்ப்பு நடக்கும் முன்னே பொருளாதார உதவிகள் செய்து ரஷியாவைக் காப்பாற்றுங்கள்'' என்று கெஞ்சுகிறார் யெல்ட்சின். இதை சாதகமாக்கிக் கொண்டு கடுமையான நிபந்தனைகளுடன் 'உதவி' செய்ய ஏகாதிபத்தியங்கள் முன்வந்துள்ளன. இத்தகைய கடன், நெருக்கடி, முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தால் அவதிப்படப் போகும் ரஷிய மக்கள், விரைவிலேயே அதற்கெதிராக மூர்க்கமாய் கிளர்ந்தெழுவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

ரஷியாவில் லெனின் சிலையை வீழ்த்தி முதலாளித்துவ வாதிகள் குதூகலித்த போது ஒரு மூதாட்டி அச்சிலை அருகே பூங்கொத்துகளை வைத்து, ''முட்டாள்களே! இந்த மாமனிதர் இல்லாவிட்டால் ரஷியா எப்படி சீரழிந்திருக்கும் என்று தெரியுமா?'' என்று கேட்டாராம். கூடியிருந்தவர்கள் அவரை பைத்தியக்காரி என்று பரிகசித்தார்களாம். இன்று பரிகசித்து எக்காளமிடுபவர்கள் நாளை இம்மூதாட்டி கூறிய உண்மையை உணருவார்கள். உலக உழைக்கும் மக்களோடு சேர்ந்து கோர்பி - யெல்ட்சின் துரோக கும்பலையும் அதன் எஜமானர்களான அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் கேடுகெட்ட சித்தாந்தத்தோடு சேர்த்து தூக்கியெறிவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியப் போலிகளின் சந்தர்ப்பவாத சாகசங்கள்

இந்தியாவிலுள்ள அதிகார பூர்வ போலிக் கம்யூனிஸ்டுகளைப் போல அம்பலப்பட்டுப்போன கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதிகளை உலகில் எங்கேயும் காணமுடியாது. அண்மையில் சோவியத் ஒன்றியத்தில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து அவர்கள் எடுத்த பச்சோந்தித் தனமான நிலைப்பாடுகளும் அதை மூடி மறைக்க அவர்கள் போடும் பத்தினி வேடமும் அவர்களது சித்தாந்த ஓட்டாண்டித் தனத்தை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

சோவியத் ஒன்றியத்தில் கோர்பச்சேவுக்கு எதிராக் யேனயேவ் கும்பல் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியதும் 'மார்க்சிஸ்ட்' கட்சி அவசர அவசரமாக அதை ஆதரித்தது. ஆப்கான், எத்தியோப்பியா நாடுகளில் நடந்த அரண்மனை - ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகளையே 'சோசலிசப் புரட்சி' என்று ஆதரித்த 'மார்க்சிஸ்ட்டு'கள் அதே வழியில் யேனயேவின் ஆட்சிக் கவிழ்ப்பும் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையில் ஆதரித்தனர். ஆனால் மூன்று நாட்களில் அது தோல்வியடைந்ததும் செய்வதறியாது விழி பிதுங்கி நின்ற 'மார்க்சிஸ்டுகள்' இப்போது மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள கோர்பி-யெல்ட்சின் கும்பலை எதிர்ப்பதாக நிலைப்பாடு எடுத்துள்ளனர்.

மாஸ்கோவில் என்ன மாற்றம் நடந்தாலும் அவற்றை விசுவாசமாக ஆதரித்து வரும் வலது கம்யூனிஸ்டுகள், யேனயேவ் கும்பல் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியதும் நிலைமைகளை ஆராய்ந்து வருவதாகக் கூறி அதிகார பூர்வ முடிவுகள் எடுக்காமல் தள்ளிப் போட்டனர். ஆனால் அதே சமயம் கீதா முகர்ஜி என்ற வலதுகளின் எம்.பி.பாராளுமன்றத்தில் அனைவருக்கும் இனிப்பு வழங்கி அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பை ஆதரித்து குதூகலித்தார். அடுத்த 48 மணி நேரத்தில் அவர் கொடுத்த இனிப்பு கசப்பாக மாறியது. யேனயேவ் கும்பல் தூக்கி எறியப்பட்டு மீண்டும் கோர்பி-யெல்ட்சின் கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்றியது. உடனே வலதுகள் கோர்பியின் ஜனநாயகக் கொள்கைகள் மீண்டும் வெற்றி பெற்று விட்டதாகக் கூறி ஆதரிக்கத் தொடங்கி விட்டனர்.

'மார்க்சிஸ்டு'களோ தாங்கள் ஏற்கனவே கோர்ப்பச்சேவின் சீர்திருத்தங்களை முதலாளித்துவ மீட்சிக்கான பாதை என்று விமர்சித்து வந்ததாகவும், அதன்படியே இன்று அவர் கம்யூனிசத்துக்கு துரோகமிழைத்து விட்டதாகவும், எனவே தான் இன்றைய கோர்பி - யெல்ட்சின் ஆட்சியை எதிர்ப்பதாகவும் மாய்மாலம் செய்கின்றனர். ஆனால் இதே 'மார்க்சிஸ்டு'கள் நேற்று வரை ரஷியாவை "சோசலிச நாடு" என்றும், கோர்ப்பச்சேவை "தோழர்" என்றும் துதிபாடினார்கள். இன்று திடீரென தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு அதற்கான விளக்கமும் காரணமும் கூறாமல் பொதுமக்களையும் தமது கட்சி அணிகளையும் ஏய்த்து மோசடி செய்கின்றனர்.



'மார்க்சிஸ்டு'களின் சந்தர்ப்பவாதம்: ரஷ்யாவுக்குச் சென்று கோர்பச்சேவுடன் கைகுலுக்கும் நம்பூதிரிபாடு, ஹரிகிஷன்சிங் சுர்ஜித்: நேற்று தோழர், இன்று துரோகி!

## 'மார்க்சிஸ்டு'களின் புரட்டல்வாதம்

கோர்பச்சேவின் சீர்திருத்தங்களை விமர்சித்து எச்சரித்ததாகவும், அதன் தர்க்க ரீதியான விளைவுதான் இப்போதைய முதலாளித்துவ மீட்சி என்றும் 'மார்க்சிஸ்டு'கள் கூறுவது இன்னுமொரு பெரிய மோசடி. சோசலிசத்தை வலுப்படுத்த சீர்திருத்தங்கள் தேவை என்று ஒருபுறம் கோர்பியின் பெரஸ்த்ரோய்கா எனும் முதலாளித்துவ கொள்கையை 'மார்க்சிஸ்டுகள்' ஆதரித்தனர். மறுபுறம் மார்க்சிய - லெனினியத்தை வழிகாட்டியாகவும், கம்யூனிஸ்ட் கட்சியை சமுதாயத்தின் தலைமைச் சக்தியாகவும் கொள்ளாவிட்டால் இத்தகைய சீர்திருத்தங்கள் முதலாளித்துவ சக்திகளை வலுப்படுத்துவதாகி விடும் என்று விமர்சிப்பதாக நாடகமாடினர். ('மார்க்சிஸ்ட்' கட்சியின் ஆகஸ்ட் '88 மத்திய கமிட்டி தீர்மானம் )

இத்தகைய 'நடுநிலை'க் கொள்கை போலிக் கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்ப வாதத்திற்கு மிகச் சாதகமானது. இதன் மூலம் கம்யூனிசத்தின் பெயரால் கோர்பச்சேவ் கொண்டு வந்த முதலாளித்துவ மீட்சியை "இதுவும் சோசலிசம்" என்று ஒருபுறம் நியாயப்படுத்த முடியும். அது அம்பலப்பட்டுப் போனால் "பார்த்தீர்களா, அன்றே நாங்கள் கோர்பச்சேவை விமர்சித்தோம்" என்று மறுபுறம் தட்டை திருப்பிக் கொண்டு தாளம் போட முடியும்.

மூக்கு வெளுத்தால் கழுதை; இல்லாவிட்டால் குதிரை என்கிற 'மார்க்சிஸ்டு'களின் இச்சந்தர்ப்பவாதக் கொள்கை இன்று திடீரென உருவான ஒன்றல்ல. வலதுகளிடமிருந்து பிரிந்து வந்த காலத்திலிருந்து அவர்கள் பின் பற்றி வரும் கொள்கைதான் இது.

## கால் நூற்றாண்டாக காவடி தூக்கும் கொள்கைதான்!

1964-ல் 'இடது', வலது என்று கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்ட போது, குருச்சேவ் தலைமையிலான ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியை திரிபுவாதக் கட்சி என்று கூறி வலதுகளை எதிர்த்து 'மார்க்சிஸ்ட்' கட்சி நிலைப்பாடு எடுத்தது. அதே சமயம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த 1963-ம் ஆண்டின் சர்வதேசப் புரட்சிப் பொதுப் பாதையை எந்த விமர்சனமும் இல்லாமல் ஆதரித்தது. அதனாலேயே சீன ஆதரவு இடதுசாரிக் கட்சி என்று 'மார்க்சிஸ்ட்' கட்சி பெயர் பெற்றது.

குருச்சேவ் தலைமையிலான ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியை திரிபுவாதக் கட்சி என்ற போதிலும் ரஷ்யாவை சோசலிச நாடு என்றே 'மார்க்சிஸ்ட்டுகள்' கூறி வந்தனர். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை குருச்சேவ் மீட்ட போதிலும் 'மார்க்சிஸ்ட்' கட்சி தனது நிலையை மாற்றிக் கொள்ளவில்லை.

1967-ல் நக்சல்பாரி பேரெழுச்சியைத் தொடர்ந்து இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) உருவாகியது. மாவோ தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதை ஆதரித்து 'மார்க்சிஸ்ட்' கட்சியின் திரிபுவாதத்தை அம்பலப்படுத்தி எதிர்த்தது. ரஷ்யாவை சோவியத் சமூக ஏகாதிபத்தியம் என வரையறுத்து அதன்



படிப்பகம்

www.padippakam.com

சர்வதேச ஏகாதிபத்திய சுரண்டல் ஒடுக்குமுறையை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், இ.பொ.க. (மா.லெ)யும் அம்பலப்படுத்தி எதிர்த்தன.

ஆனால் மாவோ தலைமையிலான சீனக் கட்சியும், இ.பொ.க. (மா.லெ)யும் இடது தீவிரவாதிகள் என்று 'மார்க்சிஸ்ட் ' கட்சி எதிர்த்தது. இ.பொ.க. (மா.லெ.) கட்சியை அமெரிக்காவின் - சி.ஐ.ஏ.வின் ஏஜெண்டுகள் என்றும், அதனாலேயே ருஷ்யாவை எதிர்ப்பதாகவும் கூறி அவதூறு பிரச்சாரம் செய்தது.

பின்னர் ரஷ்யாவில் பிரஷ்னேவ் கும்பல் குருச்சேவைத் தூக்கி எறிந்து கட்சி மற்றும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. செக் நாட்டை ஆக்கிரமித்து, உலகில் பல ஆக்கிரமிப்பு - ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்தி, ஆயுதக் குவிப்பு மற்றும் உலகப் போர் தயாரிப்பில் பிரஷ்னேவ் கும்பல் இறங்கியது. இவையனைத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி என்று வலதுகளோடு சேர்ந்து 'மார்க்சிஸ்டு'களும் ஆதரித்தனர்.

குருச்சேவ் காலத்திலிருந்தே முதலாளித்துவம் மீட்கப்பட்டு, அதிகார வர்க்க முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்டு, லஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், பொருளாதார நெருக்கடிகள் - குறிப்பாக உணவுப் பற்றாக்குறை, வேலையின்மை என ரஷ்யா சீரழியத் தொடங்கியது. இவற்றை நக்சல்பாரி புரட்சியாளர்கள் அம்பலப்படுத்திய போது, அத்தனையும் சோசலிசத்தை இழிவுபடுத்தும் சி.ஐ.ஏ, பிரச்சாரம் என்று 'மார்க்சிஸ்டு'கள் கூறினர். பின்னர் ருஷ்ய கட்சியை திரிபுவாதக் கட்சி என்று 1964-ல் நிறைவேற்றிய தீர்மானத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு, அது புரட்சிகர கட்சி, அது சோசலிச நாடு என்று 'மார்க்சிஸ்டு'கள் நியாயப்படுத்த ஆரம்பித்தனர். (பார்க்க: 1969 சித்தாந்தப் போராட்டம் என்ற சி.பி.எம். கட்சியின் தீர்மானம்)

— இவையெல்லாம் காட்டுவதென்ன? குருச்சேவ் - பிரஷ்னேவ் ஆட்சிக்கால ரஷ்யாவின் அரசியல், பொருளாதார அமைப்பின் மீது 'மார்க்சிஸ்ட்' கட்சி எந்த விமர்சனமும் வைக்கவில்லை. முற்றாக ஆதரித்தது என்பதுதான் உண்மை.

ரஷிய கட்சியை திரிபுவாதக் கட்சி என்ற பழைய தீர்மானத்தை ஒதுக்கிவிட்டு, பிரஷ்னேவ் கட்சியுடன் அதிகாரப் பூர்வ தோழமை உறவு கொண்டாடிய இப்போலிகள், சோசலிச நிர்மாணம் - சோசலிச கட்டமைப்பு பற்றிய மாவோவின் கருத்துக்களை கலாச்சார புரட்சியையும் கடுமையாக எதிர்த்தனர். பின்னர் சீனாவில் டெங் கும்பல் ஆட்சிக்கு வந்து முதலாளித்துவ மீட்சியைத் தொடர்ந்த பிறகு அக்கட்சியுடன் அதிகார பூர்வ தோழமை உறவு கொண்டனர். சீனாவில் ரஷ்யாவிலும் முதலாளித்துவ மீட்சியும், தனியுடமை, ஏகாதிபத்திய மூலதன ஊடுருவலையும் 'மார்க்சிஸ்டுகள்' எதிர்க்கவில்லை. மே.வங்கம், கேரளாவில் அவர்களே அக்கொள்கைகளைப் பின்பற்றி அமெரிக்காவுடன் சீனாவும் ரஷியாவும் கைக் குலாவியபோது, அது உலக சமாதானத்துக்கான முயற்சி என்று ஆதரித்தனர்.

## முதலாளித்துவ நாடா? சோசலிச நாடா?

1985-ல் கோர்பச்சேவ் ஆட்சிக்கு வந்து கிளாஸ்நாஸ்ட், பெரஸ்த்ரோய்கா கொள்கைகளை அறிவித்து முதலாளித்துவ மீட்சியைத் தீவிரப்படுத்தியபோது அது சோசலிச அமைப்பில் ஏற்பட்ட குறைபாடுகளை சீர்திருத்தும் நடவடிக்கை என்று இப்போலிகள் வியாக்கியானம் செய்தனர். அதேபோல கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கடந்த ஆட்சிக் கவிழ்ப்புகளைக் கூட சோசலிச அமைப்பில் ஏற்பட்ட தவறுகள் - குறைபாடுகளின் விளைவுதான் என்றனர். இப்படி 1989ல் சொல்வதற்கு முன்பு, அதற்கு முந்தைய ரஷியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள 'சோசலிச' அமைப்பில் தவறுகள் - குறைபாடுகள் இருந்ததாக ஒரு போதும் இவர்கள் கூறியதே இல்லை. தற்போதைய ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு தான், கோர்பியின் பகிரங்க கம்யூனிச எதிர்ப்புக்குப் பிறகுதான் தாங்கள் அதை எதிர்ப்பதாகக் கூறுகின்றனர்.

இப்போதும் கூட ரஷியா சோசலிச நாடா, முதலாளித்துவ நாடா? என்று அவர்கள் தெளிவாக்கவில்லை. ரஷியாவில் முதலாளித்துவம் எப்போது, எப்படி மீண்டது? அங்கே சோசலிச சமூக அமைப்பில் தவறுகளும் குளறுபடிகளும் எப்போது துவங்கின என்பது பற்றி எந்த முடிவும் இல்லை. சோசலிச சமூகம் எப்படி பின்னோக்கிப் போக முடியும், சமூக மாற்றத்தில் முதலாளித்துவம் மீண்டும் எப்படி வரும் என்று மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்களைப் பார்த்து கேலி செய்த இப்போலிகள், இன்று ரஷ்யாவின் பின்னேற்றத்துக்கான காரணங்களை இன்னமும் சித்தாந்த ரீதியாக விளக்கத் தயாராக இல்லை.

கடந்த மாதத்தில் யேனயேவ் தலைமையிலான கும்பல் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பு சரிதான் என்றால் கோர்பி, பிரஷ்னேவ் ஆட்சியில் அவர்களின் பங்கு என்ன? ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் அவர்கள் சோசலிசத்தையா நிறுவ முயன்றார்கள்? முன்பு ரஷிய கட்சியை திரிபுவாதக் கட்சி என்று நிலைப்பாடு எடுத்தது சரிதான் என்றால் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்திய யேனயேவ் கும்பல் திரிபுவாதிகளா? அல்லது கம்யூனிஸ்டுகளா? கோர்பியின் திரிபுவாதத்துக்குப் பதிலாக யேனயேவின் திரிபுவாதத்தை ஆதரிப்பது எந்த வகையில் சரியானது? - இவை எதற்கும் விளக்கமளிக்காமல் தாங்கள் முன்பே கோர்பச்சேவை விமர்சித்து சரியான நிலைப்பாடு எடுத்துள்ளதாகக் கூறுவது சந்தர்ப்பவாத சாகசமின்றி வேறென்ன?

மேலும், இப்போதும் கூட மார்க்சிஸ்ட் கட்சியின் திட்டம், கொள்கை, புரட்சிக்கான யுத்த தந்திரப் பாதை முதலான அனைத்து நிலைப்பாடுகளுக்கும், கோர்பி - குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பலின் நிலைப்பாடுகளுக்கும் அடிப்படையில் எந்த மாற்றமுமில்லை.

இதேபோல, ரஷ்ய குருபீடத்தில் என்ன மாற்றம் நடந்தாலும் அவற்றை ஆதரித்துவரும் வலதுகள், கோர்பி மீண்டும் ஆட்சிக்கு வந்ததை ஆதரிக்கும் அதே சமயம் அவர் 'கம்யூனிஸ்ட்' கட்சியையே தடை செய்து விட்டதால் எப்படி தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்துவது என்று புரியாமல் தடுமாறி நிற்கின்றனர். மற்றபடி இடது, வலது கம்யூனிஸ்ட் கட்சிகளின் அடிப்படையான திரிபுவாதக் கொள்கைகளில் எந்த மாற்றமுமில்லை. இப்படி சந்தர்ப்பவாத சாகசமாடும் இப்போலிகள் தமது அணிகளை ஏய்க்க இன்னுமொரு கணக்கு போட்டுள்ளனர்.

அதாவது, ஏறத்தாழ ஒரு கோடிப் பேரை உறுப்பினர்களாகக் கொண்ட சோவியத் 'கம்யூனிஸ்ட்' கட்சி இன்று கலைக்கப்பட்டு - தடை செய்யப்பட்டுள்ள நிலையில், பிரஷ்னேவ் - யேனயேவின் ஆதரவாளர்கள் புதிதாக ஒரு கட்சியைத் தொடங்குவார்கள்: அதை முற்போக்கான கட்சி என்று ஆதரித்து சகோதர கட்சியாக அங்கீகரிக்கலாம்; அதன் மூலம் தாங்கள் தனிமைப்பட்டுக் கிடப்பதைப் போக்கி சர்வதேச அளவில் தமது கொள்கைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக மக்களையும் அணிகளையும் ஏய்க்கலாம் என்று 'மார்க்சிஸ்டுகள்' கணக்கு போட்டுள்ளனர். வலதுகளோ கோர்பி கும்பலை ஆதரிக்கும் அதே சமயம் அவரது முதலாளித்துவ மீட்சியை எப்படி நியாயப்படுத்துவது என்று புரியாமல் நிலைமையை ஆராய்ந்து வருவதாகப் பசப்புகின்றனர். ஜெர்மானிய, இத்தாலிய போலி சோசலிசக் கட்சிகளின் பாணியில் ஒரு கட்சியை கோர்பச்சேவ் ரஷியாவில் கட்டியமைத்தால் அதை "சோசலிசத்தை நோக்கிய சோதனை முயற்சி", "சோசலிசத்தின் மாறுபட்ட வடிவம்" என்று கூறி அதை ஆதரிக்கலாம் என்று கருதுகின்றனர்.

போலிக் கம்யூனிஸ்டுகளின் இந்த மோசடிகளை புரட்சிகர அணிகள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். கம்யூனிசப் புரட்சியாளர்களுடன் ஐக்கியப்பட்டு அதன் மூலம் மார்க்சிய - லெனினியத்தைப் பாதுகாக்கும் இன்றைய மகத்தான பணிக்குத் தோள் கொடுக்க வேண்டும்.

● குமார்

*நேற்றுவரை ரஷியாவை "சோசலிச நாடு" என்றும் கோர்பச்சேவை "தோழர்" என்றும் துதிபாடிய 'மார்க்சிஸ்டு'கள் இன்று திடீரென தமது நிலைபாட்டை மாற்றிக் கொண்டு கோர்பி - யெல்ட்சின் ஆட்சியை எதிர்ப்பதாக கூறுகின்றனர். இதற்கான விளக்கமோ காரணமோ கூறாமல் பொதுமக்களையும் தமது கட்சி அணிகளையும் ஏய்த்து மோசடி செய்கின்றனர்.*

படிப்பகம்

www.padippakam.com

# முதலாளித்துவத்தின் பெருந்தோல்வி! அழுகும் அமெரிக்காவே சாட்சியம்!

**அமெரிக்காவின் பொருளாதாரம் இராணுவ - ஆயுதப் பொருளாதாரமாகவும் யூகப் பொருளாதாரமாகவும் - சூதாட்டப் பொருளாதாரமாகவும் மாறிவிட்டது. முதலாளித்துவ கட்டமைப்புக்கே உட்படாமல் - முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளின் கற்பனைக்கே எட்டாமல் தன்னை அன்னியப்படுத்தி நிற்கிறது.**

ரஷ்யாவின் அரண்மனைப் புரட்சி தோற்றதும் கம்யூனிசத்திற்கு எதிரான பிரச்சாரங்கள் உலகெங்கும் தலைதூக்கியுள்ளன. முதலாளித்துவ அறிஞர்களும் - அறிவு ஜீவிகளும் - பத்திரிக்கையாளர்களும் முதலாளித்துவ ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும், சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தையும் தூக்கிப் பிடித்து ''சர்வரோக நிவாரணி' என்கிறார்கள்; ''அணையா ஜோதி'' என்கிறார்கள். ''சோசலிச பொருளாதார கட்டுமானம் தோற்றுவிட்டது; காலாவதியாகி விட்டது'' என ரஷ்யாவையும் ''முதலாளித்துவ சுதந்திர சந்தைப் பொருளாதாரம்தான் நிலையானது; நீடித்தது; பிரச்சினையில்லாமல் முன்னேறக் கூடியது'' என மேலை நாடுகளையும் குறிப்பாக அமெரிக்காவையும் கை காட்டி உரத்துக் கூச்சலிடுகிறார்கள்.

ரஷ்யாவில் கடந்த 35 ஆண்டுகளாக இருந்தது சோசலிச பொருளாதாரமும் அல்ல; சோசலிச விஞ்ஞானம் தோல்வியடையாது என்பதும் ஒருபுறம் இருக்கட்டும். இன்று அவர்கள் தூக்கிப் பிடிக்கும் முதலாளித்துவ சுதந்திர சந்தைப் பொருளாதாரம் எப்படிப்பட்டது? நிலையானதா? நீடித்ததா? அமெரிக்காவின் பொருளாதார நிலையைப் பார்த்தாலே இதற்குரிய பதில் கிடைத்து விடுகிறது.

அமெரிக்காவின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றிருப்பதற்கு அதன் வங்கித் துறையே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 2200 கோடி டாலர் சொத்துடைய 28 அமெரிக்க வங்கிகள் லாபமின்றி இயங்குகின்றன. 4300 கோடி 'டாலர்' சொத்துடைய 45 வங்கிகள் மூலதன விகிதாச்சாரப்படி 3% நட்டத்தில் இயங்குகின்றன. 92,600 கோடி டாலர் சொத்துடைய 150 வங்கிகள் 6% வரை நட்டமடைந்து செயல்படுகின்றன. 70,000 கோடி 'டாலர்' சொத்துடைய 15 பெரிய வங்கிகளில், 13 வங்கிகள் நட்டத்திலிருப்பதோடு அதன் சொத்து மதிப்பு குறைந்து கடன் அதிகரித்துள்ளது.

அமெரிக்க ஐக்கிய குடியரசின் இன்சூரன்ஸ் முதலீட்டு கம்பெனி (FDIC) மோசமான நிதி நிலையிலேயே இயங்கி வருகிறது. இன்று FDIC, 700 கோடி டாலரை செலவு செய்து 221 வங்கிகளை இழுத்து மூடிக் கொண்டுள்ளது.

உலகப் போலீசுக்காரனாக விளங்கும் அமெரிக்காவின் ராணுவச் செலவு மேலும் மேலும் பூதாகரமாகிக் கொண்டிருக்கிறது. 'நேட்டோ' ராணுவ ஒப்பந்த நாடுகளில் ஒன்றான அமெரிக்கா பிற 15 நாடுகளின் மொத்த ராணுவச் செலவைக் காட்டிலும் 40 சதவிகிதம் அதிகம் செலவழிக்கிறது. இதை பிறநாடுகள் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு ராணுவத்தைப் பலப்படுத்துவது - பாதுகாப்புப் பற்றி அதிகம் கவலைப்படாமல் உற்பத்தியில் கவனம் செலுத்தி வளர்ந்து வருகின்றன. அமெரிக்காவின் உற்பத்தித் துறையோ மேலும் மேலும் சுருங்கிக் கொண்டிருக்கிறது.

அறிவியல் - தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளில் முன்னணியில் இருந்த அமெரிக்கா இன்று பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. அதிநவீன தொழில் நுட்ப பொருள் உற்பத்தியே - புதிய கண்டுபிடிப்புகளே இன்றைக்கு அனைத்தையும் தீர்மானிக்கும் காரணியாக மாறி வருகிறது. இதில் ஜப்பான் இன்று ஆதிக்கம் பெற்றுள்ளது. அதி நவீன தொழில் நுட்ப பொருள் உற்பத்திக்கு அடிப்படை தேவையான சிலிகான் துண்டை ஜப்பான்தான் பெருமளவு தயாரிக்கிறது. உலக சந்தையில் சிலிகான் துண்டு வர்த்தகத்தை 48.6 சதவிகிதத்தை ஜப்பான் கட்டுப்படுத்துகிறது. அமெரிக்காவோ 38.8 சதவிகிதத்தையே கட்டுப்படுத்துகிறது. இத்துறையில் ஜப்பான் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் இருப்பதால் இன்று அமெரிக்கா புதிய வகை விஞ்ஞான முன்னேற்றத்திற்காக ஜப்பானிடம் கையேந்தி நிற்கிற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அமெரிக்காவின் உற்பத்தி பெருமளவிற்கு அந்நிய நாடுகளையே குறிப்பாக ஜப்பான், ஜெர்மனை சார்ந்திருக்கிறது.

சொர்க்கபுரி அமெரிக்காவில் சுரங்கப் பாதை; இரவைக் கழிக்கும் வீடற்றோர்.



உலகளவில் மூலதனத்தைக் கொட்டி அந்நிய நாடுகளைச் சுரண்டி மேலாதிக்கம் செலுத்திவரும் அமெரிக்காவின் பொருளாதாரம் படுகுழியில் விழுந்துள்ளதற்கு இன்னொரு காரணம், அமெரிக்காவை அந்நிய நாடுகள் குறிப்பாக ஜப்பான், ஜெர்மன் சுரண்டி விடுகின்றன. அமெரிக்காவின் உற்பத்தித் துறை, கட்டுமானத் துறை (ரியல் எஸ்டேட்) கருவூல கடனீட்டுப் பத்திரங்கள் ஆகியவற்றை அந்நிய மூலதனம் பெருமளவிற்கு தன்வசப்படுத்திக் கொண்டுள்ளன. அந்நிய மூலதனத்தால் அமெரிக்காவின் கடன், வட்டி, பற்றாக்குறை அதிகரிப்பதுடன் லாபம் பெருமளவிற்கு வெளியேறுகிறது. 1987-ல் அமெரிக்கா அந்நிய நாடுகளில் வைத்திருந்த மூலதனம் 117 கோடி டாலர்! ஆனால், அதே ஆண்டில் அமெரிக்காவில் 154 கோடி டாலர் மூலதனம் அந்நிய கம்பெனிகளின் கட்டுப்பாட்டிலிருந்தன இந்நிலை வருடந்தோறும் வளர்ந்து கொண்டுதான் உள்ளது.

அமெரிக்க பட்ஜெட்டில் பற்றாக்குறை ஆண்டுதோறும் கட்டுக்கடங்காமல் அதி‌ரித்துக் கொண்டிருக்கிறது. இதை ஈடுகட்ட கருவூல கடனீட்டுப் பத்திரங்களை அமெரிக்கா வெளியிடுகிறது. 1980-ன் தொடக்கத்தில் நடப்பு கணக்கில் ஏற்பட்ட பற்றாக்குறையை ஈடுகட்ட இதுபோன்று கருவூல கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்ட அமெரிக்கா, நாளடைவில் அதாவது 1980-ன் மத்தியில் மூலதனத்திலேயே பற்றாக்குறை ஏற்பட்டு கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டது. 1988-ன் கணக்குப்படி 17% கடனீட்டு பத்திரங்களையும் 12% உற்பத்திக்குரி சொத்தையும் அந்நிய மூலதனம் கைவசப்படுத்தியிருந்தது. இந்த விகிதாச்சாரம் மேலு மேலும் வளர்ந்ததன் விளைவாக இன் அமெரிக்காவின் பொருளாதாரத்தையு மூலதன சந்தையையும், அந்நிய மூலத கட்டுப்படுத்துகிறது. ''அந்நிய மூலத தின் விருப்பப்படி ஆடும் பிணைக் கைதி கிவிட்டது. அமெரிக்கப் பொருளாதா இந்நிலை தொடர்ந்தால் பங்கு சந்தைய கடுமையான மோதலை தூண்டிவிடும்'' எ கிறார், அமெரிக்காவின் பிரபல பொரு தார நிபுணர் இ.பிரட் பெர்ஸ்டன்.

அமெரிக்காவின் வர்த்தகத்திலும் நிய 'கம்பெனிகளே செல்வாக்கு செலு கின்றன. அமெரிக்க கம்பெனிகளைக் கா லும் அமெரிக்காவில் உள்ள அந்நிய கம் னிகள் கச்சாப் பொருட்களை அதிகம் குமதி செய்கின்றன. அந்நிய கம்பெ




படிப்பகம்

www.padippakam.com



போதைக்கு அடிமையாகிக் கிடக்கும் அமெரிக்க இளைஞர்கள்.




தமது லாபத்தில் 80 சதவிகிதத்தை அமெரிக்காவிலிருந்து தமது தாய்க் கம்பெனிகளுக்கு கடத்துகின்றன. அமெரிக்காவின் வியாபார - வர்த்தக பற்றாக்குறைக்கு பாதியளவு காரணம், இந்த அந்நியக் கம்பெனிகளின் இறக்குமதியே ஆகும். இதேபோல் அமெரிக்காவின் ஏற்றுமதியும் படுவீழ்ச்சியை சந்தித்துள்ளது. அந்நிய நாடுகளைச் சுரண்டுவதன் மூலமே தனது பொருளாதாரத்தின் நாடியை பிடித்து வைத்திருக்கிறது. 1985-ன் கணக்குப்படியே அந்நிய நாடுகளிலுள்ள அமெரிக்க பன்னாட்டு தொழிற் கழகங்களின் ஏற்றுமதி அளவு 70,400 கோடி டாலர்! அதே பொழுதில் அமெரிக்கா, 21,600 கோடி டாலர் அளவே தன் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்தது!

அமெரிக்காவின் கச்சாப் பொருள் உற்பத்தியும் சுருங்கிப் போய் அந்நிய நாடுகளை சார்ந்திருக்கிற நிலையை எய்திவிட்டது. இன்று அமெரிக்கா வியாபார சாதனங்கள், மின் மற்றும் மின்னணு சாதனங்கள், அறிவியல் உபகரணங்கள், விவசாயக் கருவிகள் முதலியவற்றை ஏற்றுமதி செய்வதை விட அதிக அளவு இறக்குமதி செய்கிறது. நாட்டின் தேவை ஒருபுறம் விரிந்து கொண்டே போவதும், மறுபுறம் பொருள் உற்பத்தியளவு சுருங்கிக் கொண்டே போவதும் நீண்டு கொண்டே போவதைக் கண்டு செய்வதறியாது விழிபிதுங்கி நிற்கிறது அமெரிக்கா. 1979-ல் 600 கோடி டாலர் அளவிற்கு வீட்டு உபயோகப் பொருட்களைத் தயாரித்த அமெரிக்கா, 1987-ல் 200 கோடி டாலர் அளவே தயாரித்தது. அதே சமயம் தேவை எதிர்மறையாக இருந்தது.

இவையன்றி அமெரிக்காவின் சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்குரிய அரசு ஒதுக்கீட்டையும் குறைத்துக் கொண்டே வருகிறார்கள் ஆட்சியாளர்கள். 1980- லிருந்து 88-க்குள் கல்விக்கென ஒதுக்கிய நிதியை 63% குறைத்துவிட்டது அமெரிக்க அரசு. 1981-88-க்குள் வீட்டு வசதி துறைக்கு உரிய தொகையில் 81% வெட்டி விடட்டது. சுற்றுப்புறச் சூழலுக்கு செலவழித்த தொகையை பத்தாண்டுகளில் (1978 - 88) பாதியாக்கிவிட்டது. இதேபோல் தொடர்ந்து உற்பத்தியை குறைப்பதாலும், ஆலைகளை இழுத்து மூடுவதாலும் தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் குறைத்து வருகிறது. மேலும் அமெரிக்காவின் சமூக உறவு, குடும்ப உறவு, தனிமனித ஒழுக்கம் முதலான அனைத்தும் சீரழிந்து கிடப்பதை உலகமே அறியும்!

அமெரிக்காவில் முன்னேற்றப் பாதையில் இருப்பது ஆயுத உற்பத்தியும் போதைப் பொருள் விற்பனையும்தான்! அமெரிக்காவில் பொருள் உற்பத்தி - வர்த்தகத்தின் மூலதனத்தைக் காட்டிலும் ஆயுத உற்பத்தியும் மற்றும் போதைப் பொருள் விற்பனையில் புரளும் மூலதனம் அதிகரித்து விடுமோ என அவர்களே (?) அஞ்சுகிறார்கள். அமெரிக்காவிலுள்ள வங்கிகள் பல போதைப் பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல், கள்ளப் பணக்கடத்தல் முதலானவற்றிற்கே ரகசியமாக முன்னுரிமை கொடுத்து சேவை புரிகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், அமெரிக்காவின் பொருளாதாரம் இராணுவ - ஆயுதப் பொருளாதாரமாகவும், யூகப் பொருளாதாரமாகவும் - சூதாட்டப் பொருளாதாரமாகவும் மாறிவிட்டது. முதலாளித்துவ கட்டமைப்புக்கே உட்படாமல் - முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளின் கற்பனைக்கே எட்டாமல் தன்னை அன்னியப் படுத்தி நிற்கிறது. முதலாளித்துவ சுதந்திர சந்தைப் பொருளாதாரம் இப்படி 1960 வாக்கில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டபோது அமெரிக்க ஆட்சியாளர்கள் ஏற்கனவே வகுத்த அமைப்பை மறு ஒழுங்கு செய்ய வேண்டி நேர்ந்தது. அதாவது, ''யூகப் பொருளாதாரம்' திட்டமிடப்பட்ட பொருள் உற்பத்திக்கு நேரெதிரான அராஜகமான சூதாட்ட முறையாகும். அன்று பொருள் உற்பத்தியை பெருமளவில் முடக்கி எண்ணற்ற தொழிலாளர்களை வீதியில் வீசினார்கள். 'யூக மூலதனத்திற்கு' அகலக் கதவு திறந்து விட்டார்கள். பங்குசந்தை சூதாட்டமும், போதைப் பொருள் வியாபாரமும் ஆயுதக் கடத்தலும் பெருகியது. இன்று இவை அமெரிக்கப் பொருளாதாரத்தை ஆட்டுவிக்கும் பேய்களாக மாறிவிட்டன.

***நாட்டின் தேவை ஒருபுறம் விரிந்து கொண்டே போவதையும், மறுபுறம் பொருள் உற்பத்தியளவு சுருங்கிக் கொண்டே போவதையும் கண்டு செய்வதறியாது விழி பிதுங்கி நிற்கிறது அமெரிக்கா.***

— இப்படி மரணப் படுக்கையில் வீழ்ந்து மூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறது, அமெரிக்கா! அமெரிக்காவின் ஆதிக்க வெறியும், யுத்த வெறியுமே இதற்கான முழுக் காரணம். உலகையே தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஆதிக்க வெறி பிடித்து அலைந்தது. பிற நாட்டின் உள்நாட்டு விவகாரங்களிலும் அத்துமீறி தலையிட்டது. தலையாட்டாத ஆட்சியாளர்களின் தலைகளையெல்லாம் பல சதிகளை செய்து வெட்டி வீழ்த்தியது. பல நாடுகளில் ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியது. இதற்காக யாரையும் பயன்படுத்த தயங்கவில்லை. அனைத்து ஒழுங்கு முறைகளையும் மீறியது. பல நாடுகளின் கிரிமினல் கும்பலுக்கும் பிரிவினை சக்திகளுக்கும் தனது அடிவருடி குழுக்களுக்கும் ரகசியமாக ஆயுதங்களைக் கொடுத்து தூண்டிவிட்டது. தமது ஆதிக்கத்திற்கு எதிராக போராடுபவர்களிடையே போதைப் பொருள் - ஆபாசக் கலாச்சாரத்தைப் பரப்பி அடிமைகளாக்கியது. உலகையே தனது விரல் நுனியில் நிறுத்தி பார்ப்பதற்காக ''புதிய உலக ஒழுங்கமைப்பு'' திட்டத்தைப் போட்டுக் கொண்டு ராணுவத்திற்கும், விண்வெளிப் போருக்குமென ரகசியமாக பணத்தைக் கொட்டியது.

இன்று இவையெல்லாம் சேர்ந்து அமெரிக்காவையே திருப்பித் தாக்குகின்றன; அமெரிக்கப் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணிகளாகி விட்டன. இது முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத விதி! தானே தனக்கு படுகுழி தோண்டிக் கொள்வதை முதலாளித்துவ பிரச்சாரகர்கள் என்னதான் கூச்சல் போட்டாலும் தடுக்க முடியாது! ● ராசு.

படிப்பகம்

www.padippakam.com


## உத்திரப் பிரதேசம்:

# ராம ராஜ்ஜியத்தின் முக விலாசம்

**குறுகிய இனவெறியைத் தூண்டிவிடுவது, சீரழிந்த அரசியல் - பொருளாதார நிலைமையை சாதகமாக்கிக் கொண்டு நாட்டின் தலைவிதியை மாற்றப் போவதாக உறுதியளிப்பது — இவை பாசிஸ்டுகளும் நாஜிகளும் கையாண்ட உத்திகள். பாரதீய ஜனதாவின் இந்துவெறி சூழ்ச்சிகளும் அத்தகையது தான்.**

ராம ராஜ்ஜியத்தை நிறுவுவதே எங்கள் லட்சியம் என்று கூறிக் கொண்டு அயோத்தி விவகாரத்தை முன்நிறுத்தி உ.பி.யில் ஆட்சியைப் பிடித்துள்ளது, பாரதீய ஜனதா கட்சி. உ.பி.மட்டுமின்றி ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஆட்சியைக் கைப்பற்றியும், நாடாளுமன்றத்தில் சிறுபான்மை காங்கிரசு அரசை அச்சுறுத்தும் வலுவான எதிர்க் கட்சியாகவும் அது குறுகிய காலத்திலேயே வளர்ச்சி பெற்றுள்ளது.

ராமராஜ்ஜியம் என்றால் அவதாரக் கடவுள் ராமன் ஆண்டதைப் போன்ற பொற்கால ஆட்சி; இந்து தர்மத்தைக் காத்து அதர்மத்தை அழிப்பது; இதர சிறுபான்மை மதத்தினரின் உயிருக்கும் உடைமைக்கும் ஆன்மீகப் பணிகளுக்கும் பாதுகாப்பு அளிப்பது - என்பதாக பாரதீய ஜனதா கட்சியினர் தேர்தலின் போது மக்களை நம்பச் சொன்னார்கள். அத்தனையும் பொய்; பித்தலாட்டம்! இந்து வெறியை நெஞ்சிலே மறைத்து உதட்டிலே தேன் தடவிய வாக்குறுதிகள் தான் இவை. ராமராஜ்ஜியம் என்றால் என்னவென்று புரியாதவர்கள் பாரதீய ஜனதாவின் இருமாத கால உ.பி. மாநில ஆட்சியை சற்று உரசிப் பார்த்தாலே போதும். அதன் உண்மைச் சொரூபத்தை உணர்ந்து கொள்ள முடியும்.



இந்துவெறியர்களின் உத்தரவுப்படி அயோத்தியிலுள்ள வழிபாட்டுத் தலத்தைச் சுற்றியுள்ள கம்பிவேலி அகற்றப்படுகிறது.

### நவம்பர்: 18
### நரவேட்டைக்கான நாள்

ராமராஜ்ஜியத்திற்கு எல்லாம் தயாராகி விட்டன; ஆனால் அயோத்தியில் ராமன் தான் இல்லை. ராமன் இல்லாமல் ராமராஜ்ஜியத்தை நடத்த முடியுமா? எனவே ஆட்சியைப் பிடித்ததுமே அயோத்தியிலுள்ள பாபர் மசூதியை இடித்து ராமர் கோயிலைக் கட்டியே தீருவோம் என்று இந்துவெறி அரசு சூளுரைத்தது. உ.பி.யில் ஆட்சி அமைந்ததும் முதல்வர் கல்யாண்சிங்கும் பாரதீய ஜனதாவின் அகில இந்தியத் தலைவரான முரளி மனோகர் ஜோஷியும் தமது கட்சி எம்.எல்.ஏ.க்களைத் திரட்டிக் கொண்டு அயோத்தியிலுள்ள பாபர் மசூதிக்குள் நுழைந்து, அங்கு இந்து வெறியர்களால் திருட்டுத் தனமாக வைக்கப்பட்ட ராமர் சிலையின் முன்னே கோயிலைக் கட்டியே தீருவோம் என சபதமேற்றனர். இதைத் தொடர்ந்து பாரதீய ஜனதாவின் விசுவ இந்து பரிஷத், பஜ்ராங்தளம் ஆகிய தீவிரவாத இந்து வெறி அமைப்புகள் ஏற்கனவே ரத்தம் குடித்தது போதாது என்று மீண்டும் நரவேட்டைக்கு நாள் குறித்து விட்டன. நவம்பர் 18 அன்று அயோத்தியில் மீண்டும் இரண்டாவது கர சேவை நடக்கும்; ராமர் கோயில் கட்டும் பணி தொடங்கும் என அவை எச்சரித்துள்ளன.

ஆனால் பாரதீய ஜனதா அரசு, நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காண்பது, முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி அமைதி வழியில் தீர்வு காண்பது என்பதாக ஜனநாயகப் பாசாங்கு செய்கிறது. தமக்கும் தீவிரவாத விசுவ இந்து பரிஷத்துக்கும் முரண்பாடு நிலவுவதைப் போல நாடகமாடுகிறது. உண்மையில் பாரதீய ஜனதாவும் விசுவ இந்து பரிஷத்தும் பாபர் மசூதியை இடித்து ராமர் கோயிலைக் கட்டுவதில் உறுதியாகவே உள்ளன.

இதன்படி, நவம்பர் 18 அன்று விசுவ இந்து பரிஷத், பஜ்ராங்தளம், ஸ்ரீராம் கர சேவை சமிதி முதலான இந்துவெறி அமைப்புகள் அயோத்தியிலுள்ள மசூதியை இடித்து கோயில் கட்டும் பணியைத் தொடங்கும்; பாரதீய ஜனதா அரசு இத்திருப்பணியை நிறைவேற்ற உதவும் வகையில் தடைகளை நீக்கும். அதாவது, முந்தைய முலயங்சிங் யாதவ் அரசின் அதிகாரிகளையும் ஊழியர்களையும் இடமாற்றம், பணிமாற்றம் செய்வது; விசுவாச இந்துவெறி அதிகாரிகளைப் பொறுப்பில் அமர்த்துவது; கரசேவகர்களின் சட்டவிரோத நடவடிக்கைக்கு ஊறு விளைவிக்காமல் பார்த்துக் கொள்வது முதலானவைதான் பாரதீய ஜனதா அரசின் தடை நீக்கும் நடவடிக்கைகள்!

இந்நிலையில் மத்தியிலுள்ள காங்கிரசு அரசு, வழிபாட்டுத் தலங்களின் உரிமை காப்பு மசோதா ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்துள்ளது. இதன்படி ஆகஸ்ட் 15, 1947-ன் போது இந்தியாவிலுள்ள வழிபாட்டுத் தலங்கள் எந்த மதத்தினரால் வழி



படிப்பகம்

www.padippakam.com

பாடு செய்து பாதுகாக்கப்பட்டனவோ, அவற்றை வேற்று மதத்தினர் புதிதாக உரிமைகோர முடியாது. இருப்பினும் பிரச்சினைக்குரிய அயோத்தியிலுள்ள வழிபாட்டுத் தலத்திற்கு மட்டும் இம்மசோதா விலக்களித்துள்ளது.

அயோத்தியிலுள்ள வழிபாட்டுத் தலத்தைக் கைப்பற்ற முயற்சிக்கும் அதே வேளையில், மதுராவில் உள்ள முஸ்லிம் கல்லறையை கிருஷ்ண ஜென்ம பூமி என்றும் காசியிலுள்ள விசுவநாதர் ஆலயத்தை ஒட்டிய பகுதிகளை ஆக்கிரமிக்கவும், இது தவிர நாடு முழுவதும் சிறுபான்மை மதத்தினரின் 3000 வழிபாட்டுத் தலங்களை அபகரிக்கவும் இந்து வெறியர்கள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர். அவர்களது சூழ்ச்சி - சதிகளுக்கு இம்மசோதா ஒரு தடைக்கல்லாக அமைந்துவிட்டது. எனவே, ''இந்துக்களின் வழிபாட்டு உரிமையைப் பறிக்கும் மசோதா இது'' என்று இதற்கெதிராக நாடு தழுவிய அளவில் இயக்கம் நடத்த இந்து வெறியர்கள் தீர்மானித்துள்ளனர். இதன்படி மதுராவிலுள்ள 'கிருஷ்ண ஜென்ம பூமி' காசி விசுவநாதர் கோயிலை 'மீட்பதற்காக' பெரிய அளவில் இயக்கம் நடத்துவது; நாட்டு மக்களின் கவனத்தை இதை நோக்கி குவியச் செய்வது; அதே நேரத்தில் அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்ட ரகசிய ஏற்பாடுகளைச் செய்வது; திட்டமிட்டபடி நவம்பர் 18 அன்று இரண்டாவது கர சேவையை (கடப்பாரை சேவையை) செய்து முடிப்பது என்பது இந்து வெறியர்களின் திட்டம்.

### இந்து வெறியர்களின் உத்திரவுப்படி இந்து ராஜ்ஜியம்

இதன்படி, பஜ்ராங் தள தலைவரும், பாரதீய ஜனதாவின் எம்.பி.யுமான வினய் கத்தியார், அயோத்தியிலுள்ள பாபர் மசூதியைச் சுற்றி பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள கம்பி வேலியை நீக்க வேண்டும் எனக் கோரியதும் பாரதீய ஜனதா அரசு அவற்றை நீக்கி விட்டது. அதைத் தொடர்ந்து சாதுக்களும் சன்னியாசிகளும் முஸ்லிம் வாடை வீசும் ஊர்களின் பெயர்களை மாற்ற வேண்டுமென அரசை நிர்பந்தித்தனர். அவர்களின் ஆலோசனைப்படி பைசாபாத் நகரத்தை சாகேதம் என்றும், லக்னோவை லட்சுமணபூர் என்றும், அலகாபாத்தை பிரயாகை என்றும் பெயர் மாற்றம் செய்ய பாரதீய ஜனதா அரசு தீர்மானித்துள்ளது. போதாக் குறைக்கு உ.பி. அரசின் பொதுப் பணித்துறையைக் கொண்டு மாநிலத்திலுள்ள இந்து கோயில்களுக்கு சாலை போடுவது, மின் விளக்கு போடுவது முதலான திருப்பணிகளை அரசு செலவிலேயே செய்து வருகிறது. மீரட், மல்லியானா, ஹாசிம்புரா முதலான இடங்களில் முஸ்லிம்களை நரவேட்டையாடிய திரிபாதி போன்ற போலீசு அதிகாரிகளுக்கு பதவி உயர்வு அளித்துள்ளது. அயோத்தியில் ரகசியமாக நில ஆக்கிரமிப்பு செய்துள்ள கரசேவை சமிதி, நடைபெற உள்ள இரண்டாவது கரசேவைக்கு தங்குமிடங்களைக் கட்டிக் கொள்ள உ.பி. அரசு சட்ட விரோதமாக அங்கீகாரம் அளித்துள்ளது. இதேபோல முந்தைய கரசேவையின்போது துப்பாக்கி சூட்டிற்குப் பலியான தியாகிகளுக்கு நினைவுச் சின்னம்



பிலிபிட்டில் இந்துவெறி அரசு நடத்திய நரவேட்டையில் மகனைப் பறிகொடுத்த தாய் - தனது மூத்த மகனுடன்.

அமைக்கவும் பாரதீய ஜனதா அரசு முயற்சித்து வருகிறது.

மேலும் வரும் டிசம்பர் மாதத்தில் உ.பி.யில் 4 பாராளுமன்றத் தொகுதிகளிலும், 23 சட்டசபை தொகுதிகளிலும் இடைத் தேர்தல் நடைபெற உள்ளது. எனவே, தேர்தல் வெற்றிக்காக இந்து வெறியைக் கிளறி விட்டு ஆதாயமடையும் நோக்கத்துடன் அயோத்தியில் கோயில் கட்டுவதை முனைப்புடன் செய்து வருகின்றனர், இந்து வெறியர்கள். இதனால் மீண்டும் வடமாநிலங்கள் ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படும் அபாயம் நிலவுகிறது. சிறுபான்மை மதத்தினர் மீண்டும் பீதியில் உறைந்து போயுள்ளனர். உ.பி. அரசு மேற்கொண்டுள்ள அண்மைக் கால நடவடிக்கைகள் இதை மேலும் உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

### சிறுபான்மையினர் மீது பயங்கரவாத சட்டம்

கடந்த ஜூலை 13 அன்று உ.பி.யிலுள்ள பிலிபிட்டில் அப்பாவி சீக்கியர்கள் 10 பேர் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு போலீசுடன் நடந்த மோதலில் இறந்ததாக பாரதீய ஜனதா அரசு கதை கட்டியது. ஆனால், பேருந்தில் வந்து கொண்டிருந்த சீக்கிய யாத்ரீகர்களை வழிமறித்து, ஆண்களை மட்டும் வெளியே இழுத்துப் போட்டு போலீசார் சுட்டுக் கொன்றனர் என்ற உண்மை இப்போது ஆதாரபூர்வமாக வெளியாகியுள்ளது. சீக்கிய யாத்ரீகர்களை ஏற்றி வந்த பேருந்தின் ஓட்டுநரான முஷாரஃப் என்ற இளைஞர் போலீசாரின் அச்சுறுத்தல்களை மீறி, டெல்லிக்குத் தப்பிச் சென்று இந்த உண்மையை பகிரங்கப் படுத்தியுள்ளார். ''போலீசாரால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். இருப்பினும் நாட்டு மக்களுக்கு நடந்த உண்மைகளை தெரிவித்து விட வேண்டும் என்பதே என் நோக்கம்'' என்கிறார் அந்த இளைஞர். இந்தப் படுகொலையைத் தலைமையேற்று நடத்தியவன் திரிபாதி என்கிற இந்துவெறி பிடித்த போலீஸ் அதிகாரி. ஏற்கனவே மீரட், மல்லியானா, ஹாசிம்புரா முதலான இடங்களில் முஸ்லீம்கள் மீது நரவேட்டையை நடத்திய கொலைகாரன்தான் இவன்.

**சாதுக்கள் சன்னியாசிகளின் ஆலோசனைப்படி பைசாபாத் நகரத்தை சாகேதம் என்றும், லக்னோவை லட்சுமணபூர் என்றும், அலகாபாத்தை பிரயாகை என்றும் பெயர் மாற்றம் செய்ய பாரதீய ஜனதா அரசு தீர்மானித்துள்ளது.**

உ.பி.யின் வட கோடியிலுள்ள தெராய் பிராந்தியத்தில் பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் சீக்கிய மதத்திற்கு மாறியுள்ளனர். பஞ்சாபில் தலை விரித்தாடும் பயங்கரவாதத்தால் அகதிகளாக நூற்றுக் கணக்கான சீக்கியர்கள் தெராய் பிராந்தியத்தில் குடியேறியுள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்கள் மதம் மாறிய ஆத்திரத்தாலும், பஞ்சாபிலிருந்து இந்துக்களை சீக்கிய பயங்கரவாதிகள் விரட்டுவதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவுமே பாரதீய ஜனதா அரசு அப்பாவி சீக்கியர்களைக் கொன்றொழித்துள்ளது. மேலும், இப்பகுதியில் பயங்கரவாத தடுப்பு மற்றும் கலவரப் பகுதி சட்டத்தை ஏவி சீக்கியர்களை சித்திரவதை செய்து வருகிறது.

பிலிபிட் படுகொலையைத் தொடர்ந்து தெராய் பிராந்தியத்தில் தமீலா கோன், நிபூரியா, பில்சுந்தா, பூர்ணபூர் முதலான இடங்களில் 10-க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் போலீசாரால் கொன்றொழிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் சீக்கிய பயங்கரவாதி



படிப்பகம்

www.padippakam.com

# மதுக் கஷாயமா? மரணக் கஷாயமா?

தஞ்சை திருத்துறைப் பூண்டியிலுள்ள 75 சதவிகித தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு எமனாக விளங்குபவன், மதுக் கஷாயம் என்ற பெயரில் சாராயத்தை விற்கும் பெரும்புள்ளி ராயப்ப நாடான். இவ்வூர் கிறித்துவ சங்கத் தலைவனாக இருந்து கொண்டு மாதாகோவில் பெண்கள் பள்ளியின் மூலமும் கொள்ளையடித்து வருகிறான். ஊர்ப் பாதிரியாரையும் போலீசையும் கைக்குள் போட்டுக் கொண்டு பல அட்டூழியங்களைப் புரிந்து வருகிறான்.

ராம மடத்தெரு, மீனாட்சி வாய்க்கால் தெரு என பல இடங்களில் இவனது 'மதுக்கஷாயம்' விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் பல ஆயிரங்களை தினம் சுருட்டும் இவன், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உட்பட போலீசுக்கு மாமூலாக ஒரு பகுதியைக் கொடுக்கிறான். ஏதாவது சிறிய பிரச்சினை என்றாலும் போலீசு ரௌடிகளும், இவனால் கூலிக்கு அமர்த்தப்பட்ட அடியாட்களும் பதில் சொல்வார்கள். இரண்டு வருஷத்திற்கு முன்பு பத்திரிக்கைகளில் அம்பலப்பட்டதைத் தொடர்ந்து 'மதுக்கஷாயக்' கடைகளை மூடினான், ராயப்ப நாடான். ஆனால், மீண்டும் தனது 'ராஜதர்பாரை' தொடங்கி விட்டான்.

'மதுக்கஷாயம்' குடிப்பவர்கள் கண் முன் தெரியாமல் போய் வேலிகளில் முட்டிக் கொள்வதால், இக்கடைகளை 'வேலி முட்டிக் கடை' என மக்கள் குறிப்பிடுகிறார்கள். 'மதுக்கஷாயம்' குடித்துவிட்டு ஆண்கள் அம்மணமாக ரோட்டில் கிடப்பதும், அவர்களது மனைவிமார்கள் வந்து துணியைப் போர்த்தி அழைத்துச் செல்வதும் இங்கு நடக்கும் அன்றாடக் காட்சி. ஆண்களால் இப்படி அவமானப்படுவது மட்டுமல்லாமல் அடி உதையும்பட்டு வெறுத்துப் போய் சில பெண்கள் தற்கொலை செய்து கொண்டனர். 'மதுக்கஷாயம்' குடித்துவிட்டு பஸ்ஸில் அடிபட்டு இறந்தவர்கள், குடல் வெந்து, நோய் வந்து இறந்தவர்கள், நிதானம் தவறியதால் தண்ணீரில் மூழ்கி இறந்தவர்கள் ஏராளம்.

இம்மரணக் கஷாயக் கடைகளுக்கு எதிராக எந்தக் கட்சியும் வாய் திறக்கவே இல்லை. இத்தனைக்கும் பத்தாவது முறையாக சட்டசபைக்கு வந்திருக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளின் (சி.பி.ஐ.) தொகுதி இது. 'செல்வி - அம்மா' ஆட்சிக்கு வந்ததும் மலிவு விலை கடைகளை மூட உத்தரவு இட்டிருக்கிறார். ''மலிவு விலை கடை இருந்தால் என்ன, போனால் என்ன? எங்களுக்கு இருக்கவே இருக்கிறது மதுக்கஷாய பிராண்டு லைசன்சு'' எனத் திமிரோடு வலம் வருகிறார்கள் ராயப்ப நாடான்கள்!

தகவல்: புதிய ஜனநாயக வாசகர் வட்டம், வேதாரண்யம்.

---

கள் என்று கதை கட்டிய அரசு அவர்களது உடல்களைக் கூட உறவினர்களிடம் தராமல் தானே எரித்துவிட்டது. ''பஞ்சாப் பயங்கரவாதிகள் ரகசியமாக இங்கு ஊடுருவியுள்ளனர். அவர்களுக்கு நீங்கள்தான் அடைக்கலம் கொடுத்து மறைத்து வைத்துள்ளீர்கள். எனவே உங்களை இந்திய குற்றவியல் சட்டம் 216 மற்றும் 304-ன் கீழ் (தீவிரவாதிகள் தடுப்பு மற்றும் கலவரப் பகுதி சட்டம்) ஏன் கைதுசெய்யக் கூடாது'' என்று இப்பகுதியிலுள்ள அப்பாவி சீக்கியர்களைப் போலீசார் கைது செய்து சித்திரவதை செய்வது அன்றாட வாடிக்கையாகி விட்டது. மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் இக்கொடுஞ்செயலைக் கண்டித்து சீக்கிய அமைப்புகளும், குடியுரிமை இயக்கத்தினரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்திய பின்னரும் கூட, இந்துவெறி பாரதீய ஜனதா அரசு சீக்கிய சிறுபான்மையினர் மீதான அட்டூழியங்களை நிறுத்தவில்லை.

இதேபோல கடந்த மே-ஜூன் மாதங்களில் மீரட்டில் இந்துவெறி போலீசார் நடத்திய தாக்குதலில் மாண்ட முஸ்லிம்களுக்கு முந்தைய முலயம்சிங் யாதவ் அரசு நட்ட ஈடு தருவதாக வாக்களித்திருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்த பாரதீய அரசு அந்த உத்திரவை ரத்து செய்துவிட்டது. மேலும், லக்னோ நகரில் முஸ்லிம்கள் மொஹரம் பண்டிகையை நடத்தக் கூடாது என்று சட்டம் - ஒழுங்கு நிலைமையைக் காட்டி தடைவிதித்தது.

இப்படி மதச் சிறுபான்மையினரின் சாதாரண உரிமைகளைக் கூட சகித்துக் கொள்ளாத இந்துவெறி அரசு உழைக்கும் மக்களின் உரிமைகளை மட்டும் மதிக்குமா என்ன? ஆட்சிக்கு வந்ததுமே தொழிலாளர்களின் உதிரம் குடிக்கும் ஓநாய் என்பதை தல்லா துப்பாக்கிச் சூடு மூலம் அது நிரூபித்துள்ளது. உ.பி. கூட்டுறவு சிமெண்ட் நிறுவனத்துக்குச் சொந்தமான மூன்று ஆலைகளை நட்டத்தில் இயங்குவதாகக் கூறி டால்மியா என்ற தரகுப் பெருமுதலாளிக்கு அரசு தாரை வார்த்துக் கொடுத்தது. ஆலையை வாங்கிய டால்மியா நிர்வாகம் 6000 தொழிலாளர்கள் உபரியாக உள்ளதாகக் கூறி அவர்களை வீதியில் வீசியெறிந்தது. இதற்கெதிராக தல்லா, சர்க், சுனார் ஆகிய பகுதிகளிலுள்ள தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து போராடிய போது உ.பி. அரசு துப்பாக்கிச் சூடு நடத்தி 12 பேரை அநியாயமாகக் கொன்றது. 50-க்கும் மேற்பட்டோரைப் படுகாயப்படுத்தியது. பாதிக்கப்பட்ட தொழிலாளருக்கு நிவாரணமோ, துப்பாக்கிச் சூடு பற்றி விசாரணைக் கமிஷனோ இல்லாமல் உ.பி. அரசு அவர்களை நட்டாற்றில் விட்டுள்ளது.

— இவை உ.பி.யில் பாரதீய ஜனதாவின் ராமராஜ்ஜியத்தின் லட்சணத்திற்கு ஒரு சில உதாரணங்கள்தான். இதைவிட ஊழல், ஒடுக்குமுறை ராஜ்ஜியமாகத்தான் பாரதீய ஜனதாவின் இதர மாநில ஆட்சிகள் உள்ளன. உ.பி.யைப் போலவே ராஜஸ்தானிலும் பயங்கரவாத சட்டத்தை ஏவி உழைக்கும் மக்களை ஒடுக்கி வருகிறது பாரதீய ஜனதா அரசு. இருப்பினும் இங்கெல்லாம் எதிர்க்கட்சியாக உள்ள காங்கிரசு இவற்றைக் கண்டு கொள்ளாமல் விட்டுக் கொடுத்து அனுசரித்தே செல்கிறது. ஏனெனில், மத்தியிலுள்ள சிறுபான்மை காங்கிரசு அரசை எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா எந்நேரமும் கவிழ்த்துவிட முடியும் என்ற பீதியில் அதன் இந்துவெறி சூழ்ச்சிகளைக் கண்டும் காணாமல் மௌனம் சாதிக்கிறது. இப்போது மீண்டும் நவம்பர் 18 அன்று ராமர் கோயில் கட்டப் போவதாக இந்து வெறியர்கள் பகிரங்கமாக அறிவித்த பிறகும் கூட அதைத் தடுக்கவோ, சிறுபான்மை மதத்தவரின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பளிக்க உரிய நடவடிக்கை எடுக்கவோ காங்கிரசு அரசு தயாராக இல்லை. இந்த நிலைமையை சாதகமாக்கிக் கொண்டு தென் மாநிலங்களிலும் இந்து வெறியர்கள் வேகமாக காலூன்றி வருகின்றனர்.

அயோத்தியில் கோயில் கட்ட சபதமேற்கும் உ.பி. முதல்வர் கல்யாண்சிங் - பாரதீய ஜனதாவின் தலைவர் முரளி மனோகர் ஜோஷியுடன்.



அடுத்தடுத்து பொருளாதாரத் தாக்குதலால் நிலைகுலைந்துபோன உழைக்கும் மக்கள் ஆளும் வர்க்க கட்சிகள் மீது நம்பிக்கையிழக்கும்போது, குறுகிய இன வெறியைத் தூண்டி விடுவது, சீரழிந்த அரசியல் - பொருளாதார நிலைமையை சாதகமாக்கிக் கொண்டு நாட்டின் தலைவிதியை மாற்றப் போவதாக உறுதியளிப்பது - இவை பாசிஸ்டுகளும் நாஜிகளும் கையாண்ட உத்திகள். ஆனால், இவை ஜெர்மனியையும் இத்தாலியையும் பேரழிவில் தள்ளி விட்டன. காங்கிரசுக்கு மாற்று என்று கூறிக் கொள்ளும் பாரதீய ஜனதாவின் இந்துவெறி சூழ்ச்சிகளும் அத்தகையதுதான். இந்துவெறி பாசிசத்துக்கு எதிராக நமது முன்முயற்சியையும் போர்க் குணத்தையும் ஒருக்கால் தளர்த்தினால் நமது நாடு இன்னுமொரு இட்லரின் ஜெர்மனியாக மாறுவதைத் தவிர்க்க முடியாது.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

# நெய்வேலியில் தோழர்கள் கைது
## காங்கிரசு காலிகளின் கைவரிசை

பாசிச ராஜீவ் கொலையை சாக்காக வைத்து காங். மற்றும் அ.தி.மு.க. கும்பல் ஈழ அகதிகளை வெளியேற்ற முனைவதையும், ஈழப்போராளிகளின் உரிமைகளை அடாவடித்தனமாக மறுத்து அடக்குமுறை ஏவிவருவதையும் கண்டித்து புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் இயக்கமெடுத்தன. இதன் ஒரு பகுதியாக நெய்வேலியில் தொழிலாளர் பிரச்சாரக் குழு, பிரச்சாரத்தை வீச்சோடு எடுத்துச் சென்றது. இப்பிரச்சாரத்திற்கு தொழிலாளர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பு இருந்ததைக் கண்டு பீதியடைந்தது, ஆளுங்கும்பல்! 6.8.91 அன்று தெருமுனைக் கூட்டம் நடத்திய தோழர்களை, போலீசு கைது செய்து பொய்வழக்கு போட்டுள்ளது.

6.8.91 அன்று மெயின் பஜாரில் தெருமுனைக் கூட்டம் நடத்தி முடியும் தருவாயில் போலீசு வந்து தடுத்தது. "அனுமதி வாங்கினீர்களா? பிரச்சினை வந்தால் என்ன செய்வீர்கள்?" என்று போலீசு கேட்டதற்கு, "ஒலிபெருக்கி இல்லாமல் பிரச்சாரம் செய்ய அனுமதி தேவையில்லை. பிரச்சினை வந்தால் எதிர்கொள்ளும் துணிவோடுதான் பிரச்சாரம் மேற்கொள்ளுகிறோம்" என்று தோழர்கள் பதிலுரைத்தனர். போலீசுக்கு செய்தி கொடுத்து கூட்டிவந்த காங்கிரசு காலிகள் (இதில் ஒருவன் பெயர் அசோகன்) அடிடா, உதைடா என்று கூச்சல் போட்டு துள்ளினர். ராஜீவைப் பற்றி, வாழப்பாடியைப் பற்றி எதுவும் பேசக்கூடாது எனக் கூச்சல் போட்டு வம்புக்கு வந்தனர். அதற்குள் தோழர்களுக்கு ஆதரவாக ஒரு பெரியவர் முன்வந்து பேசவே சற்று பின்வாங்கினர். பின்னர் போலீசு 3 தோழர்களை கைது செய்து கொண்டு போனது.

போலீசு நிலையத்தில் எஸ்.ஐ. மகாலிங்கம், தோழர்களை விசாரித்து விட்டு "எடுப்பா அந்த குற்றப்பிரிவு சட்ட புத்தகத்தை இவங்கமேல கேஸ் போடுறதுக்கு ஒரு செக்ஷன் கூடவா கிடைக்காது?" என்று கூறி இரு பிரிவுகளின் கீழ் பொய் வழக்கு பதிவு செய்தார். பின்னர் டி.எஸ்.பி. ராஜனின் ஆணையின் பேரில் தோழர்களின் ஆடைகளை கழட்டிவிட்டு சிறையில் அடைத்தனர். அடுத்தநாள் கோர்ட்டிற்கு அழைத்துச் சென்றது போலீசு. தொழிலாளர்களிலே கருங்காலிகளை உருவாக்குவதற்கென்றே உள்ள ஐ.என்.டி.யு.சி (காங்கிரசு) தொழிற்சங்கத்தைச் சேர்ந்த முத்துரெட்டி என்பவன் அங்கு வந்து தோழர்களை ஜாமீனில் விடக்கூடாது எனக் கூறி செயல்பட்டான். இதனால் தோழர்களுக்கு இருமுறை ஜாமீன் மறுக்கப்பட்டு பின்னர் மாவட்ட நீதிமன்றத்திலும் 2-வது முயற்சியில்தான் நிபந்தனை ஜாமீன் கிடைத்தது. இன்னமும் விசாரணைக்காக கோர்ட்டில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் இழுத்தடிக்கிறது, போலீசு.

தோழர்கள் போலீசையும், காங்கிரசு காலிகளையும் அம்பலப்படுத்தி பகுதியில் துண்டுப் பிரசுரம் விநியோகித்தனர். தொடர்ந்து அடக்குமுறைக்கு எதிராக தொழிலாளர்கள் மற்றும் பகுதி மக்களின் ஆதரவுடன் போராடி வருகின்றனர்

# காட்டிலாகா அதிகாரிகளின் காட்டு தர்பார்

இவை காட்டிலாகா அதிகாரிகளின் காட்டுமிராண்டித் தனத்திற்கு சாட்சியங்கள். கடந்த ஆகஸ்டு 11-ம் தேதி குமுளி - அமராவதியைச் சேர்ந்த சி.பி.ஐ. (CPI) கட்சியின் கிளைச் செயலர் ஜெயராஜ் என்பவரை காட்டிலாகா அதிகாரிகள் கொடூரமாக தாக்கினர். ஜெயராஜ், அமராவதியில் காடுவெட்டி விவசாயம் செய்து வருபவர். "காட்டிலாகா தோட்டச் செடிகளை யாரோ வெட்டி விட்டார்கள். அதைப்பற்றி விசாரிக்க உயரதிகாரிகள் கூட்டி வரச் சொன்னார்கள்" என்று கூறி காட்டிலாகா போலீசு ஜெயராஜை ஏமாற்றி லோயர் கேம்ப்புக்கு அழைத்து வந்தது. அங்கு அவரை கண்மூடித்தனமாக தாக்கியது. தொகுதி எம்.எல்.ஏ. வந்து பார்த்து, காட்டிலாகா போலீசு கும்பலை ஏனோதானோவென்று திட்டி விட்டு ஜெயராஜை விடுதலை செய்து கொண்டு போனார்.

இது இன்னொரு சம்பவம். கூடலூரைச் சேர்ந்த இராஜேந்திரன் விறகு வெட்டி பிழைப்பவர். இவர் கடந்த 12-ம் தேதி சுருளிமலைக்கு விறகு வெட்டச் சென்று திரும்பிய போது ஓய்வு பெற்ற ரேஞ்சரின் மகன் நெப்போலியன் (காட்டிலாகா போலீசு) என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். உடலில் 7-8 குண்டுகள் பாய்ந்த பின்னும் சாகாமல் உயிருக்காக போராடியிருக்கிறார். அதன் பிறகு பாவிகள் இராஜேந்திரனை துப்பாக்கிக் கட்டையால் அடித்துக் கொன்றனர். இப்பிரச்சினையிலும் எம்.எல்.ஏ. தலையிட்டு பாதிக்கப்பட்டவருக்கு உதவித் தொகையை 10 நாளில் பெற்றுத் தருவதாக 'வாக்குறுதி' அளித்தார்.

மேலும் கூடலூரில் சாராயம் விற்கும் ஒருவரை மக்கள் மத்தியில் அடித்து இழுத்துச் சென்ற போலீசு, மறுநாள் அவர் பாத்ரூம் சென்றபோது தடுக்கி விழுந்து செத்து விட்டதாக கூறியது.

மேற்கண்ட பிரச்சினைகளில் இப்பகுதியில் செயல்பட்டு வரும் போலிக் கம்யூனிஸ்டுகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சி.பி.ஐ. கட்சிக்காரர்கள் தமது கிளைச் செயலர் தாக்கப்பட்டதைக் கண்டித்து ஒரு துண்டுப் பிரசுரம் கூட வெளியிடவில்லை! கேட்டதற்கு எம்.எல்.ஏ. பார்த்துக் கொள்வார் என்கிறார்கள். ஆனால் இந்த விஷயங்களை அறிந்ததும் லோயர் கிளை விவசாயிகள் விடுதலை முன்னணியினர் தட்டி, சுவரொட்டி, தெருமுனை பிரச்சாரங்கள் மூலம் போலீசின் அராஜக நடவடிக்கைகளைக் கண்டித்து பிரச்சாரம் மேற்கொண்டனர். போலீசு யாருக்கானது என்பதைப் பற்றி பகுதிமக்கள் புரிந்து கொள்ள இப்பிரச்சாரம் வாய்ப்பாக அமைந்தது.

# பள்ளிப்பாளையத்தில் எழுச்சிமிகு பிரச்சாரம்!

சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் 8.9.91 அன்று புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி (RSYF) சார்பாக தெருமுனைக் கூட்டங்கள் மற்றும் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. விசைத்தறி தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் இப்பகுதியில் நடத்தப்பட்ட 5 தெருமுனைக் கூட்டங்களிலும் அத்தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி பேசப்பட்டது. திருச்சி மக்கள் கலை இலக்கிய கழகத்தின் கலைக்குழு தோழர்கள் நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சியையும் தொழிலாளர்கள் பெரிதும் வரவேற்றனர்.

அன்று மாலை பள்ளிப்பாளையம் சனிச்சந்தை திடலில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்திற்கு சுமார் 700 பேர் கூடி ஆதரவளித்தனர். கூட்டத்திற்கு பள்ளிப்பாளையம் பு.மா.இ.மு. அமைப்பாளர் தோழர் ராஜாராம் தலைமை தாங்கினார். ஊரில் செயல்பட்டு வரும் கேடயம் - மனஓசை கும்பல் எவ்வாறு அரசியலற்று அராஜகவாதத்தில் இறங்கியுள்ளனர் என்பதையும் சித்தாந்தத்தில் மட்டுமல்ல; நடைமுறையிலும் இவர்கள் எப்படி 'மார்க்சிஸ்டு' கட்சியோடு ஒத்திருக்கிறார்கள் என்பதையும் அம்பலப்படுத்தினார். சிறப்புரையாற்றிய ம.க.இ.க. தோழர் தமிழ்மணி, இன்றைய அரசியல் சூழ்நிலையில் பு.மா.இ.மு. மற்றும் ம.க.இ.க. போன்ற புரட்சிகர அமைப்புகளின் தேவையைப் பற்றி விளக்கினார்.

ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன், இன்றைய பட்ஜெட் எவ்வாறு நெசவாளர்களை பாதிக்கிறது என்பதையும் காவிரி நீர்ப் பிரச்சினையில் நாம் செய்ய வேண்டியதையும், ரஷ்யாவில் தோற்றது அதிகார வர்க்க முதலாளித்துவமே, சோசலிசமல்ல என்பதையும் விளக்கினார். பின்னர் திருச்சி ம.க.இ.க. கலைக்குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. பகுதிமக்கள் இறுதிவரை ஆர்வமாக கேட்டு ஆதரவு தந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகளின் வயிற்றில் அடித்து வாழ்வைப் பறிக்க உலக வங்கி சதி

உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி என்பது நாட்டுப்புற வழக்கு. மத்தளத்துக்காவது இரண்டு பக்கம்தான் இடி. ஆனால், இந்திய விவசாயிகளோ எல்லா பக்கங்களிலிருந்தும் இடிமேல் இடிபட்டு இனி எழுந்து நிற்கவே முடியாத பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.

இயற்கையோடு சூதாட்டம் நடத்தி வரும் தமிழக விவசாயிகளுக்கு இம்முறை கோடைக்குப் பிறகு பரவலாக பெய்த மழை சற்றே நம்பிக்கை அளித்தது. வழக்கத்துக்கு மாறாக இம்முறை காவிரியில் நீர் பெருகி தஞ்சை விவசாயிகளுக்கு ஆறுதல் அளித்தது. ஆனால், ஆடிப் பட்டத்தில் நம்பிக்கையுடன் பயிர் வைக்கக் கிளம்பிய விவசாயிகளுக்கு உர விலையேற்றம் பேரிடியாய் அமைந்துவிட்டது.

தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளதன் விளைவாக இம்முறை ஆடிப்பட்டத்தில் உரங்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. ஏழை - நடுத்தர விவசாயிகள் இம்முறையாவது கடன் சுமையிலிருந்து மீள முடியுமா என்ற எதிர்பார்ப்புடன் சாகுபடியில் முனைப்பாக இறங்கியுள்ளனர். ஆனால், இதுவரை காணாத உர விலையேற்றமும், கள்ளச் சந்தையும் விவசாயிகளை நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டது. பருவ நிலை சாதகமாக இருந்தும் கூட அரசின் தாறுமாறான கொள்கையால் விவசாயமே செய்ய முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

உணவு, உரம், அடிப்படைச் சுகாதார வசதிகளுக்குத் தரப்படும் மானியங்களை குறைக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளது உலக வங்கி. உலக வங்கியின் உத்திரவுப்படி பட்ஜெட் தயாரித்துள்ள மத்திய அரசு இம்முறை உரங்களுக்கான மானியத்தைக் குறைத்து 40% விலையேற்றம் செய்தது.

ஜூலை 24 அன்று விவசாயிகளுக்கு விரோதமான இந்த பட்ஜெட் அறிவிப்பு வெளியானதும் ஆந்திரா, அரியானா, உ.பி, ராஜஸ்தான், கர்நாடக மாநிலங்களின் சில பகுதிகளில் உர விலையேற்றத்துக்கு எதிராக விவசாயிகள் தன்னெழுச்சியாகத் திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். ஆந்திராவில் குண்டூர் மாவட்டத்தில் உரக் கிடங்குகளைக் கைப்பற்றி பட்ஜெட்டுக்கு முந்தைய விலையில் விவசாயிகள் உரங்களை விநியோகித்தனர். விவசாயிகளின் தீரமிக்க இந்நடவடிக்கையை ஒடுக்கச் சென்ற போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தி இருவரைக் கொன்று பலரைப் படுகாயப் படுத்தியது. எதிர் கட்சியினரும் விவசாய சங்கங்களும் இதை சாதகமாக்கிக் கொண்டு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர்.

இப்போராட்டங்களால், வேறு வழியின்றி உர விலையை 30% ஆகக் குறைப்பதாகவும், சிறிய நடுத்தர விவசாயிகளுக்கு பட்ஜெட்டுக்கு முந்தைய விலையில் உரங்களை விநியோகிப்பதாகவும் இரட்டை விலைக் கொள்கையை ஆகஸ்ட் 15-ல் நிதி மந்திரி அறிவித்தார். ஆனால், சிறிய - நடுத்தர விவசாயிகள் என்று எதைக் கொண்டு வரையறுப்பது, அவர்களுக்கு பழைய விலையிலேயே உரங்கள் கிடைக்க வழிவகைகள் என்ன என்பதைப் பற்றி அவர் எந்த விளக்கமும் தரவில்லை. இந்தப் பொறுப்பை மாநில அரசுகளின் தலையில் அவர் கட்டிவிட்டார். மாநில அரசுகளுக்கு ஆகஸ்ட் மாத இறுதிவரை எந்தவொரு குறிப்பான உத்திரவும் மத்திய அரசிடமிருந்து வராததால், உர விற்பனையை மாநில அரசுகள் நிறுத்தி விட்டன. இதைச் சாதகமாக்கிக் கொண்டு, உர விற்பனையாளர்கள் அடாவடித் தனமாக விலையேற்றி கொள்ளையடிக்கின்றனர். சாதகமான பருவ நிலையை நம்பி பயிர் வைக்க கிளம்பிய சிறு விவசாயிகளோ, உரத் தட்டுப்பாடு மற்றும் அநியாயமான விலையேற்றத்தால் தலையில் துண்டைப் போட்டுக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

உரிய தருணத்தில் உரங்கள் கிடைக்காமல் விவசாயிகளைத் தவிக்க விட்ட தமிழக அரசு, இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பழைய விலையில் சிறு விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்கப் போவதாக அறிவித்துள்ளது. ஆனாலும், சிறு விவசாயிகள் என்பவர்கள் யார், அதற்கான வரையறை என்ன என்பதைப் பற்றி மாநில அரசு இன்னமும் தெளிவாக்கவில்லை.

> சிறு விவசாயிகளுக்கு தற்போது மானிய விலையில் உரங்களை விநியோகிப்பதாக கூறுவது இன்னொரு பெரிய மோசடி. உரங்களை சற்று குறைவான விலையில் விற்கச் சொல்லி உரக் கம்பெனி முதலாளிகளுக்குத்தான் இந்த மானியம் தரப்படுகிறது. விவசாயிகளின் பெயரால் உரக் கம்பெனி முதலாளிகளைக் கொழுக்க வைப்பதுதான் தொடர்கிறது.

தமிழகத்தில் 77 லட்சம் பேர் சிறு விவசாயிகள் என்று அரசு மதிப்பிட்டுள்ளது. மொத்த விவசாயிகளில் இவர்கள் 86% ஆவர். ஆனால், மொத்த விளை நிலங்களில் 50% மட்டுமே இவர்களிடம் உள்ளது. தமிழகத்திலுள்ள கூட்டுறவுத்துறை மொத்த விவசாயிகளில் 23% பேருக்குத்தான் சேவை செய்கிறது. கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களில் 64% பேர்தான் சிறு விவசாயிகள். இதன்படி பார்த்தால், தமிழகத்திலுள்ள மொத்த சிறு விவசாயிகளில் 14.7% பேருக்குத்தான் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மானிய விலையில் உரங்கள் கிடைக்கும். மற்ற விவசாயிகள் அரசு பட்ஜெட்டில் அறிவித்துள்ளபடி 30% அதிக விலைக்குத்தான் உரங்களை வாங்க வேண்டும். தட்டுப்பாடு நிலவும்போது அவசரத் தேவைக்கு இன்னும் அதிக விலை கொடுத்து வாங்க நேரிடும்.

இதில் வேடிக்கை என்னவென்றால், கூட்டுறவு சங்கங்கள் மானிய விலை உரங்களை வாங்க பெருமளவு பணம் தேவை. அவற்றைச் சேமித்து வைக்க கிடங்குகள் தேவை. இரண்டுமே தமிழகத்திலுள்ள பெரும்பாலான கூட்டுறவு சங்கங்களிடம் இல்லை. தேவைப்படும் நேரத்தில் உரம் கேட்டால் இருப்பு இல்லை என்ற பதில்தான் விவசாயிகளுக்கு கிடைக்கும். இந்த லட்சணத்தில் வாராந்திர அடிப்படையில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உரங்களை சிறு விவசாயிகளுக்கு விநியோகிக்கப் போவதாக தமிழக அரசு மாய்மாலம் செய்கிறது. மேலும் கூட்டுறவு சங்கங்களால் ஆதாயமடைவது பணக்கார விவசாயிகளும் நிலப்பிரபுக்களும்தான். மானிய விலையில் உரங்களைக் கைப்பற்ற இப்போது அவர்கள் தமது பினாமிகள் மூலம் தீவிரமாக முயன்று வருகின்றனர். நிலப் பிரபுக்கள் சுருட்டிக் கொண்டது போக, ஏழை - நடுத்தர விவசாயிகளுக்குக் கிடைக்கப் போவது பட்டை நாமம் தான். கடைசியில், உலகவங்கி உத்திரவிட்டபடியே விலையேற்றம்தான் நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்தியா மிகப் பரந்த ஒரு விவசாய நாடு. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக விவசாயமே இங்கு முக்கிய தொழிலாக உள்ளது. இருப்பினும் மேலை நாடுகளின் 'உதவி', ஆராய்ச்சியில் தயாரான நவீன வகை விதைகள், உரம், பூச்சி மருந்து இல்லாமல் சாகுபடியே செய்ய முடியாது என்கிற நிலைக்கு இன்று இந்திய விவசாய உற்பத்தி முறை மாற்றப்பட்டுள்ளது. அதிலும் உரமும், நீரும் உரிய அளவு இடப்படாவிட்



படிப்பகம்

www.padippakam.com

டால் மகசூலையே பார்க்க முடியாது. ''தற்போதைய உர விலையேற்றம் காரணமாக சிறு விவசாயிகள் பயன்படுத்தும் உரத்தின் அளவு குறையும்; இதனால், உணவு உற்பத்தி வருமாண்டில் மேலும் 15 முதல் 20% வரை குறைந்துவிடும்'' என்று திட்ட மதிப்பீட்டாளர்களே கூறுகின்றனர்.

பெரிய விவசாய நாடாக இருந்தும் கூட நமது நாட்டில் ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 2.5 டன் அளவுக்குத்தான் உணவு தானிய உற்பத்தி உள்ளது. ஆனால், சீனாவில் 6 டன்னும், கொரியாவில் 9 டன்னும் சராசரியாக உற்பத்தியாகிறது. ஏற்கனவே மிகக் குறைந்த அளவிலுள்ள உணவு தானிய உற்பத்தி, உர விலையேற்றத்தின் விளைவாக மேலும் குறைந்து விடும். அதன் விளைவாக, நாட்டில் உணவுப் பஞ்சமும், பட்டினிச் சாவுகளும் மேலும் பெருகவே செய்யும்.

இந்த சராசரி கணக்குகூட பித்தலாட்டம்தான். ஏனெனில், கடந்த 20 ஆண்டுகளில் வடக்கு, வடமேற்கு மாநிலங்களில் (பஞ்சாப், அரியானா, உ.பி. காஷ்மீர், இமாசல பிரதேசம்) மட்டுமே உணவு உற்பத்தி பெருகியுள்ளது. மற்ற மாநிலங்களில் உணவு உற்பத்தி குறைந்து சராசரி இலக்கைக் கூட எட்ட முடியாமல் தொடர்ந்து இறங்குமுகமாகவே உள்ளது. இப்படி உற்பத்தி குறைவையும் பெருக்கத்தையும் சேர்த்து கணக்கு போட்டு சராசரியாக உணவு உற்பத்தி பெருகியுள்ளதாக கணக்கு காட்டுகிறது, அரசு.

1986-ல் அரசு கொள்முதல் செய்த மொத்த கோதுமையில், 95% வடக்கு மாநிலங்களிலிருந்து - குறிப்பாக பஞ்சாப், அரியானாவிலிருந்து வந்தவை. அரிசியைப் பொருத்தவரை ஆந்திராவில், அதுவும் கோதாவிரி மாவட்டத்திலிருந்துதான் மொத்த கொள்முதலில் மூன்றிலொரு பங்கு அரசால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களில் அரசின் கொள்முதல் அற்ப அளவே இருந்தன; அல்லது கொள்முதலே நடக்கவில்லை.

இப்படி திட்டுத் திட்டான, பாசன வசதி கொண்ட, பசுமைப்புரட்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட ஒரு சில பகுதிகளில் மட்டுமே உணவு உற்பத்தி பெருகியுள்ளது. அப்பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில்தான் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இதர பகுதிகள் அனைத்திலும் விவசாயம் புறக்கணிக்கப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாக அவை பாலை நிலங்களாக மாறிவிட்டன. தற்போதைய பட்ஜெட்டில் விவசாயத்துக்கான ஒதுக்கீட்டைக் குறைத்தும், மானியங்களைக் குறைத்தும், உரம் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றியும் உள்ளதன் விளைவாக உணவு உற்பத்தி குறைந்து பஞ்சம் தலை விரித்தாடும். நாட்டு மக்கள் பட்டினிச் சாவுக்கு தள்ளப்படுவர்.


இதுதான் உலக வங்கியின் உத்திரவு. உணவு உற்பத்தியைக் குறை; மானியங்களை நிறுத்து என்று கட்டளையிடுகிறது உலக வங்கி. ஏழை நாடுகள் எப்போதும் அமெரிக்காவிடம் உணவுக்காக கையேந்தி நிற்க வேண்டும்; உணவை ஒரு ஆயுதமாக்



**மானியக் குறைப்பு - உரவிலையேற்றத்தினால் உணவு தானிய உற்பத்தி மேலும் குறைந்துவிடும். அதன் விளைவாக, நாட்டில் உணவுப் பஞ்சமும், பட்டினிச் சாவுகளும் மேலும் பெருகவே செய்யும்.**

கிக் கொண்டு ஏழை நாடுகளை ஏறி மிதித்து அடிமைப்படுத்துவது என்பது அதன் சதித் திட்டம். அதை விசுவாசமாக நிறைவேற்றும் வகையில்தான் பாசிச இந்திராவின் காலத்திலிருந்து பொருளாதாரக் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. பெரிய விவசாய நாடாக இருந்தது போய், இந்திரா - ராஜீவ் ஆட்சிக் காலத்தில் கோதுமையிலிருந்து சமையல் எண்ணை வரை அனைத்தையும் இறக்குமதி செய்யும் நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டது. தற்போது அதை மேலும் தீவிரமாக்கியிருக்கிறார் அமெரிக்க கைக்கூலியும் நிதி மந்திரியுமான மன்மோகன்சிங்.

ஒருபுறம் உர விலையேற்றம் செய்துவிட்டு மறுபுறம் அதை ஈடுகட்ட கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளதாக கூறுகி




றார் நிதிமந்திரி. ஆனால், அறிவிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலையோ மிக அற்பமானது. ரூபாய் மதிப்பு குறைப்பு மற்றும் இதர பொருட்களின் விலையேற்றத்தை ஒப்பிடும்போது கொள்முதல் விலை முன்னைவிட குறைந்துவிட்டது என்பதே உண்மை. மேலும் சிறு விவசாயிகளுக்கு தற்போது மானிய விலையில் உரங்களை விநியோகிப்பதாக கூறுவது இன்னுமொரு பெரிய மோசடி. உரங்களை சற்று குறைவான விலையில் விற்கச் சொல்லி உரக் கம்பெனி முதலாளிக்குத்தான் இந்த மானியம் தரப்படுகிறது. 1978-79-ல் 343 கோடி ரூபாயாக இருந்த இந்த மானியம் 90-91-ல் 4400 கோடியாக அதிகரித்துள்ளது. அன்றும் சரி, இன்றும் சரி விவசாயிகளுக்கென மானியம் ஒதுக்கப்படவே இல்லை. விவசாயிகளின் பெயரால் உரக் கம்பெனி முதலாளிகளைக் கொழுக்க வைப்பதுதான் நடந்துள்ளது.

தற்போதைய உரவிலையேற்றமும் கொள்முதல் விலைக் குறைப்பும் வெறுமனே விவசாயிகள் மீதான பொருளாதாரத் தாக்குதல் மட்டுமல்ல; விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்கி நாட்டு மக்களை பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிடும் நாசகாரத் திட்டத்தின் துவக்கம்தான் இது. எனவே, இம்மக்கள் விரோத ஆட்சியாளர்களை அவர்களின் அமெரிக்க எஜமானர்களோடு சேர்த்து வங்கக்கடலில் வீசியெறிய விவசாயிகளும் உழைக்கும் மக்களும் பெரும் படையாய் திரண்டிட வேண்டும்.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# நெய்வேலி ஜவஹர் பள்ளி:

# ஆசிரியர்களா? கொத்தடிமைகளா?

ஒவ்வொரு முறை பள்ளியிறுதி தேர்வு முடிவுகள் வரும்போதும் பத்திரிக்கைகளின் முதல் மதிப்பெண் பட்டியலில் அதிகம் இடம் பெற்று மாநிலத்திலேயே சிறந்த பள்ளிகளுள் ஒன்று என்று அனைவராலும் நம்பப்படுவது நெய்வேலி சவகர் பள்ளி. ஆனால், இந்த புகழைப் பெற பின்பற்றப்படும் வழிமுறைகளும் பள்ளி ஆசிரியர்களின் நிலைமையும் நெஞ்சை கொதிப்படைய செய்வனவாகும்.

அதிகாரிகளின் பிள்ளைகள் படிப்பதற்கென்றே நிறுவனத்தின் தனிச்சிறப்பான அக்கறையின் கீழ் நெய்வேலி 'லேடீஸ் கிளப்' ஆல் தொடங்கப்பட்ட இந்த பள்ளியில் ஆரம்பம் முதல் இதுதான் நிலை என்றாலும், சுந்தரம் முதல்வராக பொறுப்பேற்ற பதினைந்து ஆண்டுகளில்தான் தொழிலாளர் வீட்டு பிள்ளைகளையும் சேர்த்து கொள்ளையடிப்பதற்கான நிறுவனமாக விரிவுபடுத்தப் பட்டதுடன் கொடுமைகளும் எல்லை மீறின.

எல்.கே.ஜி.யில் சேர்க்கப்படும் 1200 மாணவர்கள் பள்ளியிறுதி வகுப்பு வரும் போது 90 ஆக வடிகட்டப்படுகின்றனர். மற்ற மாணவர்கள் வெளியே விரட்டப்படுகின்றனர். இப்படி பொறுக்கி எடுத்த 90 பேருக்கு மட்டும் சிறப்பு பயிற்சியளித்து (உருப்போட்டு வாந்தியெடுக்கும் முறையில்தான்) நூறு சதவீத வெற்றி என்று மார் தட்டுகின்றனர். இதுதான் வெற்றியின் ரகசியம். இத்தகைய கல்வி முறையில் மாணவர்கள் உடலியல் ரீதியில் நோஞ்சான்களாகவும் உளவியல் ரீதியில் கோழைகளாகவும் சமூக சிந்தனையற்றவர்களாகவும் வளர்கின்றனர்.

93% ஆசிரியைகளை கொண்டுள்ள (183 ஆசிரியைகள், 13 ஆசிரியர்கள்) இப்பள்ளியில் பணிபுரிபவர்களுக்கு சட்டபூர்வ ஊதியமோ, வேலை உத்திரவாதமோ, விடுப்பு எடுக்கும் உரிமையோ கூட கிடையாது; கொத்தடிமைகள் போல கேவலமாக நடத்தப்படுகின்றனர். வகுப்பறையில் உட்கார்ந்து கூட பாடம் நடத்தக்கூடாது என்பதற்காக இருக்கைகளே போடப்படுவதில்லை. உணவு நேரத்தில் கூட சாப்பிட விடாமல் ஏதாவது வேலை சொல்லி விரட்டுவது, கூடிப்பேச அனுமதியாமை, சாதிப் பெயரைச் சொல்லி கிண்டலடிப்பது போன்ற இழிசெயல்களில் ஈடுபட்டு குரூர இன்பம் காண்பவர்தான் பள்ளி முதல்வர் சுந்தரம். எதிர்த்து கேட்பவரை வேறு கிளைக்கு மாற்றுவதும், தகுதிக்கு கீழான வகுப்புகளுக்கு பாடம் எடுக்க சொல்வதும், அதிகார திமிரை வெளிப்படுத்தும் செயல்கள். ஆனால், அவரது உறவினர்கள், எடுபிடிகளாக உள்ள ஆசிரியர்களுக்கு உரிய தகுதியே இல்லாத போதிலும் மேல்நிலை வகுப்புகளுக்கு பாடம் எடுக்கச்சொல்வார்.

மாணவர்களின் விடுப்பு மற்றும் வேறு காரணங்களுக்காக பெற்றோர்கள் வந்தால் பலமணி நேரம் காக்க வைத்து பின்னர் சந்திக்க அனுமதிப்பது, நோய் வாய்ப்பட்டு மருத்துவரின் பரிந்துரைப்படி மருத்துவ விடுப்புகோரும், மாணவர்களுக்குக் கூட ''என்ன பெரிய நோய்'' என்று கூறி டி.சி.யை கிழித்து வீட்டுக்கு அனுப்புவது — போன்ற செயல்களால் பெற்றோர்களை அவமானப் படுத்துவார். சமீபத்தில் கலை மற்றும் அறிவியல் படிப்புகளுக்குரிய கட்டணத்தை ரூ.3500 வரை (அரசு கல்லூரிகளைக் காட்டிலும்10 மடங்கு அதிகம்) உயர்த்தியுள்ளார்.

சவகர் அறக்கட்டளையின் செயலர் பொறுப்பையும், தானே கைப்பற்றிக் கொண்டு என்.எல்.சி. அதிகாரிகளையும் கையில் போட்டுக் கொண்டு இவர் பணத்தை சுருட்டியது ஏராளம். இப்படி சுருட்டிய பணத்தில் ரூ.12 லட்சத்தில் திருச்செங்கோட்டில் ஒரு பள்ளியே கட்டியுள்ளார்.

தனது வரம்பிலா அதிகாரத்திற்கெதிராக பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து எப்போதெல்லாம் எதிர்ப்பு வருகிறதோ அப்போதெல்லாம் ''தமிழன் முதல்வராக இருப்பதை எதிர்த்து பார்ப்பன கும்பல் சதி'' என்று ஓட்டுப் பொறுக்கி திராவிட கட்சிகள் பாணியில் கூப்பாடு போட்டு தி.க., தி.மு.க. மற்றும் சில தமிழர் அமைப்புகளை தனக்கு ஆதரவாக திரட்டிக் கொள்வார்.

சுந்தரத்தின் அடாவடித் தனத்தால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவ்வப்போது பொறுமுவதுடன் இருந்து வந்தனர். ஒன்றரை ஆண்டுக்கு முன்னர் சில ஜனநாயக அமைப்புக்களின் அம்பலப் படுத்தல்களை தொடர்ந்து ஊக்கம் பெற்ற ஆசிரியர்கள் - ஊழியர்கள் ஒன்றிணைந்து சவகர் பள்ளி பணியாளர் சங்கம் என்ற ஒன்றை ஏற்படுத்தினர். தமது சனநாயக பூர்வமான கோரிக்கைகளுக்காக பிரசுரம், வகுப்புகளை புறக்கணித்தல், உண்ணாவிரதம் என்ற முறையில் எதிர்ப்பு தெரிவித்தனர்.

சென்ற மாதம் ஆசிரியை கீதா என்பவரின் திருமண கால விடுப்பை ஒட்டி அவரை அடாவடித்தனமாக வேலையில் சேர்த்துக் கொள்ள மறுத்தார் சுந்தரம். இதை எதிர்த்து ஜூன் இறுதியில் (25 - 30.6.91) ஒருவார காலம் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டு ஓரளவு சாதகமான ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளனர். அதன்படி சங்க அங்கீகாரம், சரியான விதிமுறைகளை வரையறுத்தல், 5வது ஊதிய குழுவின் பரிந்துரையின் படி சம்பளம், ஆசிரியை கீதாவுக்கு மீண்டும் அதே இடத்தில் வேலை, போன்றவற்றை சாதித்துள்ளனர். மேலும், பள்ளி இயல்பு நிலை பாதிக்கப்பட்டு இவ்வளவு மோசமான சூழ்நிலை உருவாக காரணமாக முதல்வர் சுந்தரம் மீது ஒரு நீதிவிசாரணை நடத்தவும் ஏற்பாடாகியுள்ளது.

பல ஆண்டுகளாக புழுக்களை போல சுருண்டு கிடந்த அந்த ஆசிரியர்கள் வீதிக்கு வந்ததும், சுந்தரத்தின் நரித்தனமான நடவடிக்கைகளுக்கு அஞ்சாமல் சிறிய அமைப்புகளாக இருந்தாலும், ஜனநாயக பூர்வமாக சிந்திக்கக் கூடிய அமைப்புகளின் ஆதரவு பெற்று வெற்றி ஈட்டியதும் உண்மையில் பாராட்டதக்க அம்சங்களாகும். இருப்பினும் வர்க்க கண்ணோட்டத்துடன் போராட்டத்தை சமரசமின்றி மேலும் போர்குணத்தோடு முன்னெடுத்து செல்வதன் மூலமும், மற்ற தரப்பு மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு கொடுப்பது, தங்களின் பிரச்சனைக்கு அவர்களையும் போராட வைப்பது, என்ற பரஸ்பர ஆதரவை ஏற்படுத்துவதன் மூலமும்தான் பெற்ற உரிமைகளை பாதுகாக்கவும், மேலும் உரிமைகளை பெறவும் இயலும்.

**தகவல்: தொழிலாளர் பிரச்சாரக் குழு, நெய்வேலி - வடலூர்.**

## சாதிவெறிக்கு பா.ம.க.வினர் அளித்த சாட்சியம்!

''பா.ம.க.வின் சாதிவெறி சந்தி சிரிக்கிறது'' என்ற தலைப்பில் சென்ற இதழில் ஒரு கட்டுரை எழுதியிருந்தோம். தெ.ஆ. மாவட்டத்திலுள்ள க.எளமங்கலம் கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் வன்னிய சாதி வெறியர்களால் பாதிக்கப்பட்டதை படம்பிடித்துக் காட்டினோம்! அடிபட்ட வெறியில் பா.ம.கட்சியைச் சேர்ந்த சமரசம், பி.இராமசாமி ஆகியோரின் ஆட்கள் தாழ்த்தப் பட்டவர்களைச் சென்று மிரட்டினர். மேலும் 4.9.91 அன்று நமது தோழர் ஒருவர் அப்பகுதிக்கு தனது நண்பரை சந்திக்கச் சென்றபொழுது இடைமறித்து காட்டுக்கூச்சல் போட்டனர். எப்படி பத்திரிகையில் இச்செய்தியை வெளியிடலாம் என கேட்டு மிரட்டினர்! ''ஊரில் சாதிக்கலவரம் நடந்தால் நீதான் பொறுப்பு'' என்று கூச்சலிட்டனர். பா.ம.க.வின் ஒன்றியத் தலைவரான பி.இராமசாமி, தனது செயலுக்கு தன்னிலை விளக்கம் கொடுத்து, பத்திரிக்கையில் மறுப்பறிக்கை வெளியிட வேண்டும் என்றார். ''எமக்கு கிடைத்த சரியான தகவலைத்தான் பத்திரிக்கையில் வெளியிட்டுள்ளோம்; உங்கள் கருத்தை பத்திரிக்கை ஆசிரியருக்கு எழுதுங்கள்'' என்று தோழர் பதிலுரைத்ததும் ஆத்திரமடைந்து கத்தினார்கள்; மிரட்டிப் பார்த்தார்கள். ஆனால் தோழர் உறுதியுடன் பொறுமையாக பதிலுரைத்து விட்டு வந்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

பங்காரப்பா - நரசிம்மராவ் - மன்மோகன்சிங்

# கொடும்பாவி எரிப்பு போராட்டம்

# காவிரி நீர் உரிமைக்கான இயக்கம்



ஆண்டாண்டு காலமாக ஆட்சியாளர்களால் இழுத்தடிக்கப்பட்ட காவிரி நீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு சிறு நம்பிக்கையளித்தது! ஆனால், எந்த நியாயத்தையும் சட்டத்தையும் ஏற்க மறுத்து அராஜக வெறியாட்டம் போடுகிறது பங்காரப்பாவின் காங்கிரசு அரசு. நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பையே கேள்விக்குறியாக்கி உச்ச நீதிமன்ற கருத்தறிவது என்ற பெயரில் மீண்டும் பிரச்சினையை இழுத்தடிக்கிறது, நரசிம்மராவ் தலைமையிலான மைய அரசு. இவற்றைக் கண்டித்தும் மக்கள் மத்தியில் ஓட்டுக் கட்சிகளை அம்பலப்படுத்தியும் மக்கள் கலை இலக்கிய கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் தமிழகமெங்கும் இயக்கமெடுத்தன.

**திருச்சி' - தஞ்சை** மாவட்டங்களிலுள்ள மேற்கண்ட அமைப்புகள் இணைந்து 10.8.91 அன்று ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டம் நடத்தின. திருச்சியிலிருந்து 20 தோழர்கள் அன்று காலை சைக்கிளில் ஊர்வலமாகப் புறப்பட்டு மாலை தஞ்சை மேரிஸ் கார்னரை வந்தடைந்தனர். இடையில் உள்ள ஊர்களில் ஆங்காங்கே பிரச்சாரம் மேற்கொண்டனர். இதேபோல் வெவ்வேறு பகுதியிலிருந்தும் அமைப்புத் தோழர்கள் பிரச்சாரம் மேற்கொண்டு தஞ்சை மேரிஸ் கார்னரை வந்தடைந்தனர். பிறகு சுமார் 200 பேர் அடங்கிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் அங்கிருந்து புறப்பட்டு தஞ்சை பேருந்து நிலையம் அருகே உள்ள காவேரி சிறப்பங்காடி வரை சென்றடைந்தது. ஊர்வலத்தில் தோழர்கள் விண்ணதிர முழக்கமிட்டது மக்களை பெரிதும் கவர்ந்தது.

காவேரி சிறப்பங்காடியில் நடந்த பொதுக்கூட்டத்தில் ம.க.இ.க. தோழர் காளியப்பன், வி.வி.மு. தோழர் மறைமுகிலன், பு.மா.இ.மு. தோழர் மன்னை நன்னன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். அதன்பின் திருச்சி ம.க.இ.க. கலைக்குழுத் தோழர்கள் நிகழ்ச்சி நடத்தினர். சுமார் 750 பேர் கூடி இறுதிவரை இக்கூட்டத்திற்கு ஆதரவு நல்கியது குறிப்பிடத் தக்கது.

மேலும் இப்பிரச்சினை தொடர்பாக திருச்சி ம.க.இ.க.வும், பு.மா.இ.மு.வும் தமது பகுதியில் தொடர்ந்து இயக்கமெடுத்தன. 15.8.91 அன்று 20 தோழர்கள் அடங்கிய சைக்கிள் ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளில் நடத்தப்பட்டது. போலி சுதந்திரத்தை அம்பலப்படுத்தியும் காவிரி நீரில் தமிழகத்தின் உரிமையை நிலை நாட்டுவோம் என்றும் முழக்கமிட்டு பிரச்சாரம் செய்தனர்.

17.8.91 அன்று எடத்தெரு அண்ணா சிலை அருகில் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. ம.க.இ.க. தோழர் தமிழ்மணி காவிரி நீர் பிரச்சினை பற்றி விரிவாக விளக்கிப் பேசினார். ரயில்வே தொழிலாளர் யூனியன் தோழர் முருகானந்தம் இந்தியப் பொருளாதார நிலையைப் பற்றி உரையாற்றினார். இறுதியில் கலை நிகழ்ச்சி நடந்து முடியும்வரை சுமார் 850 பேர் கூடி நின்று ஆதரவளித்தனர். அதிக நிதியுதவி செய்தும் ஊக்கம் ஊட்டினர். பாதுகாப்புக்கு வந்திருந்த போலீசாரும் நிதியுதவி செய்தது குறிப்பிடத் தக்கது.

19.8.91 அன்று தெப்பக்குளம் அஞ்சல் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டமும், கொடும்பாவி எரிப்பும் நடத்தப்பட்டது. போலீசு, கொடும்பாவி ஏந்தியிருந்த தோழர்களை கைது செய்தது. பிறகு தோழர்கள் முழக்கம் எழுதி வந்திருந்த பேப்பர்களை கொளுத்த முயன்ற போதும் அதையும் போலீசு பறித்தது. இது நடந்து கொண்டிருக்கும்போதே ஏற்கனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி நூறு அடி தள்ளி 4 தோழர்கள் காங்கிரசு மற்றும் பா.ஜ.க. அடையாள கொடும்பாவியை முழக்கமிட்டவாறே மக்கள் மத்தியில் கொளுத்தி சாம்பலாக்கினர். இதை தெப்பக் குளத்தில் நடந்து கொண்டிருந்த ஆர்ப்பாட்ட கூட்டத்தில் அறிவிக்க வேண்டாம் என போலீசு தடுத்தும் உரையாற்றிய தோழர் துணிச்சலுடன் மக்களிடையே அறிவித்தார். கொடும்பாவி எரிப்பு சட்டபூர்வமான போராட்டம்தான் என்பதையும் போலீசின் அடாவடித்தனமான செயலையும் அம்பலப்படுத்தி பேசினார். பொதுமக்கள் 600-க்கும் மேற்பட்டவர்கள் சாலையோரம் நின்று பிரச்சாரத்தை கேட்டனர். அவர்களை போலீசு விரட்டியபோது, தோழர்கள் தலையிட்டு தடுத்தனர். மூக்குடைபட்டு போன போலீசு, கைது செய்த தோழர்களை விடுவிப்பதாக கூறிச் சென்றது.

மேற்கண்ட போராட்டங்களுக்கு திருச்சி - காந்திபுரம் பகுதியில் உள்ள 'சாக்ரடீஸ் நற்பணி இளஞ்சேனை' தோழர்கள் கலந்து கொண்டு ஒத்துழைப்பு நல்கினர்.

**உசிலையில்** விவசாயிகள் விடுதலை முன்னணி, 15.8.91 அன்று போலீசு தடையை மீறி கொடும்பாவி எரிப்பு போராட்டம் நடத்தியது. காவிரி நீரில் தமிழக மக்களை வஞ்சிக்கும் கர்நாடக அரசு மற்றும் மத்திய அரசைக் கண்டித்து பங்காரப்பா, நரசிம்மராவ் ஆகியோரது கொடும்பாவிகளும், உர விலையை ஏற்றி மக்கள் விரோத பட்ஜெட் தயாரித்த அமெரிக்க கைக்கூலியான மன்மோகன் சிங்கின் கொடும்பாவியையும் எரிப்பதற்காக தோழர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. இப்போராட்டத்திற்கு போலீசு அனுமதி மறுத்தோடு சுவரொட்டி அச்சிட முடியாத வண்ணம் அச்சகத்தாரை வேறு மிரட்டியது. எனினும் தோழர்கள் கையால் எழுதப்பட்ட சுவரொட்டி மூலம் பிரச்சாரத்தை எடுத்துச் சென்று தடையை மீறி போராட்டத்தில் ஈடுபட்டனர். போலீசு, கொடும்பாவிகளை எரிக்க விடாமல் பிடுங்கிச் சென்றது. கொடி, முழக்க அட்டைகளைப் பறிக்க முயன்ற போலீசைத் தடுத்து தொடர்ந்து முழக்கமிட்டவாறே ஊர்வலமாகச் சென்று தோழர்கள் ஐந்துகல் ராந்தல் பகுதியை அடைந்தனர். அங்கு தோழர் குருசாமி உரைநிகழ்த்திய பின் போலீசு அனைவரையும் கைது செய்தது. பின்னர் 2 மணி நேரம் கழித்து விடுவித்தது. இப்போராட்டத்தை 1000-க்கும் மேற்பட்ட மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து தோழர்களின் துணிவைப் பாராட்டிப் பேசி ஆதரவளித்தனர்.

## போலீசால் தாக்கப்பட்ட அப்பாவி! நீதி - நிவாரணம் கோரி பொதுக்கூட்டம்!

ஆண்டிபட்டி தாலுகா குன்னூரைச் சேர்ந்த பெரியமலைச்சாமி என்பவரை எஸ்.ஐ. கௌதவனும், ஏட்டு பொன்ராசும், போலீசு நிலையத்திற்கு 16.5.91 அன்று சட்டவிரோதமாக இழுத்துச் சென்று சித்திரவதை செய்தனர். இதில் பெரிதும் பாதிக்கப்பட்ட பெரியமலைச்சாமி வெகு நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றார். இவரிடமிருந்து ரூ.5500-ஐயும் போலீசு பிடுங்கிக் கொண்டது. இவருக்கு இதுவரை எவ்வித நீதியும் நிவாரணமும் கிடைக்கவில்லை. மேலும் இதில் சம்பந்தப்பட்ட போலீசாரும் தண்டிக்கப்படவில்லை. இப்பிரச்சினை தொடர்பாக விரிவான கட்டுரை சென்ற இதழில் வெளிவந்துள்ளது.

க.விலக்கு போலீசு நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்ட பெரியமலைச்சாமிக்கு நீதி, நிவாரணம் வேண்டி தேனி வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி, 25.8.91 அன்று பொதுக்கூட்டம் நடத்தியது. குன்னூரில் நடந்த இக்கூட்டத்தில் தோழர்கள் மாணிக்கராசு, செல்வராசு, மோகன், கே.பி. ராமசாமி ஆகியோர் உரை நிகழ்த்தினர். போலீசாரின் அக்கிரமங்களை முறியடிக்க அமைப்பாகத் திரள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினர். இறுதியில் உத்தமபாளைய வட்ட வி.வி.மு. கலைக்குழுவினர் எழுச்சிமிகு நிகழ்ச்சி நடத்தினர். போலீசை துணிந்து எதிர்த்து அம்பலப்படுத்தியதைக் கண்டு பகுதி மக்கள் பெரிதும் வரவேற்றனர். குறிப்பாக இளைஞர்கள் முன்வந்து ஆதரித்தனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா.சண்முகராசு, 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் தெரு, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

படிப்பகம்







கடற்கரையில் காற்று வாங்கும் இரண்டுகால் யானைக்குட்டி, கைநிறைய 'கேட்பரிஸ் சாக்லெட்டை' வைத்துக் கொண்டு தின்னும்! காரிலே 'ஷாப்பிங்' வரும் மேட்டுக்குடி கும்பல் களைப்பான தால் ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை இருட்டு விடுதிக்குள் நுழைந்து ஒரு கப் டீ - காபி அல்லது 'கூல் ட்ரிங்க்ஸ்' உறிஞ்சும்! ஜோலி யில்லாத ஜாலி கும்பல் சுயநினைவை திரும் பவே விடாமல் பல 'பெக்'குகளை குடிக்கும்!

இவர்கள் சாக்லெட்டை திங்கும் போதோ, டீ - காபி - கூல் ட்ரிங்க்ஸ் உறிஞ் சும் போதோ, பீர் - பிராந்தி - விஸ்கியை குடிக்கும் போதோ முகம் சுளித்து விடக்கூ டாது. அதாவது அப்பொருளின் தரமோ சுவையோ குறையக்கூடாது; மாறுபடவும் கூடாது. அதற்கு என்ன செய்வது?

இவர்கள் எல்லோருக்கும் ஒரே சுவையா பிடிக்கும்? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுவை பிடிக்கும். அதனால் பல சுவைகளைத் தரும் பல ரகங்கள் இருக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது?

இக்கேள்விகளுக்குரிய விடைதான் இவர்கள்! பொருளின் தரம், சுவை பரிசோ திக்கும் 'சுவையாளர்கள்'! 'ரசிகர்களின்' மனவிருப்பம் அறிந்து தரம், சுவையை சுட் டிக் காட்டுவது இவர்களது தொழில்! மேட் டுக்குடி கும்பலின் உல்லாச பொழுதுபோக் கின் சந்தைக்குரிய பொருட்களைத் தயாரிக் கும் அனைத்துக் கம்பெனியும் 'சுவையாளர்' களைக் கொண்டிருக்கிறது. கம்பெனியில் உற்பத்தியாகும் பொருட்களை 'சுவையா ளர்கள்' சுவை பார்த்துவிட்டு அனுமதித்தப் பிறகே அப்பொருளை சந்தைக்கு எடுத்து வருகிறார்கள்.

சாக்லெட்டிற்காக அல்ல; ஒரு பிடி சோற்றிற்காக அழுகிறது இக்குழந்தை. சட்டி யிலோ ஒரு பருக்கை கூட இல்லை. உண விற்காக காத்திருந்து பசி தின்று துப்பிய எச் சம்தான் மிச்சம் இருக்கும் உடம்பு! அழுது அழுது அதையும் கரைத்து விடுமோ இக்கு ழந்தை?!

## இதுதான் இன்றைய இந்தியா

இந்தியாவில் வருடந்தோறும் பிறக் கும் 260 லட்சம் குழந்தைகளில் 220 லட்சம் குழந்தைகளின் கதி இதுதான்! நூற்றில் 15 குழந்தைகள் 5 வயதுக்குள்ளேயே இறந்து விடுகின்றன. பிறக்கும் குழந்தைகளும் உரிய எடையின்றி நோஞ்சான்களாக பிறக் கின்றன. இந்தியாவிலுள்ள 60 சதவிகித தாய்மார்களுக்கு குழந்தை ஈன்று பாலூட்டி வளர்க்க போதிய ஊட்டச் சத்தும் இல்லை. இந்தியாவின் உணவு - தானிய - சத்துணை வுப் பொருள் உற்பத்தி பெருமளவிற்கு மேட் டுக்குடி கும்பலின் சந்தைக்கானதாக மாற்றப் பட்டுள்ளதன் விளைவே இக்கோரங்கள்!

உழைப்பாளி வீட்டுக் குழந்தைகளுக்கு குடிக்க பாலில்லா விட்டாலும் பரவா யில்லை; மேட்டுக்குடி குழந்தைகள் விரும்பி சுவைக்கும் கேட்பரீஸ் சாக்லெட்டிற்கு பாலில்லாமல் போய்விடக் கூடாது என்பது மட்டுமல்ல; அதன் தரம் சுவை கூட கெட்டு விடக் கூடாது என 'எச்சரிக்கை'யாய் இருக் கிறார்கள். கேடுகெட்ட இந்நிலை கேட்பா ரற்று தொடர்கிறதே! எவ்விதத்தில் சரி?



